Regd. No. M. 2569

206
1236

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 8

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 7

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ரபீஉல் ஆகிர் மீ
1937ஆம் ஜூலை மீ

OFFICE OF THE REGISTRAR ... 12 OCT 1937

1. அல்குர்ஆன் ... 145
2. அல்ஹதீது ... 147
3. மார்க்க கல்வி ... 149
4. நமது தொழுகை ... 152
5. இஸ்லாம் மதத்தின் சில விசேஷத்துவங்கள் ... 155
6. சில மலர்ந்த புஷ்பங்கள் ... 158
7. இம்மையிற் பிரியர் ஆனால் மறுமையிற் [illegible]பர் ... 160
8. முஸ்லிம்களும் வியாபாரமும் ... 162
9. ஓநாயும் ஆடும் ஒன்றாய் மேய்ந்தன ... 166
10. புத்தகாலய இயக்கம் ... 175
11. யுத்த தர்மம் ... 181
12. மௌலானா ரூமி (ரஹ்.) ... 184

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	... ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	"	4 0 0
தனிப் பிரதி	... "	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

[Library stamp] 309434
OFFICE OF THE REGISTRAR ... 12 OCT 1937 ... MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1356 ரபீஉல் ஆகிர் மீ 1937ஹு ஜூலை மீ	இதழ் 7

அல் குர்ஆன்

உங்களில் அழகான நல்ல அமல் செய்பவர்யார், என்பதை பரீக்ஷித்துப் பார்ப்பதற்காக அல்லாஹ்தஆலா மரணத்தையும் ஜீவிப்பையும் படைத்தான். (திருகுர்ஆன்)

முஸ்லிம் சோதரீர்! அல்லாஹ்தஆலா இவ்வுலகை எதற்காக உண்டாக்கினான்; மனிதனை எதற்காகப் படைத்தான்; உலகில் மரணமும் ஜீவிப்பும் துயர்படியாய் என் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? என்பன போன்றது உங்கள் மனதில் சதா ஊசலாடிக் கொண்டே யிருக்கும். மேலே கூறப்பட்டுள்ள ஆயத்தில் அல்லாஹ்தஆலா இவைகளுக்கு தக்க பதில் கொடுக்கிறான். அதாவது, மக்களில் நல்ல அமல் செய்பவர் யார்; கெடுதிகளைப் புரிபவர் யார் என்பதை பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகத்தான் மரணத்தையும், வாழ்க்கையையும் உண்டாக்கியதாக அல்லாஹ்தஆலா அறிவிக்கின்றான். ஆகவே உலகவாழ்க்கையின் இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்கு இந்த ஆயத்து மிகப் பிரதானமா யிருக்கிறதென்பது நன்கு புலனாகின்றது. எனவே நீங்கள் நல்ல அமல் செய்கின்றீர்களா? அல்லது கெடுதி புரிகின்றீர்களா வென்பதைத்தான் அல்லாஹ்தஆலா பரிசோதித்துப் பார்க்கிறான். நீங்கள் நல்ல அமல் புரிவீர்களாயின் உங்களுக்கு நன்மாறாய முண்டு; நீங்கள் பரீக்ஷையில் நல்ல வெற்றி பெற்றுவிட்டீர்கள். நீங்கள் கெடுதி புரிவீர்களாயின் உங்களது வாழ்க்கை பாழடைந்ததாகி விடுகிறது; அல்லாஹ் தஆலாவின் கிருபை என்னும் வாயலை உங்கள்மீது அடைத்துக் கொள்கிறீர்கள்.

அல்லாஹ்தஆலா சகல விஷயங்களையும் தெரிந்தவனாக விருந்தும் தன் அடியார்களை எதற்காகப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டுமென, அநேகர் கருதக்கூடும். ஆனால் இவ்வாறு கூறுவது பரீக்ஷையின் கருத்து யாதாகுமென்பதை நன்கு தெரிந்து கொள்ளாமையேயாகும். அல்லாஹ்வின் பரீக்ஷையென்பது அவனது சன்மார்க்கமாகும். அல்லாஹ்தஆலாவால் நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காருண்யமும், ஒவ்வொருகட்டளையும் தனித்தனியான பரீக்ஷையாகும். எனவே உங்களுக்கு அல்லாஹ்த ஆலா

வால் கொடுக்கப்பட்டுள்ள சுய அறிவைக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளையைச்சிறமேற்ருங்கி நடக்கின்றீர்களா; அல்லது அதற்கு மாற்றஞ் செய்கின்றீர்களா வென்பதை பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகத்தான் அல்லாஹ்தஆலா மரணத்தையும் ஜீவிப்பையும் உண்டாக்கி யிருக்கின்ருன். உதாரணமாக, அல்லாஹ்தஆலா தொழுகையை நிறைவேற்றும்படியும், நோன்பு நோற்குமாறும், ஜக்காத்தின் முதல்களைச் செலவிடுமாறும், சக்தி பெற்றிருந்தால் ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டுமென்றும், எழை வலியோர்களுடன் அழகான முறையில் நடந்து கொள்ளும்படியும், அயல் பாகக்காரர்களுடன் நன்றி புரியும்படியும், பெரியார்கட்கு மரியாதை செய்ய வேண்டுமென்றும், கஷ்டம் சங்கடத்திலகப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உதவி புரியவேண்டுமெனவும், உண்மையை உறைக்க வேண்டுமெனவும் கட்டளையிடுகின்ருன். இக்கட்டளைகளிலொ வொன்றும் மனிதன் புரியும் காரியங்களை அளவிட்டுப் பார்க்கும் உரைகல்லாக அமைந்திருக்கிறது. எனவே நீங்கள் உலகின் அபிலாசைகளில் மூழ்கி தொழுகையை நிறைவேற்ருது விட்டுவிடுவீர்களாயின் நீங்கள் பரீக்ஷையில் தேர்ச்சி பெருது தோல்வியடைந்தீர்களெனக் கருதிக் கொள்ளுங்கள். நீங்கள் பேராசையின் காரணத்தால் உண்மையை மறைத்து பொய்சாக்ஷி சொல்வீர்களாயின் உங்களுடைய இஸ்லாம் உறுதியானதாகவில்லை எனக் கருதிக்கொள்ளுங்கள். நீங்கள் சந்தோஷம் துக்ககரமான காரியாதிகளில் ஜாதிக் கட்டுப்பாடு சமூக பழக்க வழக்கம் இவைகளை முதன்மையாகக்கொண்டு சன்மார்க்கத்தைப் புறக்கணிப்பீர்களாயின் உங்கள் பாதம் நேருன பாதையிற் செல்வதைவிட்டு வழிசறுகி விட்டதென கருதிக்கொள்ளுங்கள். இவ்வுலகில், உண்மைக்கும் பொய்க்கும் யுத்தம் நிகழ்பெறுகின்றது. எக்காலத்திலும் ஒவ்வொரு மனிதனும் உண்மை எதார்த்தத்துடன் நடக்க முயற்சிக்கிருன். ஆனல் பொய்யன் அதற்குமாறு செய்ய முற்பட்டு அந்த எதார்த்த வாதிக்கு கஷ்டம் கொடுக்க முற்பட்டு, அவனுக்குப் பலவாருன தொந்திரை யிழைக்கின்ருன். ஆனல் இஸ்லாத்தின் உண்மை அடியார்கள் உடல், பொருள் ஆவி இம்மூன்று வஸ்த்துக்களுக்கு மேற்படும் அளவற்ற கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு எதிரிகளின் தாக்குதல்களை பொருட்படுத்தாது உண்மை நேர்வழியின்மீது ஸ்திரமாக நடந்து செல்லுகின்றனர். இதனல் இன்ஞேர் அல்லாஹ்வின் 'றஹ்மத்' என்னும் கிருபைக்கு பாத்தியஸ்தர்களாகி விடுகின்றனர். ஆனல் இன்ஞேர் தங்களுக் கேற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு பயந்து உண்மையினின்று வெளிச்சென்று விடுவார்களாயின், அவர்கள் ஈமான்கொண்டு இஸ்லாத்தைப் பின்பற்றி நடப்பதாய் வாயளவில் கூறுவது கொண்டு எவ்விதப் பிரயோசனமு மேற்படமாட்டா தென்பது திண்ணம்.

சோதரீர்! இக்காலை நம் முஸ்லிம் சோதரர்களில் ஈமானின் உறுதி, பலம் குன்றிப்போயிருக்கிறது. முற்காலத்தைய முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கட்டளைக்கு வழிப்படுவதில் தூக்கு மரத்தி லேற்றப்படுவதையும் பயந்தார்களில்லை. ஆனல் நாமோ சிறிய கஷ்டமேற்படுவதாக விருந்தாலும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அபரிமித பிரயத்தனப்படுகிருேம். இக்காலத்தய முஸ்லிம்கள் யாதொரு கஷ்ட சங்கடமேற்படாது, காசு பணம் செலவிடாது, சாப்பாட்டுக் காரியங்களில் மாறுதலேற்படாது, யாருடனும் பகைத்துக் கொள்ளாது வீட்டில் உட்கார்ந்தவாறே இரு உலகவாழ்க்கையையும் பெற்றுய்ய வேண்டுமெனக் கருதுகின்றனர். மக்களின் இவ்வெண்ணந்தான் அவர்களது முழு தாழ்மைக்கும் காரணமாகவிருக்கிறது. இதுவரை இவ்வுலகில் எந்தவர்க்கத்தாரும் கஷ்ட நஷ்டங்களை அடைந்து தியாகஞ் செய்யாது முன்னேற்றமடைந்ததாக நாம் கேள்விபட்டது கிடையாது. இனி அவ்வாறு ஏற்படுமென எதிர்பார்ப்பதற்குமில்லை. வர் ஓட்டாது தானிய விளைவை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? எனவே மனிதன் உண்மையைப் பின்பற்றி நடந்து அதற்குள்ள சன்மானத்தைப் பெற நாடுவானுகில், அவன் நேர்வழியில் ஒன்றன்பின் ஒன்ருக அநேக தியாகங்கள் செய்யும்படி ஏற்பட்டுவிடும்.

"முஸ்லிம்காள்! அல்லாஹ் நாடுவானுகில் நீங்கள் யுத்தம் புரியாமலே காபிர்களிடமிருந்து பகரம் வாங்கிவிடுவான். ஆனல் அவன் அவ்வாறு நாடவில்லை. முஸ்லிம்கள் காபிர்களிடம் யுத்தம் புரிவதை பரீக்ஷித்துப்பார்க்க வேண்டுமென்பதை நாடுகின்ருன்" என அல்லாஹ்தஆலா அறிவிக்கின்ருன்.

சத்தியத் தூதர் முஹம்மது நபீ (ஸல்) அவர்களை விட அல்லாஹ் தஆலாவால் ஒப்புக் கொள்ளப்பட்டவர் யார் இருக்கின்றனர்?

அவர்களும் ஆரம்பத்தில் அநேக பற்பல வித மான கஷ்ட நஷ்டங்களை அடைந்தார்கள்; பசி யுடை நேரங்களில் வயிற்றில் கற்களை வைத்து கட்டியிருந்தார்கள்; பகைவர்களுடன் யுத்தம் புரிந்தார்கள்; அகிழ் வெட்டினார்கள்; போர் களத்தில் முன் வந்தார்கள்; குளிர் தாகம் பசி முதலிய கஷ்டங்களை சகித்துக்கொண்டார் கள்; பகல் முழுதும் யுத்தம் செய்து அநேக நண்பர்களையும் உற்றார் உறவினர்களையும் இழந்த துடன் தாங்களும் காயப்பட்டுப் போனார்கள். அருமைப் பல்லும் விழுந்து விட்டது. இதற் குப் பல வருடங்களுக்குப் பின் சஹாபாக்கள் காபிர்களைஜெயித்தார்கள். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் அருமை சஹாபிகளும் வாளைக் கொண்டு யுத்தமும் செய்தார்கள்; தொழுகை யும் நிறைவேற்றினார்கள்; பிரார்த்தனையும் புரிந்தார்கள்; இன்னுயிர்களை தியாகமுஞ் செய்தார்கள். ஆனால் நாமோ, பிரார்த்தனை யால் மட்டும், தொழுகையை நிறைவேற்றுவத லால் மட்டும், வாய்ச் சொல்லால் மட்டும் எதிரி களின் பலங்களைக் குறைத்து அவர்களை ஜெயித்துவிட நாடுகிறோம். இவை ஒருக்காலும் முடியாதென்பது நிச்சயம். இது அல்லாஹ் வின் சட்டத்திற்கும் விரோதம். எனவே முஸ்லிம்களாய நாம், நபிகள் திலகம் (ஸல்) அவர்களது முன்மாதிரியை மறந்து கஷ்டம் சங்கடத்திலிருந்து விரண்டோடி மரியாதை, ஜெயத்தைப்பெற்றுக்கொள்ள நாடுகின்றோம். ஆனால் அல்லாஹ், றஸூல் இவர்க ளுடைய தீர்ப்பு இதற்கு மாறுபட்டிருக் கிறது.

"முஸ்லிம்காள்! நீங்கள் உயிர், சொத்து இவ்விரண்டுவகையிலும் பரீக்ஷிக்கப்படுவீர் கள்; நீங்கள் யூதர், கிறிஸ்தவர், முஷ்ரிக் இவர்களால் பலவாறான கஷ்டங்களை அடையும் படி நேரிடும். அதுபொழுது நீங்கள் பொறுமை யைக் கைகொண்டு அல்லாஹ்வை பயந்து நேரான பாதையில் உறுதியாக இருங்கள்! அதனால் நீங்கள் நிச்சயமாக தைரியவான் களாய்க் கருதப்படுவீர்கள்."

இந்த ஆபத்தினாலும், முஸ்லிம்கள் பரீக்ஷிக் கப்படவேண்டும்; அவர்கள் தியாகம் செய்ய வேண்டும்; கஷ்டங்கள் மீது 'சப்ர்' செய்ய வேண்டும்; அதற்குப் பின்புதான் அன்னோர் ஈமானின் வாரிஸ்காரர்களாக வேண்டும் என்பது அல்லாஹ் தஆலாவின் விருப்பம் என்பதாக தெரிந்துகொள்கிறோம். முஸ்லிம்களில் தியா கஞ் செய்யும் தன்மை நீங்கி சுயநலம் குடி கொண்டிருப்பதின் பயனாக உலகின் கண் ணுள்ள சகல ஜாதியாரும், வகுப்பினரும் அன் னோரை கேவலமாகவே மதிக்கின்றார்கள். துர் அதிர்ஷ்ட வசமாக நம்பில் இதுபொழுது தியாகஞ் செய்யும் உணர்ச்சியில்லாது பெயரள வில் மட்டும் நாம் முஸ்லிம்களாக விருக்கிறோம். இவ்வுண்மையை நாம் நன்குணர்ந்து கஷ்டம், நஷ்டமடையாது இம்மை மறுமைப் பதவிகளை எவ்வகையிலும் அடைய முடியாதென்பதை தெரிந்துகொள்வோமாக.

148/146
17

அல்ஹதீது

"தன் சுயப்பிரயாசையால் சம்பாத்தியஞ் செய்ததைக் கொண்டு சாப்பிடுபவன் கியாமத் நாளில் சாலிஹான நல்லடியார்களுடனிருப்பான்" என நபிகள் திலகம் சத்தியத் தூதர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் இந்தஹதீதைவிரித்துரைக்குங்கால், சன் மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள காரியாதிகளைத் தவிழ்ந்து பிரயாசையோடு சம்பாத்தியத்தி லீடுபட்டு ஜீவனஞ் செய்வது மேலான வணக்க மாகுமெனவும், தன் மீது கடமையாகவுள்ள வர்களுக்குக் கொடுப்பதற்காகவும், ஹலாலான வஸ்துக்களினின்று தன் வயிற்றை நிறப்பிக் கொள்ளவேண்டுமெனவும் சம்பாத்தியத்தி லீடுபடுவன் அல்லாஹ்வின் சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தவனெனவும் கூறியிருக்கின் றார்கள்.

நபிகள் திலகம் சத்தியத் தூதர் (ஸல்) அவர்கள் இதரர்களிடம் அறுதிமானம் வாங்குங் காலை அனீதி அதிக்கிரமம் புரிவதில்லையென்றும், சன்மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள விதத்தில் சம்பாத்தியஞ் செய்து ஜீவனம் செய்வதில்லை என்றும் வாக்குறுதி வாங்குவார்கள். இவ்வாறு ஹலாலான விதத்தில் சம்பாத்தியஞ் செய்வதற்கு நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், ஓர் பிரத்தியேக அந்தஸ்தளித்திருந்தார்கள். அதற்காகத்தான் சங்கை வான்களாய சஹாபாக்காள் ஒவ்வொரு நாளும் 8 அல்லது 10 மணி நேரம் கஷ்டப் பிரயாசையுடன் வேலை செய்து தங்கள் ஏழை சகோதிரர்களுக்கும் அங்கஹீனமடைந்தவர்களுக்கும் உதவி புரிந்து வந்தார்கள். ஆகவே நம் நேயர்கள் சீரிய இம் முன்மாதிரியைப் பின் பற்றி நடக்க கங்கணங்கட்டவேண்டியது அவசியமல்லவா?

"அநியாயம் நாசமாக்கி விடுகிறதேன்பதை அறிந்து கொள்ளுங்கள்! அநீதி செய்யப்பட்டவனது பிரார்த்தனையினின்றும் பயந்து கொள்ளுங்கள்! அவனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையில் எவ்வாறான திரையுமில்லை என்பதிற் எவ்வித சந்தேகமுங் கிடையாது." என நபிகள் திலகம் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்ததாக ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு மாலிக் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் இந்த ஹதிதை விரித்துரைக்குங்கால், அநீதியென்பது மன்னிப்பு அளிக்கப்படாத ஒரு பாவமாகுமெனவும், கஷ்ட சங்கடத்திலகப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கு உதவி புரியாமலும் அவன்மீது கிருபை கொள்ளாமலுமிருப்பது மானிடத் தன்மைக்குப் புறம்பானதெனவும், மிருகத் தன்மையுடைய காரியமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

சத்திய இஸ்லாம் மார்க்கம் அநீதி புரிவதை மாபெரும் பாவகாரியமெனவும், அநீதி புரிபவனை மானிடர்களில் மகாக் கொடியவனெனவும் தீர்ப்பளித்திருக்கிறது. அநீதி செய்யப்பட்டவனுக்கு உதவி புரியவேண்டியதை ஒவ்வொரு மக்கள்மீதும் முதன்மையான கடமையாக ஆக்கிவைத்திருக்கிறது.

மனிதன் சாப்பாட்டி லீடுபட்டிருக்கும் போதோ, அல்லது நபில் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் போதோ மற்றவன்மீது அநீதி புரியப்படுவதைக் கேள்விப் படுவானாகில் அவன் இதர காரியங்கள் யாவற்றையும் விட்டு ஒரு வினாடியும் பிந்தாது அவனுக்கு உதவி செய்வதி லீடுபடவேண்டியது இவன்மீது முதன்மையான கடமையாகுமென ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ (ரஹ்.) கூறியிருக்கிறார்கள். இதற்காகத்தான் "அநீதி செய்யப்பட்டவன் 'ஆஹ்' என்று சொல்வதினின்று தவிழ்ந்து கொள்ளுங்கள்; அவனுடைய பிரார்த்தனை அதிசீக்கிரம் ஒப்புக்கொள்ளப்படுகிறது" என நம் சன்மார்க்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"யான் மிகுதமாய் வியாபாரத் தோரணையில் பிரயாணஞ் செய்துவரும்வழக்க மிருந்ததால் ஒருமுறை நபிகள் திலகம்சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களை நோக்கி, யான்சதாவும் பிரயாணஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பமேற்படுவதால் வானம் பூமி இவைகளினால் ஏற்படும் ஆபத்து கெடுதிகளைவிட்டு யான் தப்பிக் கொள்வதற்கான ஒரு துஆவை எனக்குக் கற்றுக் கொடுங்களென நான் வினவியபோது, நீங்கள் பிரயாணஞ் செல்வீர்களாயின் "அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பம்; யான் அல்லாஹ்வின்மீது நம்பிக்கைகொண்டு செல்கின்றேன்; யாஅல்லாஹ்! எல்லா கஷ்ட சங்கடங்களினின்று உன்னிடம் கார்மானம் தேடுகின்றேன்" என்னும் துஆவை ஓதுங்களென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் எனக்குக் கூறினார்கள்" என ஹஸ்ரத் அப்துற்றஹ்மான் (றலி.) அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் இமாம் சாலிஹ் ஜஸாயிரி (ரலி.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், இது பிரத்தியேகமான விசேஷத் தன்மை பொருந்திய ஓர் துவாவாகும். இது முழுபக்தி விசுவாசத்தோடு ஓதப்படுமாகில் பெரும் பிரயோசனமளிக்கக் கூடியதாக விருக்கிறது. யான் பன்முறை இந்த துஆவை ஓதிப் பிரயாணஞ் செய்ததில் வெற்றிப் பெற்றுத் திரும்பியிருக்கிறேன். இதுவன்றி இந்த துஆவின் மகத்தான ஓர் பிரயோசனம் யாதெனில், இந்த துஆவை ஓதுபவன் இதன் அர்த்தம்கருத்துகளை நோட்ட மிடுவானாகில் அல்லாஹ்தஆலாவின் வலுப்பம், அடக்கி ஆளும் தன்மை இவைகள் இவனது மனதில் நன்கு பதிந்து விடுகிறது; அல்லாஹ் தஆலாவின் கிருபையின்மீது நம்பிக்கை கொண்டவனாய் விடுகின்றான்.



மார்க்க கல்வி

உலகில் எத்தனையோ பெரியார்கள் தோன்றி மறைந்தனர்; இப்பொழுது மிருக்கின்றனர்; இனிமேலும் தோன்று வர். இவ்வுண்மையை எவரும் மறுக்க முடியாது. இவர்களது வாழ்க்கை நிகழ்ச் சிகளை நாம் ஊன்றிக் கவனிக்கப் புகின் இவர்களிற் பலர் இளமையிலேயே மாதா பிதாக்களால் நன்கு பயிற்று விக்கப்பட்டவர்களாகவோ, மாதா பிதாக் களை இழந்து இறைவனுதவியால் இயற் கையாகவே பயின்றவர்களாகவோ இருப்பர். பெரியவர்களான பின்னர் உலகப் போக்கையும், உயரிய நோக்கங் களையும் உணர்ந்து தங்களைத் திருத்திக் கொண்டவர்கள் வெகு சிலரே ஆவர். அவ்வெகு சிலருக்கும் ஏனைய பெரியார் களுக்கு இருந்துவருகிற அத்துணை ஆதரவும், செல்வாக்கும், பிரபல்யமும் இல்லை என்று கூறினல் அதனை ஒரு வரும் மறுக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். ஹஜ்றத் மூஸா (அலை) அவர்கள் பிறந்த பொழுதிலேயே மாதா பிதாக்களை விட்டுப் பிரிந்து வசிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஹஜ் றத் இப்ராஹீம் (அலை) அவர்களும் மனித ருடைய பழக்கத்தை விட்டுகாட்டில் தன்னந்தனியே வசிக்க வேண்டியதா யிருந்தது. ஹஜ்றத் ஈஸா (அலை) அவர் கள் பிதாவின்றியே பிறந்தவர்கள். ஆத லில், பிதாவின் வாஞ்சை எவ்வா றிருக்குமென்பதையே தெரியாதவர்கள். எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களோ கருவிலிருக்கும்போதே கருத்துள்ள தந்தையையும், பிறந்த பின் சில வருஷங்களுக்குள் பிரிய மாதாவை யும் இழந்தார்கள். மெய்ஞ்ஞானிகளின் தலைவரான ஷம்ஸுல் ஆரிபீன் ஹஜ் றத் ஸெய்யிதுனு வஷெய்குனு அப்துல் காதிர் ஜீலானி (றஹ்.) அவர்களும் இள மையில் தந்தையை இழந்தவர்களே. வை தீக சம்மந்தமான பெரியார்களென்ன? லௌஹீக சம்மந்தமாகப் பெரியார்க ளென மதிக்கப்பட்டு வந்தவர்களும் கூட அநேகமாக இவ்வித நிலைமையிலேயே இருந்திருக்கிறார்கள். இந்திய முஸ்லிம் களின் ராஜியத் தலைவராக இருந்தவ ரான மௌலானு முஹம்மத் அலியுங் கூட இளமையில் தந்தையின் பரா மரிப்பிலிருந்தவர்களில்லை.

எல்லாம் வல்ல இறைவன் இப்பெரி யார்களுக்கு இயற்கையிலேயே அறி வாற்றல்களையும் நுண்ணிய அறிவுகளை யும் அளிக்கிறான் என்பது உண்மை யாகவே இருந்த போதினும் இவ்வுலகில் நிகழும் சகல காரியங்களுக்கும் புறத் தில் ஏதேனும் ஒரு காரணம் இருந்து வருவதை யாவரும் அறிவர். இப்பொது விதிக்கேற்ப இப்பெரியார்களிற் சிலர் தங்கள் மாதாக்களாலேயே பராமரிக்கப் பட்டு வந்திருக்கின்றனர். ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் பெற்றோரிருவ ரையும் விட்டகன்று பிர்ஔனின் மாளி கையில் வளர்ந்தார்களாயினும் பால் கொடுக்கும் செவிலித்தாய் என்ற முறை யில் அவர்களைப் பெற்றெடுத்த மாதா ஒழுக்கங் கற்று வந்தார்கள். ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களை அவர்களது அன்னை மர்யம் ஸித்தீக்கா (றலி.) அவர்

கள் பராமரிப்புச் செய்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை ஹுனைனில் வசித்த அவர்களது செவிலித் தாயான ஹலீமா ஸஅதிய்யா (றலி.) அவர்களும் பெற்றெடுத்த தாயாகிய ஹஜ்றத் ஆமினு அவர்களும் ஆரம்ப வருஷங்களில் அரவணைத்து வந்தார்கள். இவ்விதமாக மக்களின் முன்னேற்றத்திற்கு மாதாக்கள் பெரும் பங்காளிகளாகித் தொட்டில் பிள்ளைகளாக இருக்குங் காலத்திலேயே அவர்களைத் தக்கவாறு பயிற்றுவிக்கின்றனர். நிற்க, கஸஸுல் அன்பியா அதாவது வலிமார்களது சரித்திரங்கள் என்ற நூல்களைப் படிப்பவர்கள், சில வலிமார்கள் தொட்டிப் பிள்ளைகளாக இருந்த காலத்திலேயே திரு குர்ஆனை மனனமாகப் படித்துணர்ந்திருந்ததாகவும், சிலர் 5 அல்லது 7 வயது நிறம்புவதற்குள் திரு குர்ஆனை நன்கு பார்த்து ஓதக் கற்றுக்கொண்டதாகவும், சிலர் மனனம் செய்திருந்ததாகவும் தெரிந்துகொள்வர். எனவே, திறமையுள்ள, நல்லகுலத்து ஸ்திரீகளான மாதாக்களே தங்கள் செல்வர்களை மடிப்பிள்ளைகளாக இருக்கும் கால முதல் தெய்வ பக்தியிலும், மார்க்க அபிமானத்திலும், மார்க்கக் கல்வியிலும், மார்க்க நெறி வழுவாமல் நடப்பதிலும் பயிற்றுவித்தமையான் அவர்கள் பிற்காலத்தில் உலகின் மக்களுக்கு வழி காட்டிகளாகவும், சீர்திருத்த வாதிகளாகவும் திகழ்ந்தார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம்.

எனவே, நாஸ்திகமும், இல்ஹாதும் வேரூன்றிவரும் இக்காலத்தில், நஞ்சிறூர்களை இத்தொத்து நோய் பீடிக்காமற் காக்க வேண்டுமாயின் நாம் நமது மூதாதையரையும் அவர்களது மாதாக்களையும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். நமது மூதாதையரைப் பின்பற்றி நமது தாய்மார்கள் தங்கள் மக்களைத் தொட்டிலிலேயே மார்க்கக் கல்வியில் பயிற்றுவிக்கத் தொடங்கி இளமையில் மார்க்கானுஷ்டானங்களைச் சரிவர நிறைவேற்றி வரும்படியாக அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும்.

இதனைக் குறித்துத் தான் "இளமையிற் கல்" என்றூர் ஒருவர். ஏனெனில், சிறுவர்களது உள்ளமானது களங்கமற்றதாகவும், மாசற்றதாகவும் இருந்து வருகிறது. அதுபோழ்து அவர்களது உள்ளங்களில் படிவதுதான் அவர்களது பிற்கால வாழ்விற்கு மிகவும் பெருங் காரணமாக இருந்து வருகிறது. இதனைக் குறித்து எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், "ஒவ்வொரு சிசுவும் நேர்வழியின் பேரிலேயே பிறக்கின்றன; அவர்களது பெற்றோர்கள் அவர்களை யூதராகவோ, மஜூஸியாகவோ, கிறிஸ்துவராகவோ ஆக்குகின்றனர்" என்று கூறி இருக்கிறூர்கள். இது முற்றிலும் உண்மை என்பதை யாம் மேலே கூறிய சில உதாரணங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எனவே, நமது மக்கள் நல்லோர்களாகவும், மார்க்கபக்தி நிறைந்தவர்களாகவும், மார்க்கநெறி வழுவாது நடப்பவர்களாகவும் இருப்பதைப்பார்க்க நாம் உண்மையாகவே விரும்புவோமாயின் நமது சிறூர்களது களங்கமற்ற, மாசற்ற இருதயங்களில் பல்வேறு எண்ணங்களும் கொள்கைகளும் படிவதற்கு முன் அவர்களுள்ளத்தில் மார்க்கக் கொள்கைகளும், மார்க்க பக்தியும் உண்டாகும்படிச் செய்வ தவசியமாகும். தந்தையர்கள் தங்கள் சிறூர்களைக் கல்விச்சாலைக்கனுப்ப முடியுமாயினும் அவர்களை எந்நேரமும் கவனித்துக் கொண்டிருக்கவியலாது. ஆதலால், தாய் மார்களும் இதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, பெற்றோரிருவரும் ஏகோபித்துச் செய்யும் முயற்சியின் பேரில் சிறுவர்களும் சிறுமிகளும் தங்களது ஆரம்ப வயதில் மார்க்கக்கல்வியைப் பயின்று சன்மார்க்க நெறிகளைக் கடைப்பிடித் தொழுகுபவர்களா யிருப்பார்களாயின் அப்புறம் அவர்கள் புறநாட்டுக்

கல்விகளைக் கற்பதால் இஸ்லா மத தர்ம நெறிகளை விட்டுவிலகாமலும், இஸ்லாமிய நல்லொழுக்க நன்னடக்கைகளை விட்டு வழுவாமலு விருக்க மிக ஹேதுவாகும்.

துர் அதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் அந்நிய பாஷை தலைவிறித்தாடுவதாலும், மார்க்கக் கல்விக்கு இருக்கவேண்டிய செல்வாக்கு இல்லாதிருப்பதாலும், முஸ்லிம்களுள் வறுமை குடிகொண்டிருப்பதாலும் பெற்றோர்கள் தங்கள் குமாரர்களை மார்க்கக் கல்வியிற் பயிற்றுவிப்பதைப் பார்க்கினும் லௌகீகக் கல்வியிற் பயிற்று விப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்த வாரம்பித்துள்ளனர். இதன் பயனாய் பிள்ளைகள் தங்கள் ஆரம்பக் காலத்தில் லௌகீகக் கல்வி கற்றுக்கொள்ளும்படி அனுப்பப் படுகின்றனர். அக் கல்விக்குரிய பெரும்பாலான புத்தகங்களில் அந்நிய மதத்தின் ஒழுக்கங்களையும், அந்நிய ஆசாரங்களையும் பற்றிச் சிலாகித்தெழுதப்பட்டிருப்பதாலும், உபாத்தியாயர்களிற் பெரும்பாலார் முஸ்லிமல்லாதாராவே இருப்பதாலும் அவர்களிடம் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களது மாசற்ற உள்ளங்களில் அந்நிய சமூகத்தினரின் ஆசாரங்கள் மீது பற்றுதலும், ஒழுக்கங்களின் மீது விருப்பமும் ஏற்பட்டு விடுறது. இவ்விதமாக லௌகீகக் கல்விப் படித்து முடிந்த பிறகு அம் மாணவர்களுக்கு இஸ்லாம் மதத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அக்கரை ஏற்படுதுவமில்லை, அக்கரை ஏற்பட்டாலும் அவர்களுக்கு அதிகவயதாகி விடுவதால் தொழில் முறைகலீடுபட வேண்டிய நிர்ப்பந்த நிலைமை யுண்டாகி விடுகின்றது. இதனால், நம்மவரில் படித்த வகுப்பினரிடை மார்க்க பக்தி, மார்க்காபிமானம் ஆகியவைகள் குறைந்துவிடுகின்றன. அந்நிய மதத்தினருடன் அதிகம் பழகியதன் காரணமாக மார்க்கானுஷ்டானங்களற்றவர்களாகவுமாகி விடுகின்றனர். இதனால், மார்க்கப் புரட்டர்களுடையவும் நாஸ்தீகர்களுடையவும் நயவஞ்சகப் பிரசாரங்களை மெய்யெனநம்பி 'முல்ஹிது'களாகவும் 'காபிர்'களாகவுமாகிவிடுவதற்குரிய கொள்கைகளுள்ளவர்களாகி விடுகின்றனர். அவர்களது இந்நிலைமை அவர்களுக்குத் தெரியாததால் அவர்களைப் பற்றிக் குற்றங்குறை கூறும் ஆலிம் உலமாக்களையும், மார்க்க பக்தர்களையும் குறுகிய புத்தியுள்ளவர்களென்று தூஷிக்கவும் ஏளனஞ் செய்யவும் தொடங்குகின்றனர். எனவே, நமது முஸ்லிம் சமூகம் புத்துயிர் பெற்றுஏனைய சமுகத்தினரைப்போல் முன்னணிக்கு வரவேண்டுமாயின் அவர்களிடம் மார்க்கக் கல்வியும் மார்க்கானுஷ்டங்களும் நிறம்ப இருக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். இதற்குதவியாக உண்மை முஸ்லிம்கள் உபாத்தியாயர்களாக ஏற்படவேண்டும். இஸ்லாம் மத ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் போதிக்கும் புத்தங்கள் பாடப்புத்தகங்களாக ஏற்படல் வேண்டும். "இளமையிற் கல்" என்ற பழமொழிக்கேற்ப பெற்றோர்கள் தங்கள் சிறூர்களை ஆரம்ப வயதிலேயே மார்க்கக் கல்வியிற் பயிற்றுவித்து அப்புறம் லௌகீகக் கல்வியில் பயிற்றுவிக்க சிரத்தை கொள்ளவேண்டும். இல்லையேல் நாம் மேலே கூறியபடி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஹதீதுக்குப் பெற்றோர்கள் இலக்காக நேரிடும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் பெற்றோர்களுக்கு இவ் விஷயத்தில் அதிகம் சிரத்தை யுண்டாகும்படிச்செய்து நமது பின்னைய சந்ததியினர் மார்க்கபக்தியுள்ளவர்களாகவும், மார்க்கப்படி நடப்பவர்களாகவும் இருக்க அருள்புரிவானாக - ஆமீன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

நமது தொழுகை

அல்லாஹு தஆலாவின்மீது ஈமான் என்னும் நம்பிக்கை ஏற்பட்டு அவனது ஏக தெய்வத்தன்மையை உறுதி கொண்ட பின்னர் தொழுகையின் பாலிலேயே ஜனங்கள் அழைக்கப் பட்டனர். தொழுகைதான் முதலாவதாகக் கடமையாக்கப்பட்டது. இக்கடமையை நிறைவேற்றும்படி திருகுர் ஆனின் ஒவ்வொரு இடத்திலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. தொழுகையை நிறைவேற்றுபவர்களைப்பற்றி போற்றிப் புகழ்ந்து கூறி இருப்பதைக்கவனிக்குமிடத்து, இஸ்லாத்திற்கு விரோதியாகவுள்ளவர்களது இருதயங்களில் கூட தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்ச்சி ததும்பும் என்பதிற் சந்தேகமின்று. இக்கடமையை நிறைவேற்றுவதில் அசிரத்தையாயிருப்பவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற அச்சுறுத்தல்களையும் எச்சரிக்கைகளையும் கவனிக்சப்புகின், பெரும் பெரும்பலாட்டியவான்களது இருதய கமலம் நடுக்கங்கொண்டு விடுமென்பதில் ஐயமில்லை.

எந்த வஸ்து மிகவும் முக்கியமானதாக இருக்கிறதோ அந்த வஸ்துவைப்பற்றி அதன் முக்கியாம்சத்திற்குத் தக்கவாறு அச்சுறுத்தல்களும் ஆசை வார்த்தைகளும் கூறப்படுவது சகஜம். அல்லாஹு தஆலாவின் கட்டளைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்கப்புகும் போதுதான் தொழுகை எவ்வளவு முக்கியயாசமுள்ள தென்பது விளங்கும். இன்னும் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இத் தொழுகையின் மீது எவ்வளவு பிரியமும், ஆசையுமிருந்தது என்பதைச் சிந்தித்துப் பார்த்தாலும் இதன் முக்கியாம்சம் விளங்கும். தொழுகையானது ஏக வல்ல நாயனை வணங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வணக்கங்களில் முக்கிய வணக்கமாக இருப்பது மல்லாமல் அவனிடம் மனிதர்கள் நெருங்குவதற்கும் உயர்பதவிகளை அடைவதற்கும் முக்கியமானதொரு வழியாகவு மிருக்கிறது. அன்றியும், இவ்வொரு காரியத்திலுள் எத்தனை ஆத்ம வியாதிகளுக்குள்ள பரிகார முறைகளை மறைத்துவைத்திருக்கிறுன் என்பதை கணித்துரைக்க மனிதராலியலா தென்று கூறலாம். தொழுகையை நிறைவேற்றுவதால் உண்மை எஜமானனுக்குக் கீழ்ப்படிதல், நேரத்தின்முக்கியாம்சத்தை யுணர்தல், குறித்த காலந் தவறாமல் நடக்கும் பழக்கம், அகத் தூய்மை, இருதய சுத்தம், பொறுமை, சகிப்புத் தன்மை, பணிவு, பிறருடன் சேர்ந்து காரியங்களை நிர்வகித்தல், அவ்வக்காலத்திலுள்ள அரசர் அல்லது மார்க்கத் தலைவரைப் பின்பற்றுதல் முதலிய பல தன்மைகள் உண்டாகி விடுகின்றன. முஸ்லிம்கள் தங்களது கௌரவமும், அரசுரிமையும் தங்களை விட்டுச் சென்றமைக்காக வருந்துவதற்கு முன் இவ்வொரு காரியம் தங்களிலில்லாமற் போனமைக்காக கைசேதப்படுவது அவசியமாகும். இவ்வொரு காரியத்தின் பயனுகவே அவர்களிடம் கௌரவங்களும் அந்தஸ்துகளும், அதிகாரங்களும் ஏற்பட்டன. சுருதி சம்மந்தமான மேற்கோள்களைக் கவனியாது யுக்தியை மட்டிலும் உபயோகித்துத் தொழுகையின் தத்துவங்களைப் பற்றி மட்டிலும் சிந்தித்துப் பார்ப்பார்களாயின் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவோ இம்மை மறுமைப் பயன் களைப்பற்றி நற்செய்திகளைக் கூறவோ வேண்டிய அவசியமில்லை.

அவர்களைத் தொழுகும்படி நிர்ப்பந்திக்கவும், பலவந்தப்படுத்தவும்வேண்டிய அவசியமில்லாமலேயே அவர்கள் தாங்களாக வல்ல நாயனின் திருசமூகத்தில் பணிந்துவிடுவர். என்றாலும், சிலரிடமுள்ள ஷைத்தானிய உணர்ச்சியும், மிருகத் தன்மைகளும் அவர்களை இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்த விடுவதில்லை. அன்றியும், நாஸ்தீகத்துக்கு உச்சஸ்தானம் கிடைத்திருக்கிற இக்காலத்தில் மனித ஆத்மா ஒவ்வொன்றும் மதத்தின் பிணைப்பைவிட்டு விடுதலையடையவே விரும்புகின்றது. துர் அதிர்ஷ்டவசமாக முஸ்லிம்களிற் பெரும்பான்மையினர் இஸ்லாம் மதத்தின் அடிப்படையான சட்ட

வரம்புகளை முதுகுக்குப்பின்னால் போட்டு விட்டனர். இறுதியாக தொழுகை போன்ற முக்கிய கிரியைகளும்கூட சாமான்ய சமூக ஆசாரங்களேபோல் அவர்களுக்குத் தோன்ற வாரம்பித்து விட்டது. இதே காரணத்தினால்தான் இறைவனும் இந்த சமூகத்தினரை உலகில் முக்கியாம்சமில்லாத ஒரு சமூகமாக வைத்துள்ளான்.

இம்முக்கிய கடமையை அடியுடன் நிறைவேற்றாதிருப்பவர்களைப்பற்றி நாம் இதற்கு மேல் அதிகமாகக் கூறவிரும்பவில்லை. நிர்ப்பந்தத்தாலோ அல்லது வேறெக்காரணத்தாலோ ஏதோ ஒருவகையில் தொழுகையை நிறைவேற்றுபவர்களுக்கு ஒருவார்த்தைகூற விரும்புகின்றோம். அவர்கள் வணக்கம் என்ற முறையில் தங்கள்மீதேற்பட்டுள்ள ஒரு கடமையை நிறை வேற்றிவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர். எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தொழுகையுடனும், அவர்களைப் பின்பற்றிய கண்ணியவான்களான ஸஹாபிகளுடைய தொழுகைகளுடனும் இக்காலத்தைய தொழுகையாளிகளின் தொழுகைகளை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப்பார்த்து, இக்காலத்தவர்களது தொழுகைக்கு "தொழுகை" என்ற பெயரைக் கொடுக்கவேணும் தகுதி இருக்கிறதா என்பதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தொழுகையிலுள்ள முக்கியாம்சங்கள் சரிவர நிறைவேற்றப்படாமலிருந்தால் தொழுகை நிறைவேறாமற் போவது மட்டுமில்லாமல் புண்ணியத்திற்குப் பதிலாக வேதனையே கிடைக்கும் என்பதாக இமாம்களது அபிப்பிராய மிருந்துவருகிறது.

மேலும், தொழுகையாளிகளிலும் தொழுகையைக் காலாகாலத்தில் தவறாமல் நிறைவேற்றுபவர்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றனர். அவ்வாறு நேரத்திற்கு நேரம் தொழுகையை நிறைவேற்றுபவர்களிலும் இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றுபவர்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றனர். அதிர்ஷ்டவசமாக தொழுகையைத் தவறாமல் நேரப்படி நிறைவேற்றுவதிலும், இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றுவதிலும்ஆர்வமுள்ளகண்ணியவான்கள் அகப்பட்டுவிட்டாலும் இமாமைப் பின்பற்றுவதிலும், அதற்குரிய ஷர்த்துகளை நிறைவேற்றுவதிலும் பூரணமாக இருக்கக்கூடியவர்கள் அரிதினும் அரிதாகவே இருக்கின்றனர்.

"இமாமைப் பின்பற்றித் தொழுபவரான 'முக்ததி'யானவர் தமது இமாமுக்கு முதலில் தமது சிரசை ஸஜ்தாவிலிருந்து உயர்த்துவாராயின் அவரது முகத்தைக் கழுதையின் வடிவத்தில் அல்லாஹுதஆலா மாற்றி விடுவான் என்பதைப்பற்றிய பயம் அவருக்கில்லை" என்பதாக எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது திருநாவிலிருந்து அறிக்கையிடப்பட்டிருக்கிறது. பயங்கரமான இவ்வறிக்கையை அறியும் நம்மவர் ஒவ்வொருவரும் தங்களது நெஞ்சில் கையை வைத்து "நம்மில் எத்தனை பேர் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதில் நாயகம் (ஸல்.) அவர்களது கட்டளைப்படி நிறைவேற்றுகின்றனர்" என்பதைக் கவனிப்பார்களாக. ஒரு பக்கல் தங்களது தொழுகைகளையும் மற்றொரு பக்கல் ஹஜ்ரத் பராஉப்உஆஸிப் (றலி.) அவர்களது ரிவாயத்தையும் வைத்துச் சீர்தூக்கிப் பார்ப்பார்களாக. அந்த ரிவாயத்து வருமாறு:—

"நாங்கள் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குப் பின்னால் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். நாயகம் (ஸல்.) அவர்கள் நிலையிலிருந்து ஸஜ்தாவிற்குச் சென்றால் நாயகம் (ஸல்.) அவர்களது முபாரக்கான நெற்றியானது பூமியின்மீது வைக்கப்படும் வரையில் எங்களில் எவரும் ஸஜ்தாவிற்காகக் குனியமாட்டார்கள்."

இமாமைப் பார்க்கினும் முந்தித் தொழுகையின் கடமைகளைச் செய்யும் வழக்கம் ஒரு வகை வியாதியேயாகும். இவ்வியாதியில் இக்காலத்திலுள்ள பின்தொயர்வோரில் ஒவ்வொருவரும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களது அறியாமையினால் ருக்கூஉ, ஸுஜூது, நிலை முதலியவைகளில் இமாமைப் பார்க்கினும் முந்திச் செய்கின்றனர். இக்குற்றம் சாமான்யமான குற்றமன்று. இதனைச் செய்கிற தொழுகையாளி தம்முடைய அந்தத் தொழுகையையே பாழ்படுத்தி விடுகிறார். இதனைக் குறித்து இமாம் அஹ்மதுப்னுஹன்பல் (றஹ்.) அவர்கள் தமது "கித்தாபுஸ்ஸலாத்" என்னும் நூலில், இமாமைப் பார்க்கினும் முக்ததிகள் தொழுகையின் ருக்னுகளை முந்திச் செய்வது சம்மந்தமாகப் பின் வருமாறு கூறி இருக்கிறார்கள்.

"ஒரு மனிதர் தனது வீட்டில் இருக்கும்போது பாங்கு சொல்லும் சப்தத்தைக் கேட்டு தொழுகைக்காக அவசரமாக விரைந்து வருகிறார். அவருடைய இவ்வாயுத்தத்தின் நோக்கம் தொழுகை

ஒன்றைத் தவிர வேறொன்றுமில்லை. தவிரவும், தொழுகையாளரான இவர் இருளில் தொழுகைக் காகவே வீட்டைவிட்டு (மஸ்ஜிதுக்கு வருவதற் காக) வெளியேறுகிறார். மழையும் கொட்டுகிறது. அவரது கால்கள் வழுக்குகின்றன. அவரது உடை நனைந்து ஈரமாகிவிடுகின்றது. வெய்யிற் காலத்து இரவாக இருந்தால் சர்ப்பங்களின் பய மும் சேர்ந்து கொள்கிறது. அத்துடன் அவர் நோயாளியாகவோ அல்லது பலஹீனராகவோ இருக்கவும் கூடும். இவ்விதமான கஷ்டங் களிடையே பாங்குச் சப்தத்தைக் கேட்டதும் தொழுகையின்பால் அவர் கொண்டுள்ள பிரீதி யினால் மஸ்ஜிதுக்கு வருகிறார். தமது கஷ்டங் களையெல்லாம் மலர்ந்த முகத்துடன் சகித்துக் கொள்கிறார். ஆனால் (இமாமுடன் சேர்ந்து) தொழுகையை நிறைவேற்றுவதற்காக நின்றுவிட் டால் ஷைத்தான் அவரை மருட்டி விடுகின்றான். அதனால் அவர் ருக்கூஉ, ஸுஜூது முதலிய காரி யங்களில் இமாமுக்கு முந்தி அவைகளைச் செய்யத் தொடங்கி விடுகிறார். தொழுகையும் முடிந்துவிடுகிறது. தொழுகையாளி மஸ்ஜிதை விட்டு வீட்டுக்கு வெளியேறி விடுகின்றார். ஆனால், அவருடைய அந்தத் தொழுகை தொழு கையாக இருப்பதில்லை. ஷைத்தான் தனது நோக்கத்தில் வெற்றியடைந்து விடுகின்றான். இது எவ்வளவு ஆச்சரியகரமானது''

இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் (றஹ்) அவர் கள் கூறிய இவ்வுதாரணத்தை ஒவ்வொரு வரும் தம்முன் வைத்துக்கொண்டால் இமா மைப் பார்க்கிலும் முதன்மையாகத் தொழுகை யின் கடமைகளைச் செய்வது எவ்வளவு பெரிய குற்றமென்பதை உணரமுடியும். நங்காலத்தில் இமாமைப் பார்க்கினும் முந்தித் தொழுகிற குற்றம் ஒன்றுமட்டும் நிகழுவதில்லை. இன் னும் எத்தனையோ குற்றங்களை நம்மவர் செய்து விடுகிறார்கள். வரிசை ஸப்புகள் கோண லாக இல்லாமல் நேராக இருக்கவேண்டும், இடையில் காலி இடமிருக்கக் கூடாது, ருக்கூஉ, ஸுஜூதுகளைப் பூர்த்தியாக நிறை வேற்றவேண்டும் என்பனபோன்ற காரியங்களை ஒருவரும் நினைப்பதுகூட இல்லை. "நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில், ஸப்புகள் கோண லாக இல்லாமல் நேராக இருக்கின்றனவா? என்று ஹஜ்றத் பிலால் (றலி) அவர்கள் கவ னித்து வந்ததாக'' ஒரு ரிவாயத்து வந்திருக் கிறது. மற்றொரு ரிவாயத்தில் "ஸப்புகளில் முந்தியாவது பிந்தியாவது நிற்பவர்களது கால்களை ஹஜ்றத் பிலால் (றலி) அவர்கள் சவுக்கினால் அடித்துக் கொண்டிருந்தார்கள்''

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ருக்கூஉ, ஸுஜூதுகளைச் சரிவர நிறைவேற்றவேண் டும் என்பதைக் குறித்து நாயகம் (ஸல்) அவர் கள் மிகவும் கண்டிப்பாக எச்சரிக்கை செய்தி ருக்கிறார்கள்.

இஸ்லாம் மதம் மனிதர் மீது கடமையாக ஏற்படுத்தியதும், றஸூல் (ஸல்) அவர்கள் மிகப்பிரீதியுடனும் மகிச்சியுடனும் நிறை வேற்றி வந்ததும், ஒரு நேரம் தவறிப்போன தற்காக சங்கைவான்களான ஸஹாபிகள் அழு தழுது புரண்டதுமான தொழுகையை நிறை வேற்றுவதற்குரிய ஷர்த்துகளிரண்டொன் றைப்பற்றி இப்பொழுது நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். நீங்கள் நிறைவேற்றிவரும் உங்கள் தொழுகையை நீங்கள் நன்கறிவீர்கள். ஆகவே, அவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து நீங்கள் நிறைவேற்றி வருவது தொழு கையா? அல்லது வேறு கிரியையா? என்ப தைச் சிந்தித்துப் பார்ப்பீர்களாக.

தனக்குள்ள நோயை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்பதில் துடித்துக் கொண்டிருக்கிற ஒரு நோயாளி தனக்குச் சக்தியிருந்து சிகிச்சை முறைகளிற் சொல்லப் பட்ட விதிவிலக்கின்படி நடந்துகொள்ளவில்லை யானால் அவரது நிலைமைக்கு பரிதவிக்கவேண்டி யதைத் தவிர வேறொன்றுமில்லை. இவ்விதமான நோயாளி ஒருவர் தமது நோயை விட்டுக் குணப்படாமலிருப்பாராயின் அது எவர் மீது குற்றம்? சிகிச்சை செய்பவர் மீது குற்றமா? அல்லது நோயாளி மீது குற்றமா என்பதை வாசக நேயர்கள் சிந்தித்துணர்வார்களாக

முஸ்லிம்களாகிய நாம், அனேகம் அனேக மான ஆத்ம வியாதிகளால் பீடிக்கப்பட்டிருக் கிறோம். அதற்குரிய அருமருந்து தொழுகை யைத் தவிர வேறொன்றுமில்லை. அந்தத் தொழுகையைப் பற்றித் தான் மேலே சிறிது விபரிக்கப்பட்டது. நமக்குள்ள ஆத்ம வியாதி களிலிருந்து நாம் விடுபடவேண்டும்மென்று உண்மையாகவே விரும்புவோமாயின், நமது தொழுகைகளை மேற்கூறப்பட்ட முறைகளின் படி நிறைவேற்றவேண்டும். அவ்வாறு நிறை வேற்றுவதன் மூலமாகத் தான் நமது ஆத்ம வியாதிகள் நம்மைவிட்டு வேறுடன் அகலும். அத்துடன் "தொழுகையானது மூமின் களுக்கு மிஅராஜு'' என்ற ஹதீதின் இன்பத் தை அனுபவிக்கவும் முடியும்.

வஸ்ஸலாம்.

இஸ்லாம் மதத்தின் சில விசேஷத்துவங்கள்

இஸ்லாம் மதத்திலுள்ள விசேஷங்களில் மிகவும் முக்கியமானது அதன் போதனைகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான். இஸ்லாம் மதத்தின் போதனைகளுக்கு இரண்டு ஊற்றுக்கண்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று திருகுர்ஆன், மற்றொன்று ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களது போதனைகள் என்பதை ஒவ்வொருவரும் நன்கறிவர். இவ்விரு ஊற்றுக்கண்களும் பரிபூரணமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

திருகுர்ஆன் ஆதியில் மொத்தமாக ஒரே முறையில் அருளப்படவில்லை. ஒவ்வொரு ஆயத்தாகவே பிரித்துப் பிரித்து அருளப்பட்டது. அவைகளில் ஒன்று "நிச்சயமாக அதனை ஒன்று சேர்ப்பதும் அதனைப் படிப்பதும் நம்மீது (பொறுப்பாக) இருக்கின்றது" என்பதாகும். இந்த ஆயத்தில், திருகுர்ஆன் பாதுகாக்கப்பட்டிருப்பதைக் குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. தவிரவும், திருகுர்ஆன் பாதுகாக்கப்படுவதற்குரிய இரண்டு முறைகளும் இதில் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது திருகுர்ஆன் ஆயத்துகள் தனித்தனியே அருளப்பட்டாலும் அவைகளை ஒன்று சேர்த்தல் ஒன்று. ஒன்று சேர்க்கப்பட்ட திருகுர்ஆனை ஜனங்கள் ஓதும்படிச் செய்தல் மற்றொன்று.

திருகுர்ஆனை ஒன்று சேர்த்தல் என்பதும் இரண்டு வகைப்படும். ஒன்று திருகுர்ஆனின் ஆயத்துகளை மனனஞ் செய்வதன் மூலம் இருதயத்தில் அவைகளை ஒன்றுசேர்த்தல். இதற்கு ஜம்உஸ்ஸத்ரி. அதாவது இருதயத்தில் ஒன்று சேர்த்தல் என்று பெயர். மற்றொன்று எழுத்தின் மூலமாக ஒன்று சேர்த்தல். இதற்கு ஜம்உல்மக்தூப் அதாவது எழுதப்பட்டவைகளை ஒன்று சேர்த்தல் என்று பெயர். திருகுர்ஆன் ஆரம்பத்தில் அருளப்படும்போதே மேற்கண்ட முன்னறிவிப்பில் வாக்களிக்கப்பட்டபடி இவ்விரு முறையாலும் அது ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை எவரேனும் மறுக்க முடியாது என்பது திண்ணம்.

இனி, குர்ஆன் என்ற பதத்தைக்கவனிப்போம். குர்ஆன் என்ற பதத்திற்கு படிக்கச் செய்தல் என்பது கருத்து. ஒரு புத்தகம் லைப்ரேரி, புத்தகாலயம் முதலியவைகளில் பத்திரமாக வைத்துப் பூட்டப் பட்டிருக்கலாம். ஆனால், அவைகளைப் படிப்பதற்கு நாதி இல்லாமலிருக்கவும் கூடும். இப்படியுள்ள புத்தகத்தைப் பாதுகாக்கப்பட்ட புத்தகம் என்று ஜனங்கள் கூறமுடியுமாயினும் அதனை "குர்ஆன்" என்று சொல்ல முடியாது. மேலே கூறப்பட்ட ஆயத்தில் திருகுர்ஆனை ஒன்று சேர்ப்பதும், அதனைப் படிப்பிப்பதும் தனது பொறுப்பு என்று இறைவன் கூறி இருப்பதற்கேற்ப, அது மனனஞ் செய்யப்பட்டு மனிதருள்ளங்களிலும் புத்தக வடிவத்திலும் ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதுபோல அது மனிதரால் ஓதப்பட்டுவரும் விஷயத்திலும் நிகரற்றதாக இருக்கிறது. இப்பொழுது உலகில் திருகுர்ஆனை மனனஞ் செய்தவர்கள் எத்தனைபேரிருக்கின்றனரோ அத்தனைபேர் வேறெந்த கிரந்தத்தையும் மனனஞ் செய்திருக்கமாட்டார்கள் என்பதும், எத்தனைபேர் திருகுர்ஆனை ஓதுகின்றனரோ அத்தனைபேர் வேறெந்த கிரந்தத்தையும் ஓதமாட்டார்கள் என்பதும் திண்ணம்.

திருகுர்ஆன் மனனஞ் செய்யப்படல்

திருகுர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருக்கும்போதே அதன் எதிர்கால சம்மந்தமாக "அது தெளிவான ஆயத்துகளாகும்; கல்வியைக் கொடுக்கப்பட்டவர்களது உள்ளங்களிலுள்ளது" என்பதாக இறைவன் கூறியுள்ளான். திருகுர்ஆனிலுள்ள இம் முன்னறிவிப்பானது மிகவும் பூரணமாக நிறைவேறியுள்ளது, இதனை மனனஞ்செய்வதன் மூலமாக லக்ஷக்கணக்கான ஜனங்களது உள்ளங்களில் இது பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

திருகுர்ஆன் எழுதப்படல்

திருகுர்ஆன் எழுதப்படும் என்பதையும் குறித்து திருகுர் ஆனே முன்னறிக்கை செய்

திருக்கிறது. "விரிக்கப்பட்டதோலில் எழுதப் பட்டதாகிய (வேத) கிரந்தத்தின்மீது பிரமாணமாக" என்று இறைவன் கூறியுள்ளான். இந்த ஆயத்து அருளப்பட்ட காலத்தில் திருமக்காவில் எழுதத் தெரிந்தவர்கள் பதினொரு பேர்கள் மாத்திரமே இருந்தனர். இஸ்லாம் மதத்தை அங்குள்ளவர்கள் அதுபோழ்து சகல விதத்திலும் நெருக்கடி செய்து கொண்டிருந்தனர். திருகுர்ஆன் இவ்வுலகில் பத்து நாட்களுக்கேனும் எதிர்ப்பில்லாமல் வாழும் என்று அதுபோழ்து எவரும் எதிர்பார்க்கவேயில்லை. இவ்வளவு நெருக்கடியுள்ளபோது தான் திருகுர்ஆனின் மேற்கண்ட ஆயத்து அருளப்பட்டு, திருகுர்ஆன் ஒரு கிரந்தமாகிவிடும், எழுதப்பட்டுவிடும், விரிக்கப்பட்ட தோல்களில் எழுதப்படும் என்று முன்னறிக்கை செய்யப்பட்டது. தற்போது உலகிலுள்ள திருகுர்ஆன் பிரதிகளைக் கவனியுங்கள்! அவைகளில் நூற்றுக்கு எண்பது பிரதிகள் தோல் பைண்டு செய்யப்பட்டனவாகவே இருப்பதை நீங்கள் காணமுடியும்.

நபிகள் நயகம் (ஸல்.) அவர்கள் அக்காலத்தில் தெருக்களில் சென்றால் ஜனங்கள் அவர்கள் மீது மண்ணை வாரி இறைப்பார்கள். தொழுதுகொண்டிருக்கும்போது சாணம் முதலிய அசுயைகளைப் போடுவர். நாயகம் (ஸல்.) அவர்களைப்பின் பற்றிய ஸஹாபிகளின் கழுத்துகளில், மிருகங்களின் கழுத்துகளில்கயிறுகளைப் போட்டு இழுப்பதுபோல் இழுத்துக்கொண்டு வீடு வீடாகச் செல்வர். திருமக்காவின் தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றிய ஸஹாபிகளுக்கும் இவ்விதமான கஷ்ட சங்கடங்களும் அவமதிப்பும் நிகழ்ந்து கொண்டிருந்தபோது தான் திருகுர்ஆனுக்கு உலகில் மிகவும் செல்வாக் கேற்படும் என்றும், அச்செல்வாக்கின் பயனாக ஜனங்கள் அதனைச் சுத்தமில்லாமல் தொடவும் மாட்டார்கள் என்ற முன்னறிவிப்பை "பரிசுத்தவான்களைத் தவிர மற்றவர்கள் இதனைத்தொடமாட்டார்கள்" என்ற ஆயத்தை இறைவன் அருளினான். இம்முன்னறிவிப்பு எவ்வளவு அழகாய் நிறைவேற்றப்படுகிறதென்பதை தற்போதைய உலக மக்களிடம் விசாரித்துப் பாருங்கள்! திருகுர் ஆனுக்குச் சமமான மதிப்பும் கௌரவமுமுள்ள கிரந்தம் எதுவும் உலகில் இல்லை என்பது வெளியாகும். இப்பொழுது உலகிலுள்ள எழுபது கோடி முஸ்லிம்கள் திருகுர்ஆனுக்கு நேராகத் தங்கள் கால்களையும் கூட நீட்டமாட்டார்கள். திருகுர்ஆனுக்கு மிகவும் சிறந்த உறைகளைத் தயார் செய்து அதில் சுற்றி உயரமான இடத்தில்வைத்துக்கொள்வர்.

ஒருவர் திருகுர்ஆனை ஓதிக் கொண்டிருப்பாராயின் அவரது அண்டையில் சப்தமிட்டு மற்றவர்கள் பேசிக்கொள்ளமாட்டார்கள். திருகுர்ஆனைக் கையில் எடுக்கவேண்டுமாயின் அதற்காக ஒலுச் செய்து கொள்வார்கள். அதனை ஓதும் போது கிப்லாவிற்கு நேராகத் திரும்பி இருந்துகொண்டு மிகவும் மரியாதையுடன் ஓதுவார்கள். இவ்விதமான மரியாதை வேறெந்த கிரந்தத்திற்கும் கிடையாது என்பதிற் சந்தேகமில்லை; இனிமேல் வேறு எக்கிரந்தத்திற்கும் உண்டாகவுமாட்டாது.

திருகுர்ஆன் நிகரற்ற வண்ணமாகப் பாதுகாக்கப்பட்டு வருவது மிகவும் பெரிய அற்புதமென்பதை முஸ்லிம் அல்லாதாரும்கூட மறுத்ததில்லை. இனிமேலும் மறுக்கத் துணியார்கள். ஐக்கிய மாகாணத்திற்கு கவர்னராக இருந்த பெயர்பெற்ற நூலாசிரியரான ஸர். வில்லியம் மூர் என்பவர் தம்முடைய "லைப் ஆப் முஹம்மத்" (முஹம்மது (ஸல்.) அவர்களது ஜீவியம்) என்பதின் முகவுரையில் "நமக்குத் தெரிந்தவரையில் திருகுர்ஆனைப்போல் இப்பன்னிரண்டு நூற்றாண்டுகளாக அதில் எவ்வித திரித்தலுமின்றி பரிசுத்தமாக இருக்கிற கிரந்தம் உலகில் வேறொன்றுமில்லை" என்று கூறியுள்ளார்.

ஹதீது ஷரீபுகள் பாதுகாக்கப்படல்

இஸ்லாம் மதத்தின் போதனைகளுக்கு மற்றொரு ஊற்றுக்கண் இஸ்லாத்தின் திருநபியாகிய ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களது ஹதீதுகளேயாகும். மதக் கிரந்தம் அதாவது வேதங்களைப் பாதுகாத்தல், கௌரவித்தல் ஆகியவைகள் மத உலகில் சர்வ சாதாரணமாக நடைபெற்று வரும் காரியங்களேயாகும். ஆனால், அவைகள் கிரியாம்சையில் செய்கையின் மூலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா என்பதைப்பற்றி இங்கு விவாதிக்கவில்லை. இது பிரத்தியேகமான பிரசினை. ஆதலால், அதனை நாம் இங்கு கவனிக்கவேண்டியதில்லை. இக்காலத்தில் ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் வேத கிரந்தத்தைப் பாது

காக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவராகவே இருக்கின்றனர் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் தங்களது வேத கிரந்தத்தைப் பாதுகாத்தது மட்டுமின்றி தங்களது நபி அவர்களது ஒவ்வொரு சொல்லையும் செயலையும்கூடப் பாதுகாத்து வருகின்றனர். இவ்வித நிலைமை வேறெந்த மதத்திற்குமில்லை.

ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களது திருநாவிலிருந்து வெளியானவைகளை ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு உமர் (றலி.) அவர்கள் எழுதி வைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு முறை குறைஷியர்கள் "இஸ்லாத்தின் திருநபி (ஸல்.) அவர்களது நிலைமை எந்நேரமும் ஒன்றுபோலில்லை; ஆதலின், அவர்களது நாவிலிருந்து வெளி வருகிற யாவையும் நீர் எழுதி வைப்பது சரியன்று" என்பதாகக் கூறி, ஹஜ்றத் அப்துல்லாஹிப்னுஉமர் (றலி.) அவரை எழுதவேண்டாமென்று தடுத்துவிட்டனர். ஆனால், இவ்விபரம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரிந்தபோது "அப்துல்லாவே! நீர் எழுதி வைத்துக்கொள்ளும், இவ்வாயிலிருந்து வெளியாகுவனவெல்லாம் சத்தியமாகவே வெளியாகிறது என்று கூறி அவரை மறுபடியும் எழுதிக்கொண்டே வரும்படி அனுமதித்தார்கள்.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது சமூகத்திற்கு கணக்கில்லாத ஜனங்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அவர்களிடம் நாயகம் (ஸல்.) அவர்கள் பல விஷயங்களைப்பற்றியும் எழுதுவித்துக் கொண்டிருந்தார்கள். அநேகம் உடன்படிக்கைகள் எழுதுவிக்கப்பட்டன. அறபி அரசர்களுக்கு அநேகம் கடிதங்களெழுதுவித்தனுப்பப்பட்டன. இவைகளெல்லாம் இன்றளவும் பாதுகாக்கப்பட்டே வருகின்றன.

ஹுஜூர் (ஸல்.) அவர்கள் அநேகம் ஜனங்களுக்கு வஸியத் என்னும் உபதேசக் கட்டளைகளை எழுதுவித்தனுப்பினார்கள். அநேகக் கட்டளைகள் வரி வசூலதிகாரிகளுக்கனுப்பப்பட்டன. தங்களது கடைசி காலத்தில் ஜக்காத்து சம்பந்தமான மஸ்அலாக்களைப்பற்றி எழுதுவித்ததுடன், ஹதீதுகளடங்கிய ஒரு புத்தகத்தையும் இயற்றுவித்து அம்றுப்னு ஹஜம் (றலி.) அவர்களிடம் கொடுத்து யமன் வாசிகளுக்கு அனுப்பிவைத்தார்கள். கண்ணியவான்களான ஸஹாபிகளிற்பலர் அநேகம் ஹதீதுகளை எழுதி வைத்தனர். ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களிடம் ஒரு கிரந்தமிருந்தது. அதில் 500 ஹதீதுகள் எழுதப்பட்டிருந்தன. ஹஜ்றத் உமர் (றலி.), ஹஜ்றத்அலீ (றலி.) ஆகியவர்களும் ஹதீதுகளை எழுதி வைத்திருந்தார்களென்றும், எழுதுவித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் ருஜூவாகின்றது. குலபாயெ ராஷிதீன்களுக்குப் பிறகு தாபியீன்களில் ஒரு வகுப்பினர் தோன்றினர். அவ்வகுப்பினர் அபார முயற்சி செய்து ஹதீதுகளடங்கிய கிரந்தங்களை இயற்றினர். இவர்களில் ஹஜ்றத் நாபிஉ (றஹ்.) என்பவர் ஹஜ்றத் உமர் (றலி.) அவர்களிடமிருந்து ஹதீதுகளைக் கேட்டுத் தெரிந்து எழுதிக்கொண்டிருந்தார். ஹஜ்றத் அப்துல்லாஹிப்னுமுஹம்மது (றஹ்.) அவர்கள் ஹஜ்றத் ஜாபிர் (றலி) அவர்களிடம் ஹதீதுகளைக் கேட்டுக் கேட்டு எழுதி வைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஜ்றத் வஹபுப்னு முனப்பஹ் (றஹ்) என்பவர் ஹஜ்றத் ஜாபிர் (றலி.) அவர்களது எல்லா ஹதீதுகளையும் எழுதிப் புத்தகமாகத் தயார் செய்திருந்தார். ஹஜ்ரத் ஸுலைமானுப்னு ஸம்ரா (றஹ்) அவர்கள் தமது தந்தையவர்கள் தெரிந்திருந்த எல்லா ஹதீதுகளையும் ஒன்று திரட்டி ஒரு பெரிய கிரந்தமாக எழுதிவைத்திருந்தார்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தபோது லக்ஷத்து இருபத்து நான்காயிரம் பேர்கள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் சென்றிருந்தார்கள். இவர்களில் பதின்மூவாயிரம் பேர்கள் நாயகம் (ஸல்.) அவர்களது திருநாவிலிருந்து வெளியான ஹதீதுகளை மற்றவர்களுக்குச் சொல்லிப் பிரசங்கித்தவர்கள். இப்பதின்மூவாயிரம் பேர்களது பெயர் நாமங்களும், வாழ்க்கை வரலாறுகளும் இஸ்லாமிய கிரந்தங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. அத்துடன் அவர்கள் பிரசங்கித்த நாயக வாக்கியங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிரயாணத்திலிருக்கும்போதோ, அல்லது உள்ளூரில் இருக்கும்போதோ கூறிய எந்த வாக்கியமும் ஆகாயத்தின் அலைகளில் மறைந்துவிடவில்லை என்பதாகச் சில பெரியார்கள் மிகவும் தெளிவாகக் கூறி இருக்கின்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சம்பந்தமான ஹதீதுகள் பாதுகாக்கப்பட்டிருப்பதைக் குறித்து முஸ்லிம் அல்லாத ஒருவரின் வாக்கு மூலத்தை இங்கு எடுத்தெழுதுவது மிகவும்

பொருத்தமானதாகும். ரெவரெண்ட் பாஸ் வொர்த் ஸ்மித் என்பவர் கூறி இருப்பது வருமாறு:—

N. B.—:"என்றாலும், இஸ்லாத்தில் ஒவ்வொரு காரியமும் விசேஷமாகவே இருக்கிறது. இதில் மூடலான விஷயங்களோ, இரகசியமோ இல்லை. நாம் சரித்திரத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். எந்த மனிதரும் ஏமாற்றமடையமுடியாது. மற்றவர்களை ஏமாற்றிவிடவுமுடியாது. இங்கு நடுப்பகல் போல ஒவ்வொரு காரியமும் பிரகாசமாக இருக்கிறது. எவரும் அவைகளின் பாதாளம்வரை செல்லலாம். (தொடரும்)

சில மலர்ந்த புஷ்பங்கள்

(வடகரை மாணவர் பா. அப்துல் ஹமீது வரைவது)

(1)

மார்க்கப் பெரியாரும் 'வலியுல்லா'யெனும் பட்டம்பெற்றவருமாய 'இப்ருஹீமிப்னு அத்ஹம்' அவர்களிடம் வெகு பல ஜனங்கள் சென்று "பெரியார் அவர்களே! இறைவன் றன்திருமறையில் (அத்ஊனீ அஸ்தஜிப்லகும்.) என்னிடம் வேண்டுபவர்களின் வேண்டுகோளை பூர்த்தி செய்கிறேனெனப் புகன்றுள்ளான் எனவே யாங்கள் தினே தினே அவன்பால் பராவுகின்றோம் ஆனால் எங்களின் பரசுதலை ஏற்றுக்கொண்டு எங்களின் வேண்டுதலைப் பூர்த்தி செய்கிறானில்லை?" என வினவினர்கள். உடனே அவ்வலியுல்லா அம்மன்பதைகளை நோக்கி "ஓ ஜனங்காள்! நுங்களின் இதயங்கள் சில காரியங்களாற் மரித்துவிட்டன, அவையிற் இறைவனே யெஜமானன் என வாதாடுகின்றீர்கள். ஆனால் அவனுக்குச்செய்ய வேண்டிய தெய்வப் பணிகளைச் செய்கின்றீர்களில்லை. இறைமறையை பாராயணஞ் செய்கின்றீர்கள்; ஆனால் அது இடும் ஆக்ஞைகளை பநுஷ்டித்து கிரியாம்சையில் கொண்டுவருகின்றீர்களில்லை. ஷைத்தான் ஜன்மப் பகைவனென வாதாடுகின்றீர்கள். ஆனால் அவனையே ஆப்த்தநேயனுக்கி அவனிடும் ஆக்ஞைகட்கே யடிபணிந்து விடுகின்றீர்கள். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள்பால் பிரீதிபூண்டுள்ளோம் யென சாதிக்கின்றீர்கள். ஆனால் அவர்கள் நடையுடை யநுஷ்டானங்களைக் கடைபிடித்தொழுகிறீர்களில்லை. சுவர்க்கத்தை வேண்டுகிறோம், நரகத்தை வெறுக்கிறோம் யென கூறுகின்றீர்கள். ஆனால் அதற்காவன வற்றைப் புரிகிறீர்களில்லை. மரணம் உண்டென்றியம்புகிறீர்கள்; மறித்த சவங்களையும் மண்களிற் புதைக்கின்றீர்கள். ஆனால் நமதிறுதி வாழ்க்கையும் இதே காக்ஷிதான் யென புத்துணர்வுப் பெறுகிறீர்களில்லை. ஆண்டவன் உணவை அருந்துகிறீர்கள். ஆனால் ஈபவனுக்கு நன்றி செலுத்தாது இடரையே இழைக்கின்றீர்கள் எனவே இவ்விழி தொழில்களாற் நுங்கள் இதயங்கள் இறந்துவிட்டது. எனவே இறந்த ஹ்ருதயங்களின் வேண்டுதல் இறை சமூகத்திற் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா" யென புகன்றார்கள்.

(முனப்பஹாத்)

(2)

நல்லோர்கள் பால் நெறுங்கிப் புகுதலே சன்மார்க்க சத் வழிக்கிழுத்துச் செல்லக் கூடிய ஒரியந்திரமாகும். நல்லோர்கள்பால் நெருங்கிப் பழகுவதால் அவருடைய சத் போதனைகளை அடிக்கடி செவிமடுக்க வேண்டியதாய் இருக்கிறது. எனவே இந்நெறுங்கிய சம்பந்தம் வெகுவாக ஆக அவரைப் போன்றே ஓர் நற்குண பூஷணராய்த் திகழவேண்டுமெனும் பெருமித துணிபை உற்பத்தித்து இறுதியிற் அந்நல்லாரைப் போன்றே திகழக்கூடிய அத்துணை மகோன்னத நிலையிற் கொணர்ந்து சேர்ப்பிக்கிறது. உதாரணமாய் "யான் ஒரு காலை ஸ்நானக் கூடத்திற்கேகினேன், ஆங்கு எனதாப்த்த நேயனால் நறுமணங்கமழக்கூடிய ஓர் மண் கட்டியை ஈயப்பெற்றேன். உடனே அதை நுகருமிடத்து அதன் பரிமள கந்தம் என்னை பரவசப்படுத்தியது. எனவே அதை நோக்கி, "ஆ! மண்கட்டீ! நீ யாது வஸ்து? இதயங்களை கவரக்கூடிய நினது நறுமண

வாடையாற் உளப்பரவசமெய்தினேன். உற்சாகம் பூண்டேன். நீ யாவராலும் போற்றக் கூடிய அம்பரா? அல்லது கஸ்தூரியா? யென விளம்பினேன். உடனே அது எனக்கு மறுமொழி கொடுக்கும் தோரணையிற் ஐயனே! யானோர் அற்ப மண்ணுருண்டையாவேன், எனினும் ஒரு சிலகாலம் புஷ்பங்களுடனே அண்மிக்கிடந்தேன் எனவே அணுகிய பலன் என்னை இத்துணை நறுமணத்திற்கிலக்காக்கியது. இன்றேல் யானும் பலரால் நுகரப் படாத மண்ணாகவே கிடக்கக்கடவேன்' யென புகன்றது. இவ்வாறே நல்லோருடன் கூடிப் பழகலும் நலன் தரத் தக்கனவாகும்.

(ஸஅதீ ஷீராஜீ)

(3)

சோதரீர்! நினதுயிருக் காபத்திழைக்கக் கூடிய வஸ்துக்கள் நான்கிருக்கின்றது. அவை களை விட்டகலற்கு இயன்றவரை போதிய பிரயத்னமெடுத்துக் கொள்வாயாக! 1-வது அரசனிடத்து அண்டிப்பழகல். 2-வது அறிவிலிகள் ஸ்நேகம். 3-வது உலகப்பற்று. 4-வது பிறப்பெண்களிடத்து நெருங்கிப் பழகல். எனவே அரசப்பழக்கம், ஒரு சிறு மாறுென்று நிகழ்ந்திடின் அக்கணமே சிரம் கொய்யப்பட்டுப் போம். அறிவிலிகள் ஸ்நேகம் ஒருசமயம் இன்பந்தரக்கூடியனவாயிருப்பினும் மற்றொரு தருணம் தன் உயிருக்கே உலை மூட்டக்கூடிய சம்பவத்தை நிகழ்த்திவிடும். உலக வாழ்க்கை படாடோபமாக நடித்து உன்னை தன் வலையிற் சிக்குரச்செய்துவிடும். அப்பாற் நின்னையே தன் வயப்படுத்தி தன் புதைகுளிகளொன்றிற் துயிற்புரியச்செய்துவிடும். பெண்களின் பசப்பு வார்த்தைகள் இளம் மதலைகளுரையே போன்று இன்பந்தரக்கூடியவைகளாயிருப்பினும் அதன் இறுதி வெகு மோசத்திற்கிலக்காக்கி பாரோர் இகழக்கூடிய அத்துணை பரிதாப படுகுழியிற் வீழ்த்திவிடும் (கவி)

(பன்துநாமா)

(4)

ஒருக்காலும் பெருமை பூண்டொழுகாதே. இறுதியிற் அது ஓர் அன்னியனிடம் சரனடையக்கூடிய அத்துணை மிக மிக கேவலஸ்திதியிற் கொணர்ந்து சேர்ப்பிக்கும். அறிவிலிகளிடத்து பெருமை காணப்படின் அது வெறுக்கத்தக்க விஷயமாகும். ஆனல் அது அறிஞர்களிடத்து காணப்படல் வெகு அபூர்வமாகும். பெருமையடித்தல் அஞ்ஞானிகளின் அநுஷ்டானமாகும். எனவே, அதை எந்த அறிஞனும் அநுஷ்டிக்க முன் வரான். விண்ணவர்க்கே ஆசானுப இப்லீசை மிக மிக கேவலஸ்திதியிற் சேர்ப்பித்து எக்காலத்தும் யாவராலும் சபிக்கக்கூடிய நிலைமையிற் கொண்டு வந்தது அந்த 'பெருமை' யேயாகும். ஆதலான், பாலரே! எப்பொழுது இவை யனைத்தையும் உணர்ந்துள்ளீரோ, ஏன் பெருமை பாராட்டுகின்றீர்!. அப்படியே யநுதினமும் பெருமையை யநுஷ்டிப்பாயின், மாறுதலிழைத்த மாபாவியாவாய் (கவி) (கரீமா)

(5)

சன்மார்க்கமுறை நெறி பிறழா சற்குணப் பெரியார்கட்கு சாக்ஷாத் பரம கருணாளனே உற்ற துணைவனுவான். உதாரணமாக மூஸா (அலை) அவர்கள் பிர்ஔன் உடைய சகிக்கொணு கஷ்ட நிஷ்டூரத்தாற் சுயபதியை வெறுத்து "மத்யன்" யெனும் ஊரையடைந்த போது அவர்கட்கு காய்ச்சலும் பசியும் ஒன்று சேர்ந்து கஷ்டப்படுத்தியது. உடனே இறைவன்பாற் கரமேந்தி "இறைவனே! யான் கதியற்ற யாத்ரீகனும், வியாதியாளனும், பசியாளியுமாய் இருக்கின்றேன்'' என பிரலாபித்தார்கள். உடனே இறைவன் மூஸா (அலை) வை நோக்கி "ஓ! என்னுரையாளரே! அகதியான யாத்ரீகன், பசியாளி, வியாதியஸ்தன் யாவன்? யென்பதை நீர் அறிவீரா? என்போன்ற துணைவனில்லாதவனே, கதியற்ற யாத்ரீகனுவான், என்போன்ற எஜமானனில்லாதவனே, பரம தரித்திரக்காரனுவான், என்போன்ற வைத்தியனில்லாத்தவனே, அகதியான வியாதிஸ்தனுவான். நினக்கு யான் உற்றதுணையாய் இருக்க ஏன் பிரலாபிக்கின்றீர்?'' யென 'வஹீ'யறைந்தான்.

(நப்ஹதுல்யமன்)

ஒரு முஸ்லிமின்மீது மற்றொரு முஸ்லிமுக்கு ஆறு கடமைகளிருக்கின்றன. (1) அவனைச் சந்தித்தால் சலாம்சொல்ல வேண்டும் (2) உதவிக்கழைத்தால் உடன்படவேண்டும் (3) ஆலோசனைகோரினல் நல்லயோசனை கூறவேண்டும் (4) தான் தும்மியவுடன் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று சொல்லவேண்டும் (5) அவனுக்கு வியாதி ஏற்பட்டுவிடின் போய்பார்க்க வேண்டும் (6) அவன் இறந்துபோனல் அவனது பிரேதத்தோடு செல்லவேண்டும்.

இம்மையிற் பிரியர் ஆனால் மறுமையிற் மகிபர்

மானிட ஜன்மத்தவர் தத்தம் சுய அறிவிழந்து ஆதவனின் கொடூர கோரவெப்பத்தால் அலறிக்கூப்பாடிடும் ஓர் அகங்காரநாள்! எத்துணையோ பல்கோடி மைல்கட்கு அப்பாலிருந்து வெப்பந்தரக்கூடிய இப்பகலவனை வெகு சமீபித்து, தனதாட்சியை தடையிலாதீந்து, மன்பதைகளைகரித்து 'கோ' வென கதறச் செய்யும் கொடூரநாள்! உலகிய மானிட கோடிகளிற் அவரவர் தம்செய்தீவினைக் கேற்றவாறு வியர்வையை வீரிட்டெழும்ப செய்யும் வீரநாள்! அந்தோ! கெர்ப்பிணிகள், இச்சகிக்சொணா சம்பவத்தாற் கண்கலங்கி துடிதுடித்து கர்ப்பத்தைக் காப்பாற்றயியலாது தத்தம் சுமைசேய்களை அப்படி அப்படியே விழுத்தாட்டும் கோரக் காக்ஷி! யாங்கு நோக்கினும் ஒரே அழுகூரல்! ஒரே புலம்பல்! இம்மட்டோ! இன்னும் இவைபோன்ற திடுக்கிடும் சம்பவங்களாற் காக்ஷியீயக்கூடிய நாள் நம்மை முன்னோக்குகிறதென நம்மார்க்கம் நம்மவர் பாலறைந்து, அந்நாட்களின் அல்லல்களை விட்டகலற்கும் போதிய நன்மார்க்கங்களை தேடிக்கொள்ளற்கும் வற்புறுத்துமேல், சோதரீர்காள்! அந்நாள் எந்நாளாய் இருக்கவேண்டும்; ஆம்! அந்நாளே நமதிஸ்லாமிய சன்மார்க்க மூலகோட்பாடுகளிற் ஐந்தாவது கோட்பாடாய 'கியாமத்' அல்லது இறுதி தீர்ப்பு நாளிற் நடைபெறக்கூடிய ஓர் சம்பவதினமாகும். எனவே வாசகர்காள்! அந்நாள் ஆரம்பத்திற்குமுன் நிகழ்பெறக்கூடிய ஒரு சில சம்பவங்களை மட்டும் இவண்யெடுத்தியம்பிவிட்டு அப்பாற் அம்மறுமையிற் இவ்வித இடுக்கண்களுக்கிலக்காகிய நம்மவரை, ஏன் உலகத்தவரையே கார்த்துரக்ஷிக்கும் கிருபா கடாக்ஷகராய் திகழக்கூடிய தெய்வத்திருதூதர் யாவர்? யென்பதை வரையப்புகுவாம்.

இந்நாள் ஆரம்பத்திற்குமுன் உலகிய இயற்கை சம்பவங்கட்கு நேர்மாற்றமாய் பலதிறப்பட்ட முரண்கள் நடைபெற ஆரம்பித்துவிடும். சூரியன்தன் நித்ய அநுஷ்டானத்திற்கே முற்ற முற்ற முரணாய் மேற்கிலிருந்து உதயமாக முற்பட்டு விடுகிறது! ஒரு சில நாட்கள்வரை சூர்யன் சந்திரன் யெனும் நாமதேயமின்றி உலகனைத்தும் ஒரே இருள் மயமாய் ஒருவர்க்கொருவர் தட்டுக்கெட்டுத் தடுமாறி முட்டிமோதிக் கொள்வர். ஒரே சமயத்திற் சூரியனும் சந்திரனும் ஒருங்கே சேர்ந்து வெப்பமற்ற வெறும் கால்பந்துகளிரண்டேபோன்று அரை ஆகாயம்வரை விஜயம் தந்து அப்பால்தாம் உதயமான அதேஸ்தானத்திற்கேகிஅஸ்தமித்து விடும். எத்துணையோ வெகுபல வருடங்கள் வரை ராப்பகல் யெனும் காலச்சுழல்களின்றி ஒரே பகற் மயமாகவே இருந்து விடுகிறது! இன்றும் எத்துணையோ இவைபோன்ற அதியாச்சர்ய அபூர்வ திடுக்கிடும் சம்பவங்களினூடே மக்கள் உய்யும் வகையறியாதுழன்று கேவலம் ஆடுமாடுகளைவிட மிகமிககேவல ஸ்திதியிற் சன்மார்க்க முறைநெறி பிறழ்ந்து தத்தம் மனம்போனபோக்கிற் கண்டதே காட்சி கொண்டதே கோலமென நடக்க முற்பட்டு விடுவார்கள். இதுசமயம் ஆஸ்திகம் யெனும் நாமமே யழிந்து யெங்கு நோக்கினும் நாஸ்திகமே யாதொரு தட்டுத்தடையின்றி தலைவிரித்தாட முற்பட்டுவிடும். அன்பர்காள்! இது காலையிற்றான் பாபமன்னிப்பு அல்லது 'தௌபா'வின் வாயல் அடைபட்டுபோம். எனவே அந்நாளிற் இத்தருணத்திற்தாம் தாம்புரிந்த பாபக்கிரியைகளை நினைத்து பாபமன்னிப்பிற்காக இறைவன் பால் இறைஞ்சி கண்ணீருக்கு பதில் சென்னீர் வடித்து கெஞ்சிக்கூப்பாடிட்டாலும் ஒருகாலும் க்ஷமிக்கப்பட்டுப் போகமாட்டா. இவ்விதம் வெகு பல நாட்கள் கடந்து விடும்.

இறுதியிற் தெய்வப்பணியாளர் ஒருவர் (மீக்காயீல்அலை) தம் (சூர்.) ஊது குழலை உரக்க கர்ஜித்து விடுவார். அதே க்ஷணம்! அதே நிமிடம்! உலகிய எல்லா உயிரினங்களும் பஞ்சுத்தீயேப்போன்று ஒன்றன் பின் ஒன்றாய்; ஒரே அடியாய்; இம்மை வாழ்க்கையை இறுதியுறுத்திக் கொண்டு எம உலகுக்கேகும் தோரணையிற் சொற்சவங்களாய்காணப்

படுவார்கள். இற்றையிலிருந்தே இம்மை வாழ்வும் இறுதிப் பெறுகிறது.

எனவே, இவ்விதம் பல ஆயிரம் வருடம் கடந்ததற்கும் அப்பாற் மேற் கூறிய அதேப் பணியாளர் இறையாக்ஞை மேற்கொண்டு ஷி குழலை உரக்க கர்ஜித்து விடுவார். அதே விநாடி, முன்பின் மரித்த எல்லா பிணக்கு வியல்களும் ஒன்றன் பின் ஞென்ருய் உயிர் பெற்றெழும்பு வார்கள். வாசகர்காள்! இற்றருண தற்ருன் மேற்கூறிய திடுக்கிடும் சம்பவங்கள் நடைபெறுகிறது. அந்தோ! வெப்பத்தாலும் வியர்வையாலும் பூபாக உஷ்ணத்தாலும் கஷ்டப்பட்டுக் கண்ணீர்வடித்து கத்துவர் பலர்! புலம்பிக்கதறுவர் பலர்! தண்ணீர் தாகத்தாற் றுடிதுடித்து புரளுவர், புலம்புவர், எனவே ஒவ்வொருவரும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே பகீரதப்ரயத்னப் படுவார்களேயன்றி எள்ளத்துணையும் பிறர்க்கு உபகாரம் செய்ய முன்வாரார்கள். காதலனும் காதலியும் கைகோர்த்து "கண்மணீ என்னுயிருடல் பொருள் பூமி மண்டப மாடி மாளிகை யெல்லாம் நினக்குச் சொந்தம், ஆனல் நீ எனக்குச் சொந்தம்" யெனும் பசப்பு வார்த்தைகளாற் உறையாடி உடலிரண்டு உயிரொன்ருய் வாழ்ந்துப் போந்த அதே காதலன் "இறைவனே! என் நாயகியின் நட்புரைகளினுற்ருன் யான் நினது தெய்வப் பணியாற்ற மறந்து விட்டேன்" யென தன் நாயகி பால் குற்றத்தை சாற்றிடுவன். இவ்வாறே பெற்ருேரைக் கண்டு பிள்ளை, பிள்ளையைக் கண்டு பிதா, சோதர, சோதரி, அன்பர், நண்பர், அனைவர்களும் ஒருக்காலும் ஒருவர்க்கொருவர் உபகாரம் செய்ய முன் வராது, தம்மைத் தாமே காப்பாற்றத் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பார்கள்.

பெரும் புயலாற் சிதறுண்டு திக்கொன்றும் தென்படாது உளக்கசப் பெய்தி ஆழியினூடே மிதந்து இனி இறப்பது திண்ணமென இதயமதிற் யெழுப்பி உயிரை இழக்காதுய்ய வேறு வழியில்லையாயென அலறும் மரக்கல மாலுமி யொருவன் கரையாங்கிருக்கிற தென்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பானன்ருே? அஃதேபோன்று இச்சகிக் கொணு துன்பத்திற்கிலக்கான யாவர்களும் கதிமோட்சம் பெறும் வழியிலேயே கண்ணேட்டமாய் இருப்பார்கள். இறுதியாய் "இறைவனின் பிரதிநிதிகளாய நபிமார் ரசூல்மார்களே இவ்வித அல்லல்களை யகற்றிடற்கு அருகதையாளர்கள் எனவே அனைவர்களும் அவர்கள் பால் அண்மி காப்பாற்றத் தேடுவோமாக!" யென்னும் முடிவுடன் துவர்க்கமாய் அபூனு ஆதம் (அலை.) அவர்கள் சமூகத்திற்கேகுவார்கள். அக்கணக்கு, ஆதம் (அலை.) அவர்களும் தாமிழைத்த இறை உரை பிறழ்தலை நினைத்து இத்துன்பத்திற் கிலக்கானவர்களாய் "இறைவ! இத்துன்பத்தை விட்டென்னை காப்பாற்றுவாயாக!" யென கூவிக்கொண்டிருப்பார்கள். எனவே, ஆங்குசென்ற யாவர்களும் பிதா ஆதம் (அலை) அவர்கட்கு சாந்தி கூறி "ஏ! எம்மனைவர்க்கும் முதற் பிதாவாய ஆதம் (அலை.) அவர்களே! யாங்கள் இத்துணை அகதியாளர்களாய் அலறுகிறேமே; தாங்கள் என்றே யெம்மவர்க்கு பிதாவாவீர்கள்; தாங்களுக்கன்ருே இறைவன் தேவதூதர்களைக் கொண்டு சிரசாஷ்டாங்கம் செய்யச் செய்தான் பிதாவே! சற்று நுங்களின் பாலர்களாய எங்களின் பரிதாபக்குரலை செவியேற்றுங்கள். தயை பூண்டு எம்மவர்க்காக பரம கருணுநிதியாய இறைவன்பாற் பரசுங்கள்," யென கூவிக் கூடிப்பாடிடுவார்கள். உடனே ஆதம் (அலை) அவர்கள் பாலர்களின் பரிதாபக் கோஷத்தை செவிமடுத்து கண்களிலிருந்து துன்ப நீரை கக்கினவர்களாய் "எனதருஞ் சேய்காள்! யானே இறைவனின் ஆக்ஞையை புறத்தே தள்ளி மாறுதலிழைத்த மாபாவியாவேன் எனவே யான் எவ்வாறு அவ்விறைவன்பாற் ஏகி நுங் கட்காகவேண்டி க்ஷமிக்கத் தேடல்சாலும்! எனவே நீங்களெல்லீரும் இறைவனின் தோழர் இப்ருஹீம் (அலை) அவர்கள்பால் விஜயம்செய்து ரக்ஷிக்கத்தேடுவீர்களாக!" யென புகன்றிடுவார்கள்.

இவ்விதம் ஒவ்வொரு நபிமார்களும் தத்தம் குற்றங்களை எடுத்தெடுத்தெண்பித்துவிட்டு, தாம் தாம் சாந்திபெறும் வழியிலே கண்ணீர்களை விரயஞ்செய்தவர்களாய்மற்றெருநபியைச் சாட்டிவிடுவார்கள். ஆகவே ஒவ்வொரு நபியாக சாட்டப்பட்டு யாவர்களும் அகதியாளர்களாய் திரிந்தலைந்து இறுதியிற் ஒரு உலக ரக்ஷகக் காருண்யக் கருணைவள்ளல்பால் சாட்டப்படுகிறார்கள். எனவே அக்கருணுகரப் பெரியார் யார்? ஆம் அவர்களே இம்மையிற் நம்மவர்க்கு 'ரஹ்மத்துன்லில்ஆலமீன்' ஜெகதரக்ஷகராய்த் திகழ்ந்ததேபோன்று மறுமையிலும் நம்மவர்க்கு மகிபராய்வீற்று தன்னலங்கருதா பிற

நலப்பிரியராய் 'உம்மத்தீ உம்மத்தீ' பிரஜைகாள்! பிரஜைகாள்! என கண்ணீர் வடித்து கலங்கும் சர்வரேஜஹான் 'ஷபீஉல் முத்னிபீன்' முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களாவார்கள். இறுதியிற், இக்கருணாக்கரக் கோமான் இவ்வித அல்லல்களாற் அவதியுற்றலறும் யாவர்கட்கும் ரக்ஷிக்கத்தேடுவார்கள்; பன்முறை இறைவனுக்கு சிரசாஷ்டாங்கம் செய்வார்கள், இறுதியிற் யாவரும் இத்துன்பங்களாற் விடுதலைப்பெற்று சுகம் பெறுவார்கள். ஆகவே, இம்மையிற்எங்களின்பாற் பேருழுவற்பூண்டிருந்ததேபோன்று மறுமையிலும் எங்கட்கு மகிபராய்த்திகழும் சாலாரே! ஆலம் நபிகள் கோமான் (ஸல்.) அவர்களே! நுங்கள்மீது இறைவனின் சாந்தியும் கருணையும் சதா மிகுவாகுக! ஆகுக!!

முஸ்லிம்களும் வியாபாரமும்

விசுவாசங்கொண்டவர்களே! உங்களில் நின்றும் திருப்தியின் பேரிலுள்ள வியாபாரமாக இருந்தாலொழிய உங்களது பொருள்களை நியாயமில்லாத முறையில் புசிக்காதீர்கள்.

வியாபாரம் புத்தகப்படிப்பினால் வந்துவிடாது. அதனைக்கிரியாம்சையில் செய்வதன் மூலமாகத் தான் அதுவரும். வியாபாரத்தினால் கைத்தொழில் விவசாயம் முதலிய எல்லாத் தொழில்களும் விருத்தியடைகின்றன. விருக்ஷம், புற், பூண்டு, முதலிய பயிர்களும், ஆடு மாடு முதலிய ஜீவராசிகளும் வளர்ச்சியடைவதற்கு ஜலம் மூலக்கருவியாக இருப்பதுபோல ஜனசமூகம் முன்னேற்றமடைவதற்குள்ள இரகசியம் வியாபாரத்தினுள்ளிருக்கிறது. எந்த சமூகம் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டதோ அந்தச்சமூகத்தை அத்தொழில் உச்ச ஸ்தானத்திற்கு சேர்ப்பித்து வைக்கும். நாம் இதர சமூகத்தினைப்பற்றிக் கவனிக்கவேண்டியதில்லை. இவ்விஷயத்தில் நாம் நமது வழிகாட்டியான எம்பெருமானார் ஹஜ்றத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களைப்பற்றிக் கவனிப்போம். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஜ்றத் கதீஜத்துல் குப்ரா (றலி.) அவர்களது வியாபாரப் பொருள்களை எடுத்துக்கொண்டு வியாபார ஸ்தலத்திற்கு நேரிற் சென்று தொழில் புரிந்திருக்கிறார்கள். சங்கைவான்களான ஸஹாபிகளில் முஹாஜிரீன்களது முக்கிய தொழில் வியாபாரமாகவே இருந்தது. முஹாஜிர்கள் மக்காவை ஹிஜ்றத்துச் செய்து மதீனா முனவ்வராவிற்கு வந்தபோது இரு உலகங்களுக்கும் தலைவரான நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அன்ஸார்களுக்கும் முஹாஜிர்களுக்குமிடையில் சகோதரப் பந்தத்துவத்தை ஏற்படுத்தினார்கள். இதன்பேரில் அன்ஸார்கள் தங்களிடமுள்ள பொருள்களைச் சரிபாதியாகப் பிரித்துக் கொடுத்தனர். ஆனால், முஹாஜிர்களிலநேகர் அந்தப் பொருள்களை அன்ஸார்களிடமிருந்து வாங்க மறுத்து "இந்தப் பொருள்களெல்லாம் உங்களுக்கிருக்கட்டும், எங்களுக்குக் கடைத் தெருக்களை மட்டிலும் காண்பித்து விடுங்கள்" என்று கூறினர்.

மகுடத்தில் கூறப்பட்டுள்ள ஆயத்தின் வியாக்யானத்தை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே நமக்குக் கிரியாம்சையில் செய்து காண்பித்திருக்கிறார்கள். "நீங்கள் வியாபாரம் செய்யுங்கள். ஏனெனில் உங்களது சாப்பாட்டில் பத்தில் ஒன்பதுபாகம் வியாபாரத்தினுள்ளிருக்கிறது" என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது காலத்தையடுத்துள்ளவர்களான முற்காலத்திய முஸ்லிம்கள் வியாபாரத்தில் இருக்கிற இறைவனது அனுக்கிரகத்தை நன்குணர்ந்து அதனைச் செய்ய முன் வந்தனர். இதன் பலனாக முஸ்லிம் என்றால் வியாபாரி என்றும், வியாபாரி என்றால் முஸ்லிம் என்றும் கருதக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தது. 15 அல்லது 16 வயதுள்ள ஒரு பையன் ஒரு சமயம் பகுதாதிலுள்ள கடைத்தெருவில் விருதாவாக அலைந்து திரிந்ததைப்பார்த்த ஒருவர் அப்பையனை நோக்கி "நீர் ஒருமுஸ்லிமுடைய புதல்வராக

இருந்தும் விருதாவாக அலைகின்றீரே'' என்பதாகக் கூறினர். அவரது இவ்வார்த்தைகள் அப்பையனது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போலிருந்தது. உடனே, அப்பையன் பகுதாது நகரைவிட்டு வெளியிற் சென்றனன். சில காலத்திற்குப் பிறகு "வியாபார அரசன் (-மலிக்குத்துஜ்ஜார்) என்ற முறையில் பகுதாது நகருக்குத் திரும்ப வந்தார். பின்னர், இஸ்லாமிய அரசர்களுக்குக் கீழ்நாட்டிலிருந்து மேனாடுவரை முன்னேற்றமேற்பட்டு அவர்களுக்குச் செல்வாக்கேற்பட்டபோது முஸ்லிம்கள் தங்களது வியாபாரத் தொழிலைக் கைவிட்டு உலகத்தை ஆளும் காரியத்தில் முனைந்தனர். அரசாங்கமும் அதிகாரமும் அவர்களை வியாபாரத் தொழிலில் அசிரத்தை காட்டும்படிச் செய்துவிட்டன.

இந்தியாவில் முஸ்லிம்களது ஆட்சி இருந்த காலத்தும் இந்திய முஸ்லிம்களது நிலையும் இவ்விதமாகவே இருந்தது. ஆனால், இந்திய முஸ்லிம்களாகிய நம்மைவிட்டு அரசாங்கமும் அதிகாரங்களும் நீங்கின. அரசாங்கத்தை நடத்துவதற்கான தன்மைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நம்மைவிட்டு நீங்கின. அரசாங்கம் நம்மைவிட்டு நீங்கி நூற்றுக்கணக்கான வருஷங்கள் சென்றபின்னரும் நாம் வீண் செலவு, ஆடம்பரம், விருந்துகள், வேடிக்கைகள் முதலியவைகளில் மூழ்கி இருக்கின்றோம். இவைகளைவிட்டு விலகி மூச்சுவிடக்கூட நமக்கு நேரங் கிடைக்கவில்லை.

இன்றைய இந்திய முஸ்லிம்களில் கடன் பளுவைச் சுமக்காதவர்கள் மிகச்சிலரே இருக்கக்கூடும். கடன்காரர் எப்பொழுதும் தலை நிமிர்ந்திருக்கமுடியாது. தங்களுக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு அவர்கள் எப்பொழுதும் அடிமைகள்போலவே இருக்கவேண்டியதேற்படும். "கடனின் முதுகின்மீது பொய் எப்பொழுதும் ஏறிக் கொண்டே இருக்கிறது'' என்று ஒருவர் நன்றாகக்கூறினர். கடன்காரரது பார்வை எப்பொழுதும் கவிழ்ந்ததாகவேஇருக்கும். ஒருமுறை இருமுறை கடன் வாங்கிவிட்டால் அப்புறம் இந்த முஸீபத்து நன்றாகச் சுற்றிக் கொள்கிறது. அதனை விட்டு விடுதலை பெற முடிவதே இல்லை. வீண் செலவினாலும் ஆடம்பரங்களினாலும் விளையாட்டுகளினாலுமே கடனேற்படுகிறது. கடனேற்பட்ட பின்னர் தமது விமோசனத்திற்கு வழியில்லையே என்ற நம்பிக்கையின்மை யேற்படுகிறது; உற்சாகங் குன்றிவிடுகிறது. "உலகமே கெட்டுப்போய் விட்டது; முஸ்லிம்களுக்குத் தகுதியான இடம் மறுமைதான்; இவ்வுலகம் காபிர்களுக்குரியது; இனி நான் எவ்வாறு பிழைக்கமுடியும்? என்ன தொழிலைச் செய்வேன்'' என்பன வாய தீய எண்ணங்களெல்லாம் கடன் பட்டாரின்மூளையில் உதிக்க வாரம்பித்துவிடுகின்றன.

எனவே, வீண் ஆடம்பரங்களையும் வீண் செலவுகளையும் விட்டுவிடுங்கள், சிக்கனத்தையும் வரவுக்குத்தக்க செலவையும் கடைப் பிடியுங்கள்; கடன் தொல்லையை ஒழித்து வியாபாரத் துறையிலீடுபட்டு "நாங்கள் மரித்த சமூகத்தினரல்ல, சொற்பகாலம் தூங்கிக்கொண்டிருந்தோம், இப்பொழுது விழித்துக் கொண்டோம், வியாபாரமில்லாமல் முஸ்லிம்களில்லை, முஸ்லிம்களில்லாமல் வியாபாரமில்லை என்ற விஷயம் இப்பொழுது மிருந்துகொண்டுதானிருக்கிறது.'' என்பதை உலகினுக்கு மெய்ப்பித்துக் காண்பியுங்கள்! சோம்பல், வேலையில்லாமை, பிச்சையெடுத்தல் என்பனபோன்ற இழி நிலைமையிலிருந்து விடுபடுங்கள்.

"வணக்கத்திற்கு எழுபது கிளைகளிருக்கின்றன, அவைகளில் மிகவும் சிறந்தது மார்க்கத்தில் அனுமதித்த முறைப்படி சம்பாதித்து உண்ணும் உணவாகும்'' என்றும், "மார்க்கத்தில் அனுமதித்த முறைப்படி பொருள் சேர்ப்பதை விரும்பாமலும், தனது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், தனது கடனை நிறைவேற்றிக்கொள்ளவும் பந்துக்களது பாத்தியதைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் கூடிய பொருளை ஹலாலான முறைப்படி தேடிக்கொள்ள விரும்பாமலுமிருக்கிறவரிடம் எவ்விதநன்மையுமில்லை''என்றும்நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ள ஹதீதுகளைக்கவனியுங்கள். இப்பொழுதும்காலம் தவறிப்போகவில்லை, நம்பிக்கையிழப்பதற்கு எவ்விதக் காரணமுமில்லை. இனியேனும் வியாபாரம் முதலியதுறைகளில் ஈடுபடுங்கள். இன்ஷா அல்லாஹ் சில நாட்களுக்குள் உங்களது பரிதாபகரமான இந்நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

நமது ஈமானுக்கும், மார்க்கத்திற்கும் அஸ்திவாரமாக இருக்கிற இறைவனது திருவசனங்களும், ஹதீதுஷரீபுகளும் நியாயமான முறைப்படி லாபம் சம்பாதிப்பதற்குரிய வழிகளை நமக்கு வற்புறுத்திக் கூறுகின்றன என்பதைச் சிந்தித்துப்பார்த்து அதனைக் கடைப்பிடியுங்க

ளென்றே யாம் வாசகநேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம். ஐரோப்பாவையும் ஜப்பானையும் கவனித்துப்பாருங்கள்! இன்று அந்நாட்டார்கள் எவ்வளவு கண்ணியமாகவும் செல்வாக்காகவும் இருந்து வருகின்றனர்? இவர்கள் மாதாவின் வயிற்றிலிருந்து பிறக்கும்போதே இவைகளை எல்லாம் கொண்டுவந்தார்களா? தங்களது முயற்சியாலும் உழைப்பினாலுமே முன்னணிக்குவந்தனர். நேற்றுவரை ஜப்பான் தேசத்தை ஒரு நாடாகக்கூட ஒருவரும் கருதாதிருந்தனர். அத்தேசத்தார்கள் வியாபாரத்துறையிலீடுபட்டு இவ்வளவு முன்னேற்றத்தையடைந்தனர். நாகரீகமடைந்த தேசத்தினருக்குச் சமமாக தோளோடு தோள் சேர்த்து அவர்கள் நின்றுகொண்டிருக்கின்றனர். இன்று நமது காலேஜ்களிலும் ஸ்கூல்களிலும் கல்விபயின்று வெளியேறும் மாணவர்கள் உத்தியோகப்பதவிகளைநாடி வீடுவீடாக அலைகின்றனர். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்கு "இல்லை" என்ற பதிலே கிடைக்கின்றது. இஸ்லாத்தின் இவ்விளவாலிபர்கள் தங்களது சித்தத்தைக் கொஞ்சம் மாற்றிக்கொண்டு வர்த்தகத்துறையிலீடுபடுவார்களாயின் தங்களது கல்வித்திறமையினால் வியாபாரத்தொழிலுக்கே பிரகாசத்தையளித்து விடுவர்.

தவிரவும், வியாபாரத்திற்கு அதிகமான கல்வித்திறமை இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. சாமான்யமான கல்வி ஏதேனும் ஒரு பாஷையிலிருந்தால் போதுமானது. ஆனால், வியாபாரத்திற்கு மூலதனம் இருக்கவேண்டியது அவசியம்தான். என்றாலும், சிலவியாபாரப்பிரமுகர்கள் தங்கள் ஆரம்பக்காலத்தில் ஒரு பைசாவுக்கும் கூட வகையில்லாமல் தங்களது சிக்கனத்தாலும், நாணயத்தாலும், நேர்மையாலும் சில காலத்திற்குப் பிறகு வியாபாரிகளின் முன்னணிக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, வியாபாரத்திற்கு மூலதனம் அவசியமேயாயினும், மூலதனமில்லாவிடில் வியாபாரத்தொழிலை நடத்தவே முடியாது என்ற ஏற்பாடில்லை. செல்வம் என்பதற்கு உழைப்பு என்பதும் ஒரு பொருளாகும். ஆகவே, சிலகாலம் உழைப்பதும், சிக்கனமாக இருப்பதும் மூலதனத்தைக் கொடுத்துவிடும். இவ்விதமான வியாபாரப் பிரமுகர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏராளமாக இருக்கின்றனர். என்றாலும், இந்தியாவில் இவ்விதமான பிரமுகர்கள் இல்லாமலில்லை.

முஸ்லிம்களுள்ளத்தில் அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா உன்னத நோக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளான். ஆகவே, அதைரியமடையவேண்டியதில்லை. ஆண்டவன் மீது நம்பிக்கை வைத்து இத்துறையில் இறங்க வேண்டியது அவசியமாகும். ஆனால், எந்த வேலையை ஆரம்பித்தாலும் முதலில் அது சம்மந்தமான சகல விபரங்களையும்பற்றி நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதில் உண்மையிலேயே அனுபவமுள்ளவர்களது ஆலோசனைகளையும் கேட்டுக் கொள்ளவேண்டும். பிறகு, ஒரு தொழிலைச்செய்வதாக உறுதிகொண்டால் மிகவும் உறுதியுடனும் ஊக்கத்துடனும் அத்தொழிலிலீடுபடவேண்டும். ஒரு காரியத்தைச் செய்வதாக முடிவுசெய்தபின் அப்புறம் அதனைச்செய்யலாமா செய்யவேண்டாமா என்று குழம்பிக் கொண்டிருக்கலாகாது. வேலையை ஆரம்பிக்கு முன் அதற்கென ஒருதிட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அத்திட்டத்தின்படி ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும். அத்தொழிலுக்காக எத்தனை ரூபாய்களை மூலதனமாக வைக்கவேண்டும் என்று நீங்கள் முடிவு செய்துள்ளீர்களோ அதில் நாலிலொருபங்கை முதலில் போடுங்கள். சொற்பகால அனுபவத்திற்குப் பிறகு பாக்கியுள்ள மூலதனத்தை இரண்டு மூன்று முறையில் போடுங்கள்.

உலகில் மனிதரது ஜீவனத்திற்கு நான்கு வகை உபாயங்களிருக்கின்றன. 1. விவசாயம், 2. கைத்தொழில், 3. வியாபாரம், 4. உத்தியோகம், ஆகியவைகளாகும். இவைகளில் விவசாயம் கௌரவமானதும் நேர்த்தியானதுமான தொழிலாகும். என்றாலும், இத்தொழில் செய்வதால் மட்டிலும் ஒருவர் கோடீஸ்வரராகி விட முடியாது. முதலாளியாகவும் ஆகிவிட முடியாது. கைத்தொழிலும் மிகவும் உன்னதமானதுதான். நாகரீக முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு இத்தொழிலே சிறந்த உபாயமாகும். என்றாலும் தொழிலுள்ளவர்கள் வியாபாரிகளது உதவியினாலேயே தங்கள் தொழிலை விருத்திசெய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயமும் கைத்தொழிலும் உன்னதமான தொழில்களாக இருந்தாலும் வியாபாரத்தின் துணை இல்லாமல் விருத்தியடைவதற்கில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து, உழைப்பது ஒருவரும் லாபமடைவது வியாபாரியும் என்று கூறுவது பொருந்தும். உத்தியோக மென்பதைப்பற்றிச் சொல்லவே

வேண்டியதில்லை. உத்தியோக மென்பதை அடிமைத்தன மென்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. உத்தியோகத்தை வகிக்கும் மனிதன் தனது சுயேச்சையையும், தனது காலத்தையும், தனது மனசாக்ஷியையும் தனது மூளையையும், தனது பலத்தையும் வேறொரு மனிதருக்குக் கிரயம் செய்து விடுகின்றான். காவற்காரன் முதல் வைசராய் உத்தியோகம் வரையில் யாவரும் அடிமைகளே யாவர். உழைப்பு, கஷ்டம் சம்பந்தப்பட்டவரையில் உத்தியோகம் வகிப்பவர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றுகின்றனர். ஆனால், பெரும்பாலும் அவர்களுக்குச் சரியான முறையில் பிரதிபலன் கிடைப்பதில்லை. உத்தியோகம் வகிக்கும் காலத்தில் ஹலாலான முறையில் சம்பாதிப்பதும் கூடக் கஷ்டமேயாகும். தனது சம்பளத்தினால் மாத்திரம் சீமான் தனத்தை அடைந்ததாக உதாரணங் காட்டுவதுமிகச்சிரமமேயாகும். இதனை அசாத்தியம் என்றுங்கூடக் கூறலாம். ஆகவே, ஜீவனோபாயத்திற்குரிய நான்கு விதப்பாட்டையில் வியாபாரத்தைப் போல் சிறந்ததொரு பாட்டை இல்லவே இல்லை. நாகரீக முன்னேற்ற மடைந்த உலகத்தின் சகல அஸ்திவாரங்களும் வியாபாரத்தின்மீதே இருக்கின்றன வென்பதை வாசக நேயர்கள் மறந்துவிடக்கூடாது.

ஆனால், வியாபாரத்துறையிலீடுபடும் அன்பர்கள் சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவைகள் வருமாறு :—

1. வியாபாரி தனது வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். வாக்குதத்தத்திற்கு மாறாக ஒருபோதும் நடந்துகொள்ளலாகாது.

2. அலக்ஷியமாக இருக்கக்கூடாது. பிறருடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாது. இயன்றவரை ஒவ்வொரு வேலையையும் தானே நேரில் செய்யவேண்டும்.

3. விற்பனைக்குரிய பொருள்களைக் கூடியவரையில் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கவேண்டும். எந்தக் காரியத்தைச் செய்ய முடியுமோ அந்தக் காரியத்தை அறைகுறையாகவிடக்கூடாது.

4. வர்த்தக இரகசியங்களை வெளியிடலாகாது. தம்மிடம் சரக்கு வாங்க வருகிற ஆசாமிகளிடம் பெருந்தன்மையாக நடந்துகொள்வதுடன், கடன் கொடுப்பதைப் பார்க்கினும் ரொக்க வியாபாரத்தையே சிலாக்கியமாகக் கருதவேண்டும்.

5. கொடுக்கல் வாங்கல் முதலியவைகள் தெளிவாக இருக்கவேண்டும். எல்லாவற்றையும் எழுதிக் கொள்வது உசிதமாகும். கணக்கு வகைபறுக்கள் மிகவும் ஒழுங்காகவும் பந்தோபஸ்தாகவுமிருக்கவேண்டும்.

6. தனது அலுவல்களைப் பூரணமாக அறிந்திருக்கவேண்டும். அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. தனது அலுவல்களில் கொஞ்சம் அஜாக்கிரதை காட்டினால் பின்னர் அதற்காகப் பெருத்த நஷ்டத்தையடையவேண்டியதேற்படும்.

7. மாதந்தோறும் கூடியவரை வரவு செலவு, லாப நஷ்டம் முதலியவைகளைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும்.

8. கோர்ட்டுக்கு வியவகாரம் செல்வதை இயன்றவரை தடுத்துக் கொள்ளவேண்டும். கோர்ட்டுக்குச் செல்லாமலிருக்க இயன்றவரை முயலவேண்டும். இறுதியாகக் கோர்ட்டுக்குச் செல்லாமலிருக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டால் முழுபலத்துடன் அதனைக் கவனிக்க வேண்டும்.

9. எல்லோரிடமும் மரியாதையாகப் பழக வேண்டும். அவசரப்படலாகாது. நீதியில்லாமல் நடந்து எவருக்கும் நஷ்டம் விளைவிக்கக் கூடாது.

10. தனது அலுவலையே கவனிக்கவேண்டும். அனாவசியமாக வேறு காரியங்களில் சிரத்தை கொள்ளலாகாது. சிறியோராயினும் பெரியோராயினும் எவரிடமும் நாணயமாக நடந்துகொள்ளவேண்டும். சொற்ப லாபத்திற்கு அதிகமான வியாபாரம் செய்யப் பழக வேண்டும். காலத்தை வீணாக்கக்கூடாது. பிறரிடமிருந்து வியாபார யுக்திகளைத் தெரிந்துகொள்வதில் மிகவும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.

இவ்விதமான முறைகளால் தொழிலை ஆரம்பித்த பின்னர் அதன் பயனை இறைவன்பால் ஒப்புவித்துவிடவேண்டும். இறைவனது நல்லுதவியால் விடியற்காலமெழுந்து தஹஜ்ஜுத் தொழுக மிகவும் முயலவேண்டும். இம்மை மறுமைஆகிய இரண்டும்கிடைப்பதற்கு இஃதொரு அரிய சந்தர்ப்பமாகும்; துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதற்குரிய வேளையுமாகும்.

ஓநாயும் ஆடும் ஒன்ருய் மேய்ந்தன.

நீதி அரசர்கள் ஆட்சியின் கீழ் பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தும் என்றும், ஓநாயும் ஆடும் ஒன்ருய் மேயும் என்றும், வருத்த காணம் முளைக்கும் என்றும் புராணக் கதைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. நீதியான ஆட்சியின் மாட்சியைக் குறித்து இவ்வாறு சொல்லப்படுவதேயன்றி உண்மையில் இவ்வாறு நிகழ்ந்ததில்லை. ஆதலின், இவ்விதமான ஒரு சம்பவம் இக்காலத்தில் நிகழுவதாக நீங்கள் கேள்விப்பட்டால் ஆச்சரியமடையாமலிருக்கமாட்டீர்கள். முஸ்லிம் கலீபாக்களில் ஒருவரான ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது ஆட்டு மந்தைகளுடன் ஓநாயுஞ் சேர்ந்து மேய்ந்து கொண்டிருந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது.

உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது "எங்களது ஆடுகளுக்கு ஓநாய்கள் இப்பொழுது எவ்விதச் சேதத்தையும் விளைவிப்பதில்லையே, இப்பொழுது கலீபாவாக இருப்பவர் யார்?" என்று ஆடு மேய்ப்பவர்கள் கூறிக்கொண்டிருந்தனர் என்பதாக மாலிக்குப்னுதீனர் (றஹ்.) அவர்கள் கூறி இருக்கிருர்கள்.

"நாங்கள் கிர்மானில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தோம்; ஓநாய்கள் எங்களது ஆடுகளுடன் சேர்ந்து வந்து மேய்ந்து கொண்டிருந்தன; ஒருநாள் ஒரு ஓநாய் ஒரு ஆட்டைத் தூக்கிக் கொண்டுபோய்விட்டது; அப்பொழுது நான் இன்று நீதியான கலீபா நிச்சயமாக இறந்து போனுர் என்று உடனே கூறினேன்; பின்னர், விசாரித்ததில் அன்றைய தினத்தில்தான் உமறுப்னுஅப்தில் அஜீஸ் (றஹ்.) இறந்து போனதாகத் தெரிய வந்தது" என்பதாக மூஸப்னு அஃபுன் (றஹ்) அவர்கள் கூறி இருக்கிருர்கள்.

இந்த ரிவாயத்துககளைக் கூறிய மாலிக்குப்னுதீனர் (றஹ்.), மூஸப்னு அஃபுன் (றஹ்.) ஆகியவர்கள் சாமான்யமான ஆட்டிடையர்களன்று. இவர்கள் இறைவனது மெஞ்ஞான வழிகளில் நடந்து ஆத்மார்த்தத் துறையில் அநேகம் படித்தரங்களைக்கடந்த வலிமார்களாவார்கள். இவர்கள் ஆத்மார்த்தத் துறையில் இவ்வுலக மக்களின் மனத்தைக் கவர்ந்து அவர்களை ஆட்சி புரிந்தவர்கள். ஒழுக்கம், சீர்திருத்தம் என்ற உலகில் ஜனங்களைச் சீராய் நடத்துவதற்கான பயிற்சியடைவான் வேண்டி இவர்கள் ஆடு மேய்க்கும் தொழிலைப் புரிந்தவர்கள். நபிமார்களும் கூட தங்களது ஆரம்ப காலத்தில் இவ்விதமான தொழில்களைப் புரிந்து பயிற்சியை யடைந்தனர். இவர்களை இடையர்கள் என்று கூறுவது தவருகும். "மேய்ப்பர்கள்" என்று கூறுவதே முற்றிலும் பொருத்தமானதாகும்.

இவ்வளவு நீதியாய் அரசாட்சி புரிந்த உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) என்பவர் இரண்டாவது கலீபாவான ஹஜ்றத் உமர் (றலி.) அவர்களது புதல்வரான ஹஜ்றத்ஆஸிம் (றஹ்.) அவர்களது கொள்பேரர் (மகளின் மகன்) என்பதையும், தமது கலீபாக்களில் பன்னிருவர் நீதிமான்களாகத் தோன்றுவார்கள் என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஹதீதுஷரீபிற்கேற்ப இவர் ஐந்தாமவர் என்பதாக உலக முஸ்லிம்கள் கருதுகின்றனர் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிருேம். இவருக்குமுன் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.), ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.), ஹஜ்றத் உதுமான் கனி (றலி.) ஆகியவர்கள் நீதிமான்களான கலீபாக்களாக இருந்தனர். இந்நால்வருக்கும் பிறகு நாயகம் (ஸல்.) அவர்களது கொள்பேரரான ஹஜ்றத் இமாம் ஹஸன் (றலி.) அவர்கள் கலீபாவாக வந்தார்களாயினும் "கிலாபத்தானது முப்பது வருஷம்தான்" என்பதாக தமது பாட்டனுர் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ள ஹதீதை அனுசரித்து கலீபா பதவியை ஏற்றுக் கொண்ட ஆறுமாதத்திலேயே தமது பதவியை ராஜினமாச் செய்து கலீபாப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்கள். ஆதலால், இவர்களை இறுதிவரை கலீபா பதவியை வகித்தவர்களது

கூட்டத்தில் கணிப்பதில்லை. ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்களது ஸஹாபிகளான இந்நால்வரது ஆட்சிக்குப்பிறகு அவ்வளவு நேர்மையும் நீதியுமுள்ள ஆட்சியானது ஹஜ்றத்உமறுப்னு அப்துல் அஜீஸ் (றஹ்.) அவர்கள் காலத்தில் தான் நடைபெற்றதால் அவரை குலபாயெ ராஷிதீன்களில் ஐந்தாவது நபராக ஜனங்கள் கருதிவருகிருர்கள்.

நீதியுள்ள இந்த கலீபா அவர்கள் ஹிஜ்ரீ 62-ம் வருஷத்தில் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி) அவர்களது பேத்தியின் வயிற்றில் அப்துல் அஜீஸுப்னுமர்வானுக்கு புதல்வராகப் பிறந்தார். அப்துல் அஜீஸ் என்பவர் கலீபா அப்துல் மலிக் என்பவருக்குப் பிறகு கிலாபத் பதவியை அடையவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், அவர் கலீபாவிற்கு முன்பே இறந்துபோனதால் கலீபாப் பதவியை அடைவதற்கில்லை. ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் சிறு குழந்தையாக இருந்தபோழ்து குதிரை உதைத்ததால் முகத்தில் காயமேற்பட்டு தழும்பு இருந்து கொண்டிருந்தது. ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள், “எனது சந்ததியில் ஒருவர் தோன்றுவார். அவரது முகத்தில் தழும்பு இருக்கும். அவர் பூமியில் நீதத்தை ஏற்படுத்துவார்” என்பதாகக் கூறிக்கொண்டிருந்தார்கள். இதுபோலவே ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களது பேரரான ஹஜ்றத் பிலாலுப்னு அப்துல்லாஹ் (றஹ்.) அவர்களது முகத்திலும் தழும்பு இருந்தது. ஆகவே, ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள்கூறிய முன்னறிவிப்பு இவராக இருக்கக்கூடுமென்று ஜனங்கள் எதிர்பார்த்தனர். ஏனெனில், ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்களது முன்னறிவிப்பு பலியாமற்போகாது என்பது அவர்களது நம்பிக்கை. ஆகவே, ஹஜ்றத் உமர்பாறூக் (றலி) அவர்களைப்போன்றவர் தோன்ருமல் கியாமத் திர்ப்பு நாளுண்டாகப் போவதில்லை என்று ஜனங்கள் கூறிவந்தனர். எனவே, ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கிலாபத் பதவியை ஏற்றுக்கொண்டபோது இவர்தாம் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களால் முன்னறிக்கை செய்யப்பட்டவர் என்று ஜனங்கள் கூறினர்.

மேலும், குராஸானிலுள்ள ஒரு பெரியார் சொற்பனத்தில் ஒருவர் முன்தோன்றி “பனூ உமய்யா வம்சத்தில் தழும்பு விழுந்தவர் கலீபாவாக ஏற்படும்போது நீர் அவரிடம் பைஅத்துச்செய்து அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்று கூறினாராம். இச்சொற்பனத்திற்கேற்ப அவர், கிலாபத் பதவிக்கு பனூஉமய்யா வம்சத்தினர் வரும்போதெல்லாம் அவருடைய அங்க அடையாளங்களை விசாரிப்பது வழக்கம். பின்னர், ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கலீபா பதவிக்கு வந்தபோது முன்னர் சொற்பனத்தில் கூறிய அதே பெரியார் மூன்று நாள் தொடர்ச்சியாகச் சொற்பனத்தில் தோன்றி “இப்பொழுது நீர்சென்று பைஅத்துச்செய்து கொள்ளும்” என்று கூறினர். அதன்பேரில் அவர் உடனே குராஸானிலிருந்து புறப்பட்டு வந்து கலீபா அவர்களிடம் பைஅத்துச் செய்தார்.

கலீபா அவர்களது தந்தை அப்துல் அஜீஸ் (றஹ்.) அவர்கள் எகிப்தில் கவர்னராக இருக்கும்போது, ஹிஜ்ரி 62-ம் வருஷத்தில் கலீபா உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் பிறந்தார்கள். தமது அருமைப் புதல்வர் கல்வி கேள்வியிற் சிறந்தவராக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தால் அவர் தமது புதல்வரை மதீன முனவ்வராவிற்கு அனுப்பிவைத்தார். ஆகவே, அவரது ஆரம்பக்காலம் மதீனவிலுள்ள புகஹாக்கள் அதாவது சட்ட அறிஞர்களிடம் கழிந்தது. பின்னர், மார்க்கக்கல்வியிற் றேர்ந்து மகாமேதாவியானர். அவருக்கு கலீபா பதவி கிடைக்கவில்லையானுலும் அவர் இமாம்களில் ஒருவராகவும் எல்லோரினும் பெரிய இமாமாகவும் இருந்திருப்பார் என்றும் அக்காலத்தில் கருதப்பட்டார்.

மதீனவில் இவர் உபைதுல்லாஹிப்னு அப்தில்லாஹ் (றலி.) அவர்களிடம் அனுப்பப்பட்டு அவரது மேற்பார்வையின்கீழ் பயிற்சியடைந்தார். “நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு நாயகம் (ஸல்.) அவர்களது தொழுகைக்கு ஒத்தவிதமாக உமறுப்னு அப்தில்அஜீஸ் (றஹ்.) அவர்கள்தான் தொழவைத்தார்கள். அதுமாதிரியான தொழுகையை வேறு எவருக்குப் பின்னுலும் நாங்கள் தொழவில்லை” என்று ஹஜ்றத் அனஸ் (றலி.) அவர்கள் கூறியதாக ஜைதுப்னுஅஸ்லம் (றஹ்.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிருர்கள்.

ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றலி.) அவர்கள் கலீபா பதவியை வகிப்பதற்குமுன் மிகவும் விலையுயர்ந்த நேர்த்தியான உடை

அணிந்துகொண்டிருந்தார். கலீபா பதவிக்கு வந்தபிறகு, உணவு, உடை முதலியவைகளில் பகீர்களைப்போல் நடந்து கொண்டார். சில சமயங்களில் ஒட்டுப் போட்டுத் தைத்த துணிகளையுங்கூட அணிந்திருந்தார். பிரபல அறிஞர்கள் ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றழ்.) அவர்களிடம் மாணுக்கர்கள் என்ற முறையில் வந்து கூடி இருப்பது வழக்கம் என்பதாக மைமூனுப்னு மஹ்ரான் என்பவர் கூறி இருக்கின்ருர். பிரபல ராவியான முதஜாஹிது (றழ்.) அவர்கள், "உமறுப்னு அப்தில் அஜீஸுக்கு நாங்கள் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் வந்தோம், ஆனல், அவரிடம் நாங்கள்தான் கற்றுக் கொள்பவர்களாகி விட்டோம்" என்று கூறி இருக்கிருர்.

இவரது தந்தை அப்துல் அஜீஸிப்னுமர்வான் மரித்தபோது இவர் மதீனமுனவ்வராவிற்ருனிருந்தார். இவரது தந்தையின் மரணத்தைக் கேள்விப்பட்டபின் அக்காலத்தில் கலீபாவாக இருந்த அப்துல்மலிக்கிப்னுமர்வான் இவரை திமிஷ்கு நகருக்கழைத்து தமது புதல்வி பாத்திமாவை விவாகம் செய்வித்தார். பிறகு, அப்துல்மலிக் மரித்தபின்னர் கலீபா பதவியை அடைந்த வலீத் என்பவர் இவரை மதீனமுனவ்வராவிற்கு கவர்னராக நியமித்தார். எனவே, இவர் ஹிஜ்ரீ 86 விருந்து 93 வரை மதீனவின் கவர்னராக இருந்தார். அநேகம் முறைகளில் ஹாஜிகளின் அமீர் என்ற முறையில் ஹஜ்ஜுச் செய்தார். இவர் மதீன கவர்னராக இருந்தபோது அங்குள்ள மார்க்கச் சட்ட அறிஞர்களைக்கொண்ட ஒரு சபையை யேற்படுத்தி அச்சபையின் ஆலோசனைப்படி நிர்வாகஞ் செய்துகொண்டிருந்தார். இவரது நிர்வாகத்தைக்குறித்து கலீபா வலீத் என்பவர் புகார் சொன்னதன்பேரில் ஹிஜ்ரீ 93-ம் வருஷத்தில் ஹஜ்ஜா ஜுப்னு யூஸுப் இவரை பதவியிலிருந்து நீக்கி திமிஷ்நகருக்கு அழைத்துக்கொண்டார்.

பின்னர், கலீபா வலீது தமது சகோதரர் சுலைமான் என்பவரை இளவரசர் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத் தமது புதல்வரை இளவரசராக்கிவிட விரும்பியபோது இந்த ஏற்பாட்டை உமறுப்னு அப்துல் அஜீஸும் அவரைச் சேர்ந்தவர்களும் எதிர்த்தனர். ஹஜ்ஜாஜுப்னுயூஸுப் முதலியவர்கள் இவ்வபிப்பிராயத்தை ஆதரித்தனர். இவ்வபிப்பிராயத்தை எதிர்த்ததற்காக ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றழ்.) அவர்கள் மூன்று வருஷகாலம் வரை சிறையிலிருக்க நேர்ந்து பின்னர் ஒருவரது சிபாரிஷின்பேரில் விடுதலை யடைந்தார். அப்பொழுது இளவரசாக இருந்த சுலைமானுப்னு அப்தில்மலிக் ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸின் இக்காரியத்திற்காக மிகவும் நன்றியுள்ளவராக இருந்ததுடன் பட்டத்திற்கு வந்தவுடன் அவரை முதன் மந்திரியாகவும் நியமித்துக்கொண்டார். பிறகு, அவர் மரணமடையும்போது தமக்குப் பின் கலீபா பதவியை அவர்தான் வகிக்கவேண்டுமென்று வஸிய்யத்துக் கட்டளை எழுதி வைத்தார்.

கலீபாவாக இருந்த சுலைமானின் மரணத்திற்குப் பிறகு அவரது கட்டளையை ஜனங்களிடம் பகிரங்கமாக வாசித்துக் காண்பித்தபோது தமக்குப் பின் கலீபாவாக இருக்க உமறுப்னு அப்தில்அஜீஸை நியமித்திருப்பதாகவும், அவருக்குப் பின் யஜீதுப்னு அப்தில்மலிக் கலீபா பதவிக்கு வரவேண்டும் என்றும் எழுதி இருந்தார். தம்மை கலீபாவாக நியமித்திருப்பதைக் கேட்டு ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றழ்) அவர்கள் "இன்னலில்லாஹி" (ஒரு கஷ்டம் அல்லது விபத்து ஏற்படும்போது இவ்வாக்கியத்தைக் கூறவேண்டுமென்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது,) என்று கூறினர். ஹிஷாமுப்னு அப்தில்மலிக் தம்மை கலீபாவாக நியமிக்காததைக் கேட்டு வருந்தி, "இன்னலில்லாஹி" என்று கூறினர். ஆயினும், உமறுப்னு அப்தில் அஜீஸுக்குப் பிறகு தமது சகோதரர் கலீபா பதவிக்கு வர இருப்பதைக் குறித்து ஒருவாறு ஆறுதலடைந்தார். ஜனங்கள் யாவரும் இந்நியமனத்தைக் குறித்துச் சந்தோஷமடைந்தனர். சுலைமானுப்னு அப்தில் மலிக்கை அடக்கஞ்செய்துவிட்டுத் திரும்ப வரும்போது இவரும் நடந்துவந்தார். ஆதலால், இவருக்குச் சவாரிக்காக அரசாங்க லாயத்திலிருந்து குதிரை கொண்டு வருவதாகக்கூறியபோது எனது சவாரிக்காக எனக்குச் சொந்தமாகவுள்ள கோவேறு கழுதை போதுமானது என்று கூறி அரசாங்கக் குதிரைகளில் சவாரி செய்ய மறுத்துவிட்டார். பின்னர், அரச மாளிகைக்கு அழைத்துச்செல்ல ஜனங்கள் விரும்பினர். அதனை அவர் மறுத்து "அங்கு காலஞ்சென்ற கலீபாவின் புதல்வரான அய்யூபுப்னு சுலைமான் தமது குடும்பத்துடன் வசித்து வருகிருர். ஆகவே, அவர்கள் அங்கி

ருக்கும் வரையான் எனது கூடாரத்தில் வசித்துக்கொள்வேன் என்று கூறிவிட்டார்.

இவ்வாறு இவர் திரும்பிவரும்போது இவரிடம் இவரது அடிமை சென்று தாங்கள் மிகத்துக்கமாக இருப்பதுபோல் தோன்றுகிறதே என்று வினவியதற்கு "இன்று இவ்வுலகில் ஒருவர் துக்கவாளியாக இருக்க அருகதையுள்ளவராக இருப்பாராயின் அவர் என்னைத் தவிர வேறு யாராகவுமிருக்க முடியாது. என்மீது சுமத்தப்பட்டுள்ள இந்தச் சுமையானது சொற்பமானதா? எனது கிரியைகளைப் பற்றிய ஓலை எழுதப்படுவதற்கும், அவைகளுக்காக நான் விசாரிக்கப்படுவதற்கும் முன்னர் நான் பாத்தியக்காரர்களுக்கு அவரவருக்குரிய பாத்தியதைகளைக் கொடுத்துவிட விரும்புகிறேன்." என்று கூறினர். பிறகு, அவர் தமது இல்லத்திற்கு வந்தபோது அவரது தாடி கண்ணீரினல் நனைந்திருந்தது. இதனைப்பார்த்த அவரது மனைவி திடுக்கிட்டு "தங்களுக்கு உடம்புக்கு ஏதேனும் அசௌக்கியமுண்டோ?" என்று வினவினர். அதற்கு அவர் "சுகம் எங்கே இனி இருக்க முடியும்? என்முதுகின் மீது முஹம்மது (ஸல்.) அவர்கள் உம்மத்துகளின் சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. பசித்தவர்கள், ஆடையில்லாதவர்கள், அநீதி செய்யப்பட்டவர்கள், சிறையில் வைக்கப்பட்டவர்கள், குழந்தைகள், வயோதிகர்கள், சந்தானவிருத்தியுள்ள ஏழைகள், முதலியவர்களைப் பற்றிய சுமைகளெல்லாம் என் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இவர்களில் எவருடைய பாத்தியதையேனும் அபகரிக்கப்படக்கூடாதே என்றும், நியாயத் தீர்ப்பு நாளில் என்னிடம் இதனைப்பற்றிக் கேள்வி கணக்குக் கேட்கும் போது யான் ஜவாபு சொல்ல வகையறியாமல் திண்டாடக்கூடாதே என்றும், நினைத்து அழுகின்றேன்" என்று பதில் கூறினர்.

இவர் கலீபாவான தன் பின்னர் தமது மனைவியான பாத்திமாவிடம் வந்து "நீ உனது ஆபரணங்களையெல்லாம் அரசாங்க பொக்கிஷத்திற்கனுப்பிவிடவேண்டும், இல்லையேல் உனக்கும் எனக்கும் பிரிவினைதான்" என்று கூறினர். உடனே, அவரது வாழ்க்கைத் துணைவியான பாத்திமா தமது ஆபரணங்களை எல்லாம் அரசாங்க பொக்கிஷத்திற்கு அனுப்பிவிட்டார். ஏனெனில், பாத்திமாவின் தந்தை கலீபாவாக இருந்தவர். தமது புதல்விக்கு அவரளித்த ஆபரணங்கள் யாவும் அரசாங்க பொக்கிஷத்திலிருந்து எடுத்து செய்தவைகள் என்பது அவரது அபிப்பிராயம். பிறகு, இவர் இறந்து யஜீதுப்னு அப்துல் மலிக் கலீபாவாக வந்த பின் தமது சகோதரியை யழைத்து "நீர் விரும்பினல் உமது ஆபரணங்களை அரசாங்க பொக்கிஷத்திலிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளலாம்" என்று தெரிவித்துக் கொண்டார். அதற்கு அவர் "நான் மனப்பூர்வமாக அரசாங்கப் பொக்கிஷத்திற்குக் கொடுத்துவிட்ட பொருளை உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்களுடையமரணத்திற்கு பிறகு நான் வாங்க இஷ்டப்படமாட்டேன்" என்று கூறி மறுத்துவிட்டார்.

அப்துல் அஜீஸிப்னுவலீத் என்பவர் சுலைமான் இறந்துபோனபோது அங்கிருக்கவில்லை; உமறுப்னு அப்தில் அஜீஸ் கலீபா பதவியை ஏற்றுக்கொண்டதும் அவருக்குத் தெரியாது. பிறகு, சுலைமான் மரித்த செய்தியை அறிந்து கலீபா பதவி தமக்கே கிடைக்கவேண்டும் என்று திமிஷ்கு நகரை நோக்கிப்படையெடுத்துவந்தார். நகரை அடுத்து வந்தபோது தான் அவருக்கு உமறுப்னு அப்தில் அஜீஸ் கலீபாவாகி இருக்கிற விபரம் தெரிந்தது. உடனே அவர் யுத்தத்தைக் கைவிட்டு தர்பாருக்கு நேராக வந்து மனப்பூர்வமாக ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து "தாங்கள் கலீபாவாக இருப்பது எனக்குத்தெரியாது" என்று தெரிவித்துக்கொண்டார். அதற்கவர் "நீர் கிலபாத் பதவிக்கும் அரசுரிமைக்கும் யுத்தம் செய்தால் நான் அதனைத்தடுப்பதற்காகப்படைகளை அனுப்பவேமாட்டேன்; எனது வீட்டிற்குச் சென்று நான் சும்மா இருந்து விடுவேன். ஏனெனில், முஸ்லிம்களுக்குள் பிளவேற்படுவதையும், சகோதரத் துவத்திற்குப் பங்கமேற்படுத்தும் காரியத்தையும் நான்விரும்பவே மாட்டேன்" என்று கூறினர். இதனைக் கேட்ட அப்துல் அஜீஸப்னுவலீத் "தங்களைத் தவிர வேறு யாரும் இந்தப் பதவிக்கு அருகதையுள்ளவராக நான் கருதவில்லை என்று பிரமாணம் செய்கிறேன்" என்று கூறினர்.

ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கிலபத் பீடத்திலமர்ந்ததும் ஹஜ்றத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களைக் குறித்து யாரும் தகாத வார்த்தைகள் கூறலாகாது என்று சுற்றறிக்கை விடுத்தார். இதற்கு முன் பனூ உமய்யா வம்சத்தினர் ஹஜ்

றத் அலீ (ரலி) அவர்களைத் தூஷணை செய்து கொண்டிருந்தனர். ஜும்ஆவின் குத்பாவிலும் கூட அவர்கள்மீது லஃனத்துச் செய்யாமல் விடுவதில்லை. ஹஜ்ஜாஜுப்னு யூஸுப் தக்பி அநியாயக்காரர் என்பது அவரது அபிப்பிராயம் ஆதலால், அவரிடம் உத்தியோகம் பார்த்த நிலவரி அதிகாரிகளையும், இதரர்களையும் ஹஜ்ஜாஜுடைய திட்டப்படி நடந்ததற்காக சுலைமான் கலீபாவாக இருந்த காலத்திலேயே உத்தியோகத்தைவிட்டு நீக்கிவிட்டார். குராஸான் கவர்னரான யஸீதுப்னு முஹ்லப் என்பவரை ஹஜ்றத் உமறப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கெட்டவராகக் கருதவில்லை என்றும், அவர் ஜுர்ஜான் மாகாணத்தில் வசூல் செய்த நிலவரிப் பணத்தை அரசாங்கப் பொக்கிஷத்திற்கனுப்பாமல் தமது சொந்தச் செலவில் செலவழித்து விட்டதால் அவரை உத்தியோகத்திலிருந்து அகற்றி ஹலப் (அலப்போ) நகரில் சிறைக் கூடத்தில் வைத்தார். அவருக்கு பதிலாக ஜர்ராஹுப்னு அப்தில்லாஹில்ஹுக்மீ என்பவரை குராஸான் கவர்னாக அனுப்பினார். கொஞ்ச காலத்திற்குப்பிறகு இவர் மீதும் புகார் கிளம்பிற்று. அதாவது அடிமைகளாக இருந்து உரிமை பெற்றவர்களை சம்பளமில்லாமலும் உணவுப் பொருள்கள் கொடுக்காமலும் ஜிஹாதுக்கு அனுப்பி வைத்தார் என்பதாகவும், திம்மிகள் முஸ்லிமாகிய பிறகும் அவர்களிடம் (கராஜ்) வரியை வசூல் செய்கிறார் என்பதாகவும் புகார் சொல்லப்பட்டது. ஆகவே, தொழுகையை நிறைவேற்றுபவர்களிடம் கராஜ் வரி வாங்கக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்தரவைக் கேள்விப்பட்ட திம்மிகள் கூட்டம் கூட்டமாக இஸ்லாம் மதத்தில் சேர்ந்தனர். இப் புதிய முஸ்லிம்கள்பால் ஜர்ராஹுப்னு அப்தில்லாவுக்கு மனச் சாந்தி இல்லாததால் இவர்கள் விருத்த சேதனம் செய்துகொண்டிருக்கிறார்களா என்று கவனித்து அப்புறம் கராஜ் வரியை மன்னித்து வந்தார். இவ்விபரம் நமது கலீபா அவர்களுக்குத் தெரிந்தபோது "நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹுதஆலாவின் பால் ஜனங்களை அழைப்பவர் என்ற முறையில் தான் நபியாக வந்தார்கள்; விருத்த சேதனம் செய்பவர் என்ற முறையில் நபியாக வரவில்லை என்று கூறி கண்டிப்பான உத்திரவின் மூலம் அவரது செய்கையைத் தடுத்ததுடன் அப்துர் ரஹ்மானிப்னு நயீம் என்பவரிடம் பொறுப்பை ஒப்புவித்துவிட்டுத் தம்மிடம் வரும்படியாகக் கட்டளையிட்டார். அவர் தம்மிடம் வந்தபோது "நீர் குராஸானை விட்டு எப்பொழுது புறப்பட்டீர்" என்பதாக விசாரித்தார். அதற்கவர் "றமலான் மாதத்தில்" என்பதாகப் பதில் கூறியதைக் கேட்டு "உம்மை அநியாயக்காரர் என்று ஜனங்கள் கூறியதில் குற்றமில்லை. அது உண்மையாகத்தானிருக்கிறது. நீர் நோன்பு மாதம் கழியும்வரை அங்கு தங்கி இருக்காமல் நீர் ஏன் வந்தீர். நீர் எனது கட்டளைப்படி நடப்பதில் கொஞ்ச தாமதம் செய்து அல்லாஹுதஆலாவினுடையவும் றஸூலுடையவும் கட்டளைகளை நிறைவேற்றி இருந்திருக்கவேண்டுமென்று கூறி அப்துர் ரஹ்மான் குஷைரீ என்பவரை வரி வசூலதிகாரியாகவும், அப்துர் ரஹ்மானிப்னு நயீம் என்பவரை யுத்த இலாக்காவிற்கும் தொழுகை இலாக்காவிற்கும் அதிகாரியாகவும் நியமித்துப் பிரஜைகளது முறையீட்டிற்குத் தக்க பரிகாரம் செய்தார்.

முஸல்லமத்துப்னு அப்தில் மலிக்கும் அவரது சைனியங்களும் உரோமர்களுடன் யுத்தம் செய்து, கான்ஸ்தாந்தி நோபிளை நீண்டகாலமாக முற்றுகையிட்டதன் பயனாக மிகவும் களைப்படைந்திருந்தனர். ஆதலால் அவர்களைத் திரும்ப அழைத்துக்கொண்டார். ஆதர்பீஜானில் பகைவர் படையெடுத்து வந்து முஸ்லிம்களுக்குப் பலத்த சேதத்தை விளைவித்திருந்தனர். ஆகவே, அவர்களைத் தண்டிப்பதற்காக இப்னு ஹாத்தம் பாபிலி என்பவர் தலைமையில் ஒரு சேனையை அனுப்பி பகைவர்களைத் தண்டித்து அங்கு சமாதானத்தை நிலவச் செய்தார். சிந்திலுள்ள ஜனங்களும் அங்குள்ள ராஜாக்களும் இந்தக் காலத்தில்தான் மனப்பூர்வமாக இஸ்லாமைத் தழுவினர். ஐரோப்பாவிலுள்ள உந்துலுஸ் மாகாணத்திலும் இது போன்ற நிலைமை ஏற்பட்டபோது அங்கும் தக்க படைகளை அனுப்பிப் பகைவர்களைத் தண்டித்து சமாதானத்தை ஏற்படுத்தினார். உரோமர்களுடன் நிகழ்ந்த யுத்தங்களிலும் அநேகம் வெற்றிகளையடைந்தார். 'கவாரிஜ்' என்ற வகுப்பினர் நாட்டில் குழப்பத்தை விளைவித்து கொள்ளை, வழிப்பறி முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தனர். இவர்களையும் தமது சமர்த்தால் அடக்கினார். அவரது அந்தரங்க சுத்தியை அக்கொள்ளைக் கூட்டத்தினர் வியந்து அவர் கலீபாவாக இருக்கும்வரை கலீபாவாவிற்குக் கெட்ட

பெயர் வரக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்வதில்லை என்று பிரமாணம் செய்து கொண்டனர்.

இஸ்லாத்தின் சகோதரத்துவம்

பனு உமய்யா வம்சத்தினர் தங்களிடம் அதிகாரமும் கிலாபத் பதவியும் இருப்பதை யுத்தேசித்து தங்கள் உரிமைக்கு அதிகமாகவே நல்ல ஜாகிர்களை அடைந்திருந்தனர். இதனால் இதர முஸ்லிம்களுக்குப் பாதக மேற்பட்டிருந்தது. என்றாலும், அரச குடும்பத்திற்கு விரோதமாகப் புகார் செய்ய தைரியமில்லாமல் ஜனங்கள் சகித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இவர் கலீபா பதவிக்கு வந்தவுடன் தமது மனைவியிடமிருந்த எல்லா நகைகளையும் அரசாங்க பொக்கிஷத்திற்கு அனுப்பிவைத்து விட்டார். பின்னர், பனு உமய்யா வம்சத்தினரை எல்லாம் தமது வீட்டில்ஒன்று கூட்டி "நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் 'பிதக்' என்றதோட்டமிருந்தது; அதிற்கிடைக்கும் வரவைக்கொண்டு ஹாஷிம் கிளையிலுள்ள குழந்தைகளைப் பராமரித்துக் கொண்டும், அவர்களிலுள்ள விதவைகளை விவாகம் செய்வித்துக்கொண்டு மிருந்தார்கள்; ஹஜ்றத் பாத்திமத்துஜ்ஜஹ்ரா (றலி.) அவர்கள் இந்தத் தோட்டத்தைத் தமக்குத் தரவேண்டுமென்று கேட்டபோது அதனைக் கொடுக்க நாயகம் (ஸல்.) அவர்கள் மறுத்து விட்டார்கள்; ஹஜ்றத் அபூ பக்கர் ஸித்தீக் (றலி.), ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) ஆகியவர்கள் காலத்திலும் அத்தோட்டம் அதே நிலைமையிலிருந்தது; கடைசியாக மர்வான் அதனைக் கைப்பற்றிக் கொண்டார்; இப்பொழுது அது எனக்கு வாரிசு பாத்தியத்தில் வந்திருக்கிறது; நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தமது அருமைப் புதல்விக்குக் கொடுக்க மறுத்த ஒரு பொருள் எனக்கு மட்டிலும் எவ்விதம் ஹலாலாகி விட்டது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை; ஆதலால், நான் உங்கள் எல்லோரையும் சாக்ஷியாக வைத்து அத்தோட்டத்தை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்தது போலவே வைத்து விடுகிறேன்" என்று கூறி அதனைத் திரும்பவும் முன் போலவே வைத்து விட்டார். பிறகு, பனு உமய்யா வம்சத்தினரிடமிருந்த நியாயமில்லாத எல்லா ஜாகிர்களையும் திரும்ப வாங்கி அரசாங்கச் சொத்தாகச் சேர்த்து விட்டார்.

பிறகு ஒரு நாள் பனு உமய்யா வம்சத்தினர் அனைவரையும் தமதில்லத்தில் ஒன்றுகூட்டி அவர்களிடம் பிரசங்கம் செய்கையில் "நான் உங்களைச் சேனைகளுக்குத் தளகர்த்தர்களாகவும், மாகாண அதிபதிகளாகவும் நியமிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? எனது வீட்டிலுள்ள விரிப்பானது உங்கள் கால்கள் படுவதால் அசுத்தமாகி விடுவதைக் கூட நான் விரும்பவில்லை. உங்களது நிலைமை மிகவும் வருந்தத்தக்கது. நான் எனது மார்க்கத்தினுடையவும் முஸ்லிம்களினுடையவும் நோக்கங்களுக்கு உங்களை எஜமானர்களாக எவ்விதம் நியமிக்கமுடியும்? என்று கூறினர். அப்பொழுது அவர்கள், நாங்கள் தங்களது பந்துக்கள் என்ற முறையிலேனும் விசேஷ பாத்தியதைக்கும் கௌரவத்திற்கும் அருகதையுள்ளவர்களில்லையா? என்பதாக வினவினர். அதற்கவர் "இவ்விஷயத்தில் நீங்களும் மிகத்தாழ்ந்த முஸ்லிம்களும் என்னிடத்தில் ஒரு துரும்பு அளவிற்குக்கூட வித்தியாசமாக இல்லை" என்று கூறினர். கிலாபத்தே ராஷிதாவிற்குப் பிறகு பனு உமய்யா வம்சத்தினரில் ஜனநாயகத் தன்மை முற்றிலும் ஒழிந்துவிட்டது; கைஸர், கிஸ்ரா ஆகியவர்களது அரசாங்கத்தில் நிகழ்ந்த அதே முடியாக்ஷித் தன்மை இவர்களிடமுமிருந்தது, ஆனால், நமது கலீபாவான ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் மறுபடியும் ஜனநாயகத்தன்மையை உயிர்ப்பித்தார்கள். ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.), உமர்பாறூக் (றலி.) ஆகியவர்களது கிலாபத் ஆட்சிகாலத்தின் ஒளி மறுபடியும் ஜனங்களிடம் பிரகாசித்தது. எனவே அநியாயமாகச் சொத்துக்களைச் சேர்த்து வைத்துக்கொண்டும், மற்றவர்களைப் பார்க்கினும் உயர்ந்த அந்தஸ்துகளைத் தங்களுக்கென ஏற்படுத்திக் கொண்டுமிருந்த உமய்யா வம்சத்தினருக்கு அவைகளை இழக்கவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. ஆகவே, அவர்கள், ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் தங்கள் குலத்திற்கே தீங்காகத் தோன்றியவராகக் கருதினர். என்றாலும், அவரது அந்தரங்க சுத்தியை அவர்கள் போற்றினர்.

ஒருமுறை பனுஉமய்யா வம்சத்தினர் தங்களது சொத்துக்கள் பறிமுதலாகாமலிருப்பதற்காக ஒரு யுக்திசெய்தனர். ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்களது

பூப்பியான (அத்தை) பாத்திமாபிந்து மர்வானிடம் சென்று தங்களுக்காக சிபாரிஷ் செய்யும்படியாக வேண்டிக்கொண்டார்கள். ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் தமது பூப்பியின் சொற்களை ரத்துச் செய்யும் வழக்கமுமில்லை; அவ்வம்மைக்கு மிகுந்த மரியாதைசெய்வதும் வழக்கம். ஆகவே, பாத்திமா பிந்து மர்வான் தமது சகோதரரின் புதல்வரான கலீபா அவர்களிடம் வந்து பனூஉமய்யா வம்சத்தினருக்காக சிபாரிஷ் செய்தார். ஆனால், தமது பூப்பியின் இந்தச் சிபாரிஷைக் கேட்டபின் தமது நோக்கங்களையும் நியாயங்களையும் எடுத்துக்கூறி அவ்வம்மையின் மனதில் நன்கு படும்படியாகச் செய்தார். ஆகவே அவர் "நான் உமது சகோதரர்கள் வற்புறுத்தியதன்பேரில்தான் உம்மிடம் சமாச்சாரத்தைக் கூறவந்தேன்; நீர் இவ்வளவு நல்ல எண்ணத்துடனும் அந்தரங்க சுத்தியுடனும் இருப்பதைக்கண்டு நான் ஒன்றும் கூறுவதற்கில்லை" என்று அவரிடம் சொல்லிவிட்டு வந்து பனூ உமய்யா வம்சத்தினரிடம் "நீங்கள் மகாபாறூக் (றலி.) அவர்களது பேத்தியை விவாகம் செய்து கொண்டீர்கள். ஆகவே, பாறூக்கிய உணர்ச்சி அவரது மக்களிடம் ததும்புகின்றது" என்று கூறிவிட்டார்.

பனூஉமய்யா வம்சத்தினர் இவ்வுபாயத்தின் மூலமாகத் தங்களது அசுத்தமான எண்ணத்தில் தோல்வியடைந்ததைப் பார்த்து மற்றொருயுக்தி செய்தனர். கலீபாவான ஹஜ்றத் உமறுப்னு அப்துல் அஜீஸ் (றஹ்.) அவர்களது அடிமைகளில் ஒருவருக்கு ஒரு ஆயிரம் தங்க நாணயம் தருவதாக ஆசைவார்த்தைகூறி அவருக்கு விஷத்தைக் கொடுக்கச் செய்துவிட்டனர். ஆகவே, விஷம் கொடுக்கப்பட்டதன் காரணமாக ஹிஜ்ரீ 101-ம் வருஷம் துல்கஅதா மாதம் 5ந் தேதி இவ்வுலகத்தை விட்டகன்றார். இவரது மரணத்தைக்கேட்டு உலகிலுள்ள சகல மதத்தினரும், சகல ஜாதியினரும் வருந்திக் கண்ணீர் வடித்தனர். கிறிஸ்துவ, யூதப்பாதிரிமார்கள் தங்கள் வணக்க ஸ்தலங்களில் இவரது மரணத்திற்காக வருந்தி மார் அடித்து அழுததுடன் "நீதியே உருவாமைந்த பெரியார் இன்று உலகைவிட்டு மறைந்தார்" என்பதாகக் கூறி அவரது ஆட்சியின் மாட்சியைப் போற்றினர்.

கலீபா அவர்களது தன்மைகளும் ஒழுக்கங்களும்

ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் தொழுகைக்காக மஸ்ஜிக்குச் சென்று கொண்டிருக்கும்போது அவருடன்ஒரு வயோதிகரும் அவரது கையைப் பிடித்துக்கொண்டு சென்றதை ரய்யாஹுப்னுஉபைதா என்பவர் பார்த்து, அவர்தொழுகையை நிறைவேற்றிவிட்டுத் தமது இல்லம்வந்தபோது "தங்களது கையைப் பிடித்துக்கொண்டு சென்ற அந்தக் கிழவர் யார்?" என்று வினவினர். இதனைக் கேட்டவுடன் ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் புன்னகைபுரிந்து கொண்டு "ஆகா! நீர் அவரைப்பார்த்து விட்டீரா? நீரும் கூடப் பெரியோர்களிலொருவராக இருக்கிறீர் என்பதை இப்பொழுதுதானுணர்ந்தேன். ஆகவே, அவர் யார் என்பதை உமக்குக் கூறிவிடுவதில் குற்றமொன்றுமில்லை. அவர்தான் ஹஜ்றத் கிலுறு அலைஹிஸ்ஸலாம வர்கள். நமது நாயகம் (ஸல்.) அவர்களது உம்மத்துகளின் நிலைமையைப்பற்றி என்னிடம் விசாரிப்பதற்காகவும், நீதியைக் குறித்தும்நியாயத்தைக் குறித்தும் எனக்குப் புத்திமதி கூறுவதற்காகவும் வந்தார்" என்பதாகக் கூறினார்.

ஒருமுறை ஒருவர் ஒரு சொற்பனங்கண்ட விபரத்தை கலீபா அவர்களிடம்வந்து பின்வருமாறு கூறினார்: நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு இடத்தில் வீற்றிருந்தார்கள். அவர்களுக்கு வலதுப்பக்கத்தில் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களும், இடப்பக்கத்தில் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களும், எதிரில் தாங்களும் இருந்தீர்கள். இரண்டு மனிதர்கள் ஒரு வழக்கைக் கொண்டு வந்தனர். நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களைப் பார்த்து, 'உங்களது கிலாபத் ஆட்சி காலத்தில் அபூபக்ர், உமர் ஆகியவர்களது அடிச்சுவட்டின்மீது நடக்கவேண்டும்" என்று கூறினார்கள். அப்பொழுது உமர்பாறூக் (றலி.) அவர்கள், அவர் அவ்வாறுதான் செய்துவருகிறார் என்பதை நான் காண்கின்றேன்" என்று கூறினார்கள் என்று நான் சொற்பனம் கண்டேன் என்பதாக ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றஹ்.) அவர்களிடம் கூறினார். இதனைக்கேட்டு ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றஹ்.) அவர்கள் அழுது கண்ணீர் வடித்தார்கள்.

அரசரின் குதிரைகளின் நிர்வாகி ஒருமுறை அவைகளின் செலவிற்காகப் பணங் கேட்டு வந்தார். அதற்கு அரசர் நீர் இந்தக் குதிரைகளைக் கொண்டுபோய் இயன்ற விலைக்கு விற்பனை செய்து அவைகளை அல்லாஹ்வின் பாதையில் தர்மஞ் செய்துவிடும்; பட்டினியும் பசியுமாக இருக்கிற இறைவனடியார்களுக்கு இவைகளால் நன்மையேற்படட்டும்; எனது சவாரிக்காக என்னிடமுள்ள கோவேறு கழுதை போதுமானது என்று கூறினர். அவ்விதமே செய்யப்பட்டது. ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் தமது குடும்பச் செலவிற்காக தினந்தோறும் இரண்டு திர்ஹம்களை அரசாங்கத்திலிருந்து படியாக வாங்கிக்கொண்டிருந்தார்.

ஒருமுறை கல்பஸத்துப்னு ஸயீதிப்னிஆஸ் என்பவர் ஹஜ்றத் உமறுப்னு அப்தில்அஜீஸ் (றஹ்.) அவர்களிடம் வந்து, தங்களுக்கு முன்னரிருந்த கலீபாக்கள் எங்களுக்கு வெகுமதிகள் அளித்துக்கொண்டிருந்தனர்; ஆனல், தாங்கள் கலீபா பதவிக்கு வந்து அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டீர்கள்; என்னிடத்தில் தற்போது மிகவும் சொற்பமான ஜாகீர்தானிருக்கிறது; தாங்களுத்தரவு கொடுத்தால் ஐப்தி செய்திருக்கிற பொருள்களிலிருந்து எனது குடும்பச் செலவிற்குப் போதுமான அளவு எடுத்துக்கொள்கிறேன்" என்று கூறினர். அதற்கு அவர் "ஜனங்கள் முகஸ்துதியின்மூலமாகவும் பொய்களை இட்டுக் கட்டியும் பனூஉமய்யா வம்சத்து கலீபாக்களிடம் நியாயமில்லாமல் ஜாகீர்களை வாங்கி இருந்தார்கள். நியாயமில்லாமல் வாங்கிய பணங்களை நான் விட்டு வைக்கப் போவதில்லை. ஆகவே, அவைகளை நான் ஐப்தி செய்து பொதுஜன நன்மைக்காக அரசாங்க பொக்கிஷத்தில் சேர்த்து விட்டேன். நான் வீணுகச் செலவு செய்பவனல்லன். நீர் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பது உமது முதல்தான். அல்லாஹு தஆலா அதில் உமக்கு விருத்தியையும் நன்மையையும் அளிப்பான். மரணத்தை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிரும். இதனல் நீர் கஷ்டத்திலிருந்தால் நீர் சுகமடைவீர். சுகத்திலிருந்தால் அது உமக்குக் குறைந்துவிடாது" என்று கூறினர்.

"பொய்யுரைப்பது நல்லதல்லவென்று நான் தெரிந்துகொண்ட காலத்திலிருந்து அப்புறம் நான் ஒருபோதும் பொய்யுரைத்ததில்லை" என்று உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) கூறியதாக இப்ராஹீம் ஸக்கூத்தி ரிவாயத்துச் செய்திருக்கிறுர்.

ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் இராக்காலங்களில் உலமாக்களையும், புக்கஹாக்களையும் ஒன்றுகூட்டி மரணத்தையும் கியாமத்து நாளையும் குறித்துப் பேசிக்கொண்டிருப்பார் என்பதாக அத்தாஉ (றஹ்.) அவர்கள் கூறி இருக்கிறுர்கள். ஒருநாள் அவர்கள் ஜனங்களுக்கு உபதேசம் செய்கையில் "ஜனங்களே! உங்களது அந்தரங்கக் காரியத்தைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள்! புறக் காரியங்கள் தானுக சீர்திருந்திவிடும். மறுமைக்காக நீங்கள் நற்காரியங்களைப் புரியுங்கள். இம்மைக்காக உங்களுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டிலும் செய்யுங்கள். உங்களது மூதாதையரை மரணம் பரீக்ஷித்துவிட்டதுஎன்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினர்கள்.

"முன்னேர்களான பெரியார்களது வழியைப் பின்பற்றுங்கள். அவர்கள் உங்களைப் பார்க்கினும் நல்லோர்களாகவும் அதிகம் தெரிந்தவர்களாகவும் திரு குர்ஆனைப் பலமாகப் பின்பற்றி நடப்பவர்களாகவும் இருந்தார்கள்" என்று அடிக்கடி கூறுவது வழக்கம். தமது புதல்வர் அப்துல்மலிக் இறந்துபோனபோது அவரது தன்மையைக் குறித்து அதிகம் புகழ்ந்துரைத்தார். அப்பொழுது முஸல்லமா என்பவர் "அமீறுல்மூமினீன் அவர்களே! அவர் ஜீவித்திருந்தால் அவரைத் தங்களுக்குப் பிறகு கலீபாவாக வரும்படி இளவரசராக்கி விடுவீர்களா?" என்று வினவினர். அதற்கவர் "இல்லை, ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டேன்" என்று கூறினர். "ஏன்" என்பதாக முஸல்லமா வினவியதற்கு "இறந்துபோன அவர் எனக்குத்தான் அவ்வாறு தோன்றினரா? அல்லது பொது ஜனங்கள் யாவரிடத்திலும் புகழத்தக்கவராகத் தோன்றினரா? என்று பார்க்கவேண்டும். ஏனெனில், தந்தையின் கண்ணுக்குப் புதல்வன் நல்லவனுகத்தான் தோன்றுவது வழக்கம். பிள்ளையின் மீதுள்ள பிரியத்தால் அவனிடமுள்ள உண்மையான கெட்ட தன்மைகள் தந்தைக்குத் தெரியமாட்டாது. ஆதலால், அதனை நிதானித்துத் தான் மதிக்கவேண்டும்" என்று கூறினர்.

ஒருமுறை அம்றுப்னுகைஸ் ஸக்கூத்தியை ஒரு படைக்குத் தளகர்த்தராக நியமித்து யுத்த முனைக்கு அனுப்பினர். அவரை வழியனுப்

பும்போது "அங்குள்ள நல்ல மனிதர்கள் கூறும் ஆலோசனைகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். கெட்டவர்களை இயன்றவரை மன்னிக்கவேண்டும். இங்கிருந்து போனவுடன் அவர்களை வெட்டவாரம்பித்து, இறுதியில் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளக்கூடாது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது போதனையை நன்கு ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். நடுத்தரமான முறையில் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் உமது அந்தஸ்துகளை அவர்கள் மறக்கமாட்டார்கள். உமது பேச்சுகளைக் கேட்பதற்கு ஆசைப்படுவார்கள்" என்று உபதேசித்தார்.

"நான் சிலசமயங்களில் கலீபா அவர்களுக்கு அதிருப்தியுண்டாகும்படியான செய்திகளைக் கூறுவதுண்டு. ஒரு புத்தகத்தில் "அரசர்களது கோபத்திற்கு அஞ்சவேண்டும்; அவர்களது கோபம் தணிந்தபிறகுதான் அவர்கள் எதிரில் செல்லவேண்டும்" என்பதாக எழுதி இருப்பதைப்பற்றி கலீபா அவர்களிடம் சம்பாஷணை நடந்தது. அப்பொழுது அவர் "ஸாலிஹே! என்னிடத்தில் அந்த விதியைக் கடைப்பிடிக்கவேண்டியதில்லை" என்பதாகக் கூறினர் என்று ஸாலிஹுப்னு ஜுபைர் (றஹ்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஒருமுறை மர்வானுடைய மக்களெல்லாம் கலீபா அவர்களது வீட்டிற்குச் சென்று, அவரது புதல்வரிடம் "தங்களுக்குமுன் எத்தனை பேர் கலீபாக்களாக வந்தார்களோ அவர்களெல்லோரும் எங்களுக்கு நன்கொடைகளையும் ஜாகீர்களையும் வழங்கினர். ஆனால், தாங்கள் கலீபாவாக வந்த பிறகு எங்களுக்கு இவைகளை ஹறாமாக்கிவிட்டீர்கள்" என்று கூறும்படியாகச் சொல்லி அனுப்பினார்கள். அதற்கு கலீபா அவர்கள் "நிச்சயமாக நான் எனது றப்புக்கு மாறு செய்வேனாயின் மகத்தான ஒரு நாளின் வேதனையை அஞ்சுகிறேன்" என்ற ஆயத்தை அவர்களிடம் சொல்லிக் காண்பிக்கும்படியாகத் தமது புதல்வரிடம் சொல்லி அனுப்பினர்.

ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்களது ஆட்சிகாலம் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களது ஆட்சி காலத்தைப் போல் மிகவும் குறுகியதாகவும் மதிக்கத்தக்கதாகவும் இருந்தது. அவரது ஆட்சி காலம் இரண்டு வருஷங்களும் ஐந்து மாதங்களுமே இருந்தது. என்றாலும், இஸ்லாமிய உலகிற்கு இஃதொரு வெற்றியான சுபிக்ஷகாலமாக இருந்தது. பனூ உமய்யா வம்சத்தினரின் ஆட்சியானது ஜனங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக உலகக் காரியங்களின்பாலும், கௌரவம் பெருமை ஆகியவைகளின்பாலும் இட்டுச் சென்று மறு உலகை மறக்கும்படிச் செய்து விட்டது. ஆனால், உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்) அவர்களது சொற்ப காலத்தை இவ் வாட்சியானது இத்தீங்குகளையெல்லாம் ஒரே யடியாக அடைத்து முஸ்லிம்களுக்குள் ஆத்ம சக்தியை உண்டுபண்ணிற்று. சுருங்கக் கூறுமிடத்து ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.), உமர்பாறூக் (றலி.) ஆகியவர்களது கிலாபத் ஆட்சியை இவர் திரும்பவும் உயிர்ப்பித்தார். தமது காரியங்களெல்லாவற்றையும் தமக்குக் கீழுள்ள அனைவரும் தவறாமல் பின்பற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. தமது நியாயமான காரியங்களில் தமக்கு உதவியாக இருக்கவேண்டுமென்றும், நியாயமில்லாத காரியங்களில் தம்மைப் பின்பற்றவேண்டும்என்றும் எதிர்பார்க்கவில்லை. தம்மை தந்தையைப் போலும் பிரஜைகளைத் தமது மக்களைப் போலுமே கவனித்தார். அவரது ஆட்சி சிந்து, பஞ்சாப், புகாரா, துருக்கிஸ்தான், சீனா முதல் மொரோக்கோ, உந்துலுஸ், பிரான்சு வரை பரவி இருந்தது. இவ்வளவு விஸ்தீரணமுள்ள அரசாங்கத்தில் எங்கும் அமைதியும் சமாதானமும் நிலவி இருந்தது. இவரது அரசாங்கத்தில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டதுடன் அவசியத்திற்குத் தக்க இதர அபிவிருத்திகளுமேற்பட்டன. தேசமெங்கும் ரஸ்தாக்கள் போடப்பட்டன. பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் முதலியவைகளேற்படுத்தப்பட்டன. அவருக்குப் பிறகு இன்றுவரை அவர் காலத்திலிருந்த நேர்மையும் நீதியும் நாட்டிலேற்படவே இல்லை.

முற்காலத்திலிருந்த பெரியார்களது தைரியமும் உறுதியும், பிரமிக்கத்தக்க அரும்பெரும் காரியங்களும் மக்களின் மனத்தில் ஒருவிதமான பயத்தையும் அன்பையும் உண்டாக்கி விடுகின்றன. ஹஜ்றத் உமறுப்னு அப்துல் அஜீஸ் (றஹ்.) அவர்கள் வபாத்தாகும்போது 39பிராயத்தையே அடைந்திருந்தார்கள். கலீபா பதவியை சுமார் 29 மாதங்கள் தாம் வகித்தார் என்றாலும், அவர் செய்த அரும்பெருங் காரியங்களால் இன்றளவும் முஸ்லிம் உலக மக்கள் அவரது திருநாமத்தைக் கேள்விப்படுங்

தோறெல்லாம் "றஹ்மத்துல்லாஹி அலைஹி" (ஆண்டவன் அவருக்குக் கிருபை செய்வானாக) என்று பிரார்த்திக்காமலிருப்பதில்லை.

எல்லாம் வல்ல இறைவன் ஹஜ்றத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (றஹ்.) அவர்கள் போன்ற நீதி மன்னரை இவ்வுலகில் மறுபடியும் உண்டாகச் செய்து நாட்டிற்கு நலன் செய்ய அருள்புரிவானாக. ஆமீன்.

புத்தகாலய இயக்கம்

கல்வி அபிவிருத்திக்கும், நாகரீக முன்னேற்றத்திற்கும் புத்தகாலயங்கள் (லைப்ரேரிகள்) மிகவும் உதவியாக இருக்கின்றன. ஆதலால், இக்காலத்தில் புத்தகாலயங்களை ஏற்படுத்துவதும், அவைகளை அபிவிருத்தி செய்வதும், புத்தகாலயங்களுக்குள் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதும் மிகத்துரிதமாக நடைபெற்று வருகிறது. இவ்வியக்கத்தின் பிரயோஜனத்தையும் இதனால் மக்களுக்கேற்படும் நன்மைகளையும் கவனித்து அரசாங்கங்களும்கூட இதற்கென தனி உத்தியோகஸ்தர்களை நியமித்து லக்ஷக்கணக்கான பணங்களைச் செலவிட்டுவருகின்றன. கல்வி அபிவிருத்திக்கும், ஏழைகள் இலவசமாகப் பல நூல்களை ஆராய்ந்து தங்கள் அறிவுகளைப் பெருக்கிக் கொள்வதற்கும் இவ்வியக்கம் மிகவும் பிரயோஜனகரமாகும். ஆதலின் இவ்வியக்கத்திற்காக அரசாங்கமும், தனிப்பட்ட மனிதர்களும் செலவிடும் தொகை வீண் போவதில்லை என்பது நமதபிப்பிராயம். புத்தகாலயங்களை ஏற்படுத்துவதன் நன்மையையும் பிரயோஜனங்களையும் பற்றி ஆங்காங்கு பிரசாரங்கள் புரியப்பட்டு வருவதால் அதனைக்குறித்து அதிகமாக எழுதுவதை நிறுத்திக்கொண்டு இதன் ஆரம்ப வரலாற்றையும், இவ்வியக்கத்தின் தற்போதைய நிலைமையையும் பற்றிச் சுருக்கமாக எழுத விரும்புகின்றோம். (ப-ர்)

கி. மு. 3500 வருஷங்களுக்கு முன் அதாவது இற்றைக்கு 5400 வருஷங்களுக்கு முன்பே புத்தகாலயங்களிருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்தில் காகிதங்களிருந்ததில்லையாதலால் செங்கல்களின் மீது புத்தகங்கள் எழுதி வைக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் ஆயிரக் கணக்கான கிரந்தங்களை அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யமுடியாததால் செங்கல்களில் எழுதிவைக்கப்படும் இக்கிரந்தங்களை மரப்பெட்டிகளில் அல்லது மட்பாண்டங்களில் வைத்து வணக்கஸ்தலங்களிலும் ஆசிரமங்களிலும் தனி அறையில் வைக்கப்பட்டு வந்தது. பின்னர், அரசர்கள் தங்கள் அரசாங்கங்கள் சம்பந்தமானவைகளைக் குறித்து எழுதி பத்திரப்படுத்தி பிரத்தியேகப் பொக்கிஷங்களாக வைத்து வந்தனர். நாளடைவில் இப்பொக்கிஷங்களில் இதரவிஷயங்களைப் பற்றிய கிரந்தங்களும் சேர்க்கப்பட்டன. கிறிஸ்து பிறப்பதற்கு 1300-வருஷங்களுக்கு முன் எகிப்தரசனான இரண்டாவது ஈம்ஸிஸ் என்பவர் காலத்தில் இவ்விதமான புத்தகாலயமொன்றிருந்ததாகவும், அதில் பற்பல விஷயங்களைப்பற்றிய கிரந்தங்களிருந்ததாகவும் தெரியவருகிறது. எகிப்து தேசத்திலுள்ள அலக்ஜாந்தரியா நகரில் டோலமீ அரசர்களது புத்தகாலயம் மிகப்பிரபலமடைந்திருந்தது. இதில் பற்பல தேசங்களிலுமிருந்து தருவிக்கப்பட்ட லக்ஷகணக்கான புத்தகங்களிருந்தன. உரோம அரசரான ஜூலிஸ்ஸிஸர் என்பவர் எகிப்தின் மீது படையெடுத்து வந்து இப்புத்தகாலயத்தின் பெரும்பாகத்தை நெருப்புக் கிரையாக்கிவிட்டார்.

பிறகு, காகிதம் கண்டுபிடிக்கப்பட்டபோது புத்தகங்களை எழுதுவது சுலபமாகிவிட்டது. என்றாலும், இவைகளை எழுதுவதில் அதிக காலதாமதமும் பணச்செலவும் ஏற்பட்டதால் புத்தகங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. மத்திய காலத்தில் ஐரோப்பாவிலிருந்த புத்தகாலயங்களில் புத்தகங்கள், சஞ்சிகைகள் அலமாரிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருந்ததால் புத்தகங்களைத் திருடுவோர் இவைகளைத் திருடிக்கொண்டு போய்விடுவார்களோ வென்றபயம் எந்நேரமுமிருந்து கொண்டிருந்தது. இப்புத்தகங்களைப் படிக்க விரும்புவோர் அவ்வலமாரி

களின் பக்கத்திலிருந்தே அவைகளைப் படிக்க வேண்டு மென்ற நிர்ப்பந்தமிருந்தது. அதிலும் இப்புத்தகாலயங்கள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவாகத் திறந்து விடப்பட்டிருக்கவில்லை. பிரபலஸ்தர்கள் மட்டிலுமே இவைகளைப் பார்வையிட முடியும்.

பின்னர், அச்சுக்கூடங்களேற்பட்டு கல்வி அபிவிருத்தி அதிகமேற்பட்ட பின்னர் இப் புத்தகாலயங்களில் பெரும்மாறுதல் களேற் பட்டன. கி. பி. 19-வது நூற்றுண்டிலேற் பட்ட ஜனநாயக உணர்ச்சியினுல் இவைகளின் முறை அடியுடன் மாற்றப்பட்டது. பொது ஜனங்களும் புத்தகாலயங்களின் மூலமாக நன்மையடைய வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஆகவே, பொது ஜனங்களுக் கென புத்தகாலயங்கள் பல ஏற்படுத்தப்பட் டன. இவைகளின் ஜாப்தா ஏற்படுத்தும் முறை, இவைகள் கிடைக்குமிடங்கள், இவைக ளது கிரயங்கள் முதலியவைகளைப் பற்றிய தகவல்களும் கூட இப்புத்தகாலயங்களில் ஏற் படுத்தப்பட்டன. இதன் பயனுக இது ஒரு தனிக்கலையாகவே மாறிற்று. பின்னர், சர்வ கலாசாலைகளில் இவைகளைப்பற்றிப் போதிப் பதற்கென தனி ஸ்தாபனங்களேற்பட்டன. இறுதியாக உலகப்பிரக்யாதிபெற்ற ஆங்கில நூலாசிரியரான கார்லைல் "இப்புத்தகாலயங் கள் தாம் உண்மையான கல்விச்சாலை; இவை களின் பரிக்ஷையில் பயமில்லை; இங்கு மனிதன் தனது திறமையைத் தானுகவே அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்." என்பதாகக் கூறி, இதனை அபிவிருத்தி செய்வதை ஆதரித்திருக் கிறுர். ஆகவே, பற்பல தேசங்களிலும் இவை கள் எவ்வாறு அபிவிருத்தியடைந்து பரவின, இவைகளால் பொதுஜனங்களுக்கு எவ்வளவு நன்மை ஏற்படுகின்றன என்ற விபரத்தைப் பற்றிச் சுருக்கமாக ஈண்டு கூறுவாம்.

அமேரிக்கா

அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளில்தான் புத்தகாலயங்கள் உலகில் வேறெங்குமில்லாத அத்துணை அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. 1876-வது வருஷத்தில் புத்தகாலயங்களின் சங்க மொன்றேற்பட்டது. மிகவும் குறைந்த செலவில் மிகவும் அதிகமான ஜனங்களுக்கு கல்வி பயிற்றுவிப்பதுதான் இச்சங்கத்தின் முதன்மையான நோக்கம். 1850-ம் வருஷத் தில் அமெரிக்கா முழுவதிலும் 644-புத்தகால யங்கள் தானிருந்தன. அவைகளிற் சிலவற்றில் பொதுஜனங்கள் அனுமதிக்கப் படுவதில்லை. ஆனுல், இப்பொழுது 6500-பிரமாண்டமான புத்தகாலயங்கள் பொதுஜனங்களது உபயோ கத்திலிருந்து வருகின்றன. இவைகளுக்கென 9-கோடி ரூபாய்கள் வருஷந்தோறும் செலவு செய்யப்படுகின்றன. இப்புத்தகாலயங்களி லிருந்து 24-கோடி புத்தகங்கள் ஜனங்களிடம் படிப்பதற்காகக் கொடுக்கப்படுகின்றன. அங் குள்ள ராக்பெல்லர்போன்ற கோடீஸ்வரர் கள் இவைகளின் அபிவிருத்திக்காக லக்ஷக் கணக்கான திரவியங்களை நன்கொடை யளித் துள்ளார்கள். இங்குள்ள முனிசிபாலிட்டிகள் புத்தகாலயங்களுக்காக ஜனங்களது வரு வாயில் பவுன் ஒன்றுக்கு ஒரு பென்னி வீதம் வரிவசூல் செய்கின்றன. கிராமங்கள்தோறும் புத்தகாலயங்களேற்படுத்தப் பட்டிருக்கின்றன.

இங்குள்ள புத்தகாலயங்களில் மிகப் பெரிது வாஷிங்டன் நகரிலுள்ள "காங்கிரஸ் லைப்ரேரி" யாகும். இதில் ஏறக்குறைய 40-லக்ஷம் புத்த கங்களிருக்கின்றன. இதன் கட்டிடத்திற்காக 2-கோடிக் கதிகமான திரவியங்கள் செலவு செய்யப் பட்டிருக்கின்றன. இத்தேசத்தில் பிரசுரமாகும் நூல்களில் இரண்டு பிரதிகள் இப்புத்தகாலயத்திற்கு இலவசமாக அனுப் பப்படுகின்றன. இதனை யல்லாமல் வருஷந் தோறும் அரசாங்கத்தினர் இப்புத்தகசாலைக் கென்று 70-லக்ஷம் ரூபாய்களைச் செலவு செய் கின்றனர். இப்பொழுது வாஷிங்டனில் "ஷேக் ஸ்பியர் லைப்ரேரி" ஏற்படுத்துவதற்காக ஒரு வர் 350-லக்ஷம் ரூபாய்களைத் தர்மமாகக் கொடுத்திருக்கிறுர்.

இங்கிலாந்து

கி. பி. 1608-ம் வருஷத்தில் நார்விச் என் னும் நகரில் முதல் முதலாக பொதுஜனங்களுக் கென புத்தகாலய மேற்படுத்தப்பட்டது. பின்னர் 1709-ல் "புத்தகாலயச் சட்டம்" இயற்றப்பட்டது. பிறகு, 1850-ல் மற்றுெரு சட்ட மியற்றப்பட்டது. இதன் பயனுக, ஒரு பவுன் வருவாயுள்ளவரிடம் அரை பென்னி விகிதம் வரிவசூல் செய்துகொள்ள முனிசி பாலிட்டிகளுக்கு அதிகார மளிக்கப்பட்டது. அக்காலத்தில் இச்சட்டத்தை எதிர்த்துப் பல மாகப் பிரசாரம் செய்யப்பட்டது. "எழுதப் படிக்க வசதி ஏற்பட்டுவிட்டால் கீழ்தர வகுப் பினரின் அறிவு பெருகிவிடும், புத்த காலங்

களில் ராஜீய விஷயங்களைப் பற்றிய விவாதங்கள் நடைபெற வாரம்பித்துவிடும், தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளது அதிகாரங்களைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்" என்று கூறி இச்சட்டத்தை எதிர்த்தார்களாயினும், இதனைச் சட்டமாக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்த மிஸ்டர் வில்லியம் ஈவார்ட் என்பவர் தக்க மறுமொழிகூறிப் பலமாக ஆதரித்தார். ஆகவே, அது சட்டமாகி விட்டது. அதற்குப் பிறகு இது சம்மந்தமாகப் பல சட்டங்கள் அடிக்கடி இயற்றப்பட்டுக் கொண்டே இருந்தன. 1855-ம் வருஷத்தில் 1 பவுன் வருமான முள்ளவர்களுக்கு 4 பென்னி வீதம் வரி ஏற்படுத்தப்பட்டது. சென்ற 1919-ம் வருஷத்தில் புத்தகாலயத்திற்காக வரி வசூல் செய்யும் சட்டத்தை ரத்துச்செய்து முனிசிபாலிடிகளுக்கு விசாலமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன.

இவ்வரிகளின் மூலமாக எதிர்பார்த்த அளவிற்குப் பணம் கிடைக்கவில்லை. ஆதலால், புத்தகாலயங்களை அபிவிருத்தி செய்ய முடியாமற் போனதுடன் அவைகளுக்கான கட்டிடங்களை நிர்வகிப்பது கூட சிரமமாக இருந்தது. ஆகவே, வெகுகாலம்வரை அரசாங்கமும் புத்தகாலயங்களுக்குப் பொருளுதவி செய்து கொண்டிருந்ததாயினும் இதற்கென நிரந்தரமான திட்டம் எதுவும் இருக்கவில்லை. ஆனால், இக்குறையை ஸ்காட்லண்டிலுள்ள ஒரு கொடைவள்ளல் நிவர்த்தி செய்தார். இவரது பெயர் ஆண்டிருகார் நேகி என்பதாகும்.

இவர் 1835-ம் வருஷத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். 1848-ல் தமது பெற்றோர்களுடன் அமெரிக்காவிற்குப் பிழைக்கச் சென்றார். முதலில் ஒரு கம்பெனியில் சொற்ப சம்பளத்திற்கு அமர்ந்தார். பிறகு, வெகு சீக்கிரத்தில் அக்கம்பெனிக்கு மானேஜரானார். பிறகு, எண்ணெய் தொழில் ஆரம்பித்து பல கோடி திரவியங்களைச் சம்பாதித்தார். இவர் தம்முடைய இச்செல்வத்தை மிகவும் முக்கியமானதொரு பொது ஜன நன்மைக்குச் செலவிட்டார். இதன் பயனாக உலகம் முழுவதும் இவரைப்போற்றுகிறது. சென்ற 1913-ல் புத்தகாலயங்களைக் கட்டுவதற்காக இங்கிலாந்திற்கு 3 கோடி ரூபாய்கள் தானமீந்தார். இதனால் 380 புத்தகாலயங்கள் கட்டப்பட்டன. ஏழைமாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காக 3 கோடி ரூபாய்களைக் கொடுத்தார். தமது தாய் நாடாகிய ஸ்காட்லண்டில் "யூனிவர் ·ஸிட்டி பண்டு" ஏற்படுத்தினார். இதே அளவு தொகையில் அமெரிக்காவில் "கார்னேகி இன்ஸ்டிடியூஷன்" ஏற்படுத்தி உயர்தரக் கல்விக்காக தனி ஸ்தாபன மேற்படுத்தினார். பிறகு, இதே அளவு தொகை கொடுத்து அமெரிக்காவிலுள்ள சர்வகலாசாலைகள், ஸ்கூல்கள் முதலியவைகளிலுள்ள உபாத்தியாயர்களுக்கு பென்ஷன் கொடுக்க 1905-ல் ஏற்பாடு செய்தார். பிறகு 34 கோடி 50 லக்ஷம் ரூபாய் கொடுத்து இதே மாதிரிக் காரியத்திற்காக "கார்னேகி சங்கம்" ஏற்படுத்தினார். 1919-ம் வருஷத்தில் அவர் மரித்தபோது தர்மகாரியங்களுக்காக மொத்தம் 105 கோடி ரூபாய்களைச் செலவு செய்திருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது.

அவர் அமெரிக்காவிற்கு ஏழைப் பையன் என்ற முறையில் சென்றபோது கர்னல் ஆண்டர்ஸன் என்பவர் அவரை முதன்முதலாகப் புத்தகாலயத்தில் வைத்தார். அப்புத்தகாலயத்தில் பெரும்பாலும் ஏழைப் பையன்களே வந்து படித்துச் சென்று கொண்டிருந்தனர். ஆண்டர்சனினது நல்லெண்ணத்தைக் கண்டு இவர் வியந்ததுடன் இறைவன் தமக்குச் செல்வத்தைக் கொடுத்தால் இவ்விதமான காரியங்களிலேயே செலவு செய்வேன் என்று பிரதிக்ஞை செய்து கொண்டார். இறைவன் இவரது நோக்கப்படி ஏராளமான திரவியத்தைக் கொடுத்தான். இவர் தமது பிரதிக்ஞைப்படி புத்தகாலயங்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தார். இவரது நாமம் புத்தகாலயங்களது சரித்திரத்தில் என்றும் அழியாமலிருந்து வரும். இவர் தமது மரண உயிலில் "நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கிற வேலை இனி மேலும் நடைபெற்று வரவேண்டுமென்பது எனது விருப்பம்" என்பதாக எழுதிவைத்திருந்தார். ஆகவே, அவரது செல்வங்களை நிர்வகிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிரஸ்டு கமிட்டியார் அதனைப் பூரணமாக நிறைவேற்றி வருகின்றனர். உலகிலுள்ள எல்லா தேசங்களுக்கும் அவரது திரவியம் கல்வி அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளுக்கும் வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள்மதிப்புள்ள புத்தகங்கள் "கார்நேகி இன்ஸ்டிடியூஷனி" லிருந்து இலவசமாக அனுப்பப்படுகின்றன.

1877-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் புத்தகாலயங்களின் சங்கம் நிருவப்பட்டது. இதன் பயனுக அரசாங்கமும் தனது பொக்கிஷத்தைத் திறக்கவேண்டிய அவசிய மேற்பட்டது. இப்பொழுது வருஷந்தோறும் இவைகளுக்கென அரசாங்கம் 3 கோடி ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது. லண்டன் சர்வகலாசாலையில் இக்கலையைப் போதிப்பதற்கென்று தனி இலாக்கா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. லண்டன் நகரில் மாத்திரம் 10 ஆயிரம் புத்தகங்களுக்கு குறையாத 150 புத்தகாலயங்களிருக்கின்றன. இவைகளில் "பிரிட்டிஷ் மியூஸியம்" புத்தகசாலை மிகவும் முக்கியமானது. அதில் 33 லக்ஷத்திற்கதிகமான புத்தகங்களிருக்கின்றன. இவைகளில் கீழ்நாட்டு கிரந்தங்களில் அச்சிடப்பட்டவை ஒரு லக்ஷமும், கையேட்டுப் பிரதிகள் 16 ஆயிரமுமிருக்கின்றன. இப்புத்தகங்களின் ஜாப்தாக்கள் 1200 வால்யூம்களுள்ள புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் எத்தனை புத்தகங்கள் அச்சிடப்படுகின்றனவோ அவைகளில் ஒரு பிரதி இப்புத்தகாலயத்திற்கு தவருமல் வந்து சேர்ந்துவிடுகின்றன. அரசாங்கத்தின் சட்டப்படி புத்தகங்கள் அனுப்பப்படுகின்ற இவ்வாருன புத்தகாலயங்களுக்கு "காபிரைட் டிபாஸிட் லைப்ரேரி" என்று பெயர். இப்புத்தகாலயத்திற்கு தினந்தோறும் 50 அல்லது 60 புதிய புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இப்புத்தகாலயத்திற்கு அரசாங்கத்தினர் வருஷந்தோறும் 32 லக்ஷம் ரூபாய் செலவு செய்கின்றனர்.

லண்டன் நகரில் இவ்விதமான புத்தகாலயங்கள் இன்னும் பல விருக்கின்றன. அந்தகர்களுக்கென ஒரு புத்தகாலயம் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் அவர்கள் படிக்கத்தகுந்த முறையில் 124 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. லண்டனிலுள்ள இந்தியா ஆபீஸ் புத்தகாலயத்தில் சமஸ்கிருதம், பாரசீகம், அறபி ஆகிய பாஷைகளில் 35 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. ஆக்ஸ்போர்டு நகரிலுள்ள பிரபல புத்தகாலயத்தில் சமஸ்கிருத பாஷையில் 12 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன.

பிரான்சு

இங்குள்ள எல்லாப் பெரிய பட்டணங்களிலும் முனிசிபாலிட்டியால் புத்தகாலயங்களேற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாரிஸ் நகரில் உலகிலுள்ள புத்தகாலயங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய புத்தகாலயமிருக்கிறது. இதற்கு "பிப்லியூத்திக் நேஷனல்" என்று பெயர். இது 1593-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 40 லக்ஷத்திற்கு அதிகமான புத்தகங்களிருக்கின்றன. பாரிஸிலுள்ள புத்தகாலயத்தில் சமஸ்கிருத பாஷையில் 12 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. பிரான்சு முழுவதிலும் 111 பெரிய புத்தகாலயங்களிருக்கின்றன. இவைகளில் மொத்தம் 2 கோடி புத்தகங்களிருக்கின்றன.

ஜேர்மனி

ஐரோப்பாவிலுள்ள வேறெந்த தேசத்திலும் இத்தேசத்தில் பிரசுரிக்கப்படுகிற அத்தனை புத்தகங்கள் பிரசுரிக்கப்படுவதில்லை. இங்குள்ள புத்தகங்களும் மிகமலிவாகவே இருக்கின்றன. ஆகவே, புத்தகாலயங்களின் எண்ணிக்கையில் இத்தேசம்தான் ஐரோப்பாவில் முதல் நம்பராக இருக்கிறது. பெர்லினிலுள்ள அரசாங்க புத்தகாலயம்தான் இத்தேசத்திலேயே மிகப் பெரிய புத்தகாலயம். இதில் முப்பது லக்ஷம் புத்தகங்களிருக்கின்றன. வருஷந்தோறும் 50 ஆயிரம் புதிய புத்தகங்கள் இங்கு வந்து சேருகின்றன. இவைகளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் 25 ஆயிரமாகும். இவைகள் வைக்கப்பட்டுள்ள கட்டிடம் 13 அடுக்குள்ள மெத்தையாகும். இதன் விஸ்தீரணம் 2 லக்ஷம் சதுர அடி. இங்குள்ள புத்தகங்களின் ஜாப்தா ஒரு ஆயிரம் வால்யூம்களைக் கொண்டது. இண்டக்ஸ் முதலியவைகளைப் பற்றிய விபரம் எழுதப்பட்டிருப்பது 3 ஆயிரம் வால்யூம்களுள்ளது. அதிலும் வருஷந்தோறும் 90 வால்யூம்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இங்கு 320 பேர்கள் உத்தியோகம் பார்க்கின்றனர். இவர்களில் 76 பேர்கள் பேரறிஞர்கள். இங்கு சமஸ்கிருத பாஷையில் 40 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. முனிசிபாலிட்டிகள், சர்வகலாசாலைகள் ஆகியவைகளிலுள்ள புத்தகாலயங்களைத் தவிர பொது ஜனங்களுக்காக ஜெர்மனி தேசம் முழுவதிலும் 160 புத்தகாலயங்களிருக்கின்றன. இவைகளில் சுமார் 3 கோடி புத்தகங்களிருக்கின்றன. 1898-ம் வருஷத்தில் தான் இங்கு புத்தகாலயங்களின் அபிவிருத்தி ஆரம்பமாயிற்று. 1900-வது வருஷத்தில் புத்தகாலயங்களின் சங்கமேற்பட்டது.

இத்தாலி

இங்கு 1893-வது வருஷத்திலிருந்து புத்தகாலயங்களின் அபிவிருத்தி ஆரம்பமாயிற்று. இப்பொழுதுள்ள பாஸிஸ்ட் அரசாங்கம் இதில் விசேஷ கவனஞ்செலுத்தி வருகிறது. இவைகளை கவனிப்பதற்காக அரசாங்க டைரக்டர் ஜெனரல் ஒருவரை நியமித்திருக்கிறது. இவைகளில் உத்தியோகம் வகிப்பவர்களுக்கு பிரத்தியேகமாய் கல்வி புகட்டுவதற்காக ஒரு ஸ்கூலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு 4500-புத்தகாலயங்களிருக்கின்றன. இவைகளில் ரோமாபுரியிலுள்ள தேசிய புத்தகாலயம் மிகப் பெரிது. உரோமன் காத்தோலிக் மதகுருவான போப் ஏற்படுத்தி இருக்கும் புத்தகாலயத்தில் 4-லக்ஷம் புத்தகங்களும், 60-ஆயிரம் கையேட்டுப் பிரதிகளு மிருக்கின்றன. இப்புத்தகாலயத்திற்கு ஐரோப்பா முழுவதிலும் அதிக மதிப்பிருந்துவருகிறது.

ருசியா

போல்ஷவீக் அரசாங்கம் ருசியாவின் நிலைமையைத் தலைகீழாகப் புரட்டிவிட்டது. கல்வி விஷயத்தில் இத்தேசம் ஐரோப்பிய தேசங்களெல்லாவற்றிலும் மிகவும் பின்னடைந்திருந்தது. ஆனால், பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் இது மிகவும் முன்னேற்ற மடைந்துவிட்டது. "கல்வி அறிவற்றவர்கள் வெற்றியடைய முடியாது" என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். "பொதுஜனங்களிடம் கல்வி அபிவிருத்தி ஏற்படாதவரையில்பொருளாதார முன்னேற்றமும் ஒத்துழைப்பும் உண்மையான ராஜிய சுதந்திரமும் ஏற்படுவது முடியாத காரியம்" என்று ரஷ்ய சர்வாதிகாரியான காலஞ்சென்ற லெனின் 1921-ல் கூறினர். ஆகவே, முதலாவதாக கல்வி அபிவிருத்திக்காக இங்கு முயற்சி செய்யப்பட்டது. 1934-க்குள் ருசியாவில் எழுதப்படிக்கத் தெரியாதவர் ஒருவருமே இருக்கக்கூடாது என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதில் வெற்றியுமடைந்தது. அரசாங்கத்தின் கல்வி இலாக்கா, புத்தகாலயங்களை அமைப்பது சம்பந்தமான கல்வியையும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமெனச் சட்டமேற்படுத்தியுள்ளது. தற்போது இத்தேசத்தில் 1500 பெரிய புத்தகாலயங்களும், 4000 கிராமப் புத்தகாலயங்களும், 5000 நடமாடும் புத்தகாலயங்களுமிருக்கின்றன. இங்குள்ள கிராமப் புத்தகாலயங்கள் விசேஷமானவை. இவைகளில் கிராமவாசிகளின் உள்ளத்தைக் கவர்வதற்காக வேடிக்கைச் சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சினிமாக்களிலும், நாடகக் கொட்டகைகளிலும் கூட புத்தகாலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்குள்ள புத்தகாலயங்களுக்காக வாங்கப்படும் புத்தகங்களுக்கு தபால் செலவு மிகக் குறைவு. லெனின் கிராமத்திலுள்ள தேசிய புத்தகாலயமும், மாஸ்கோவிலுள்ள "லெனின் மெமோரியலும்" இத்தேசத்தில் மிகப் பிரபலமான புத்தகாலயங்களாகும். இங்கு வருஷந்தோறும் 36 ஆயிரம் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இத்தனை புத்தகங்கள் உலகிலுள்ள வேறெந்த புத்தகாலயத்திலும் அச்சிடப்படுவதில்லை.

ஐரோப்பாவிலுள்ள இதர தேசங்கள்

ஹாலண்டு தேசத்தில் லீடன் சர்வகலாசாலையிலுள்ள புத்தகாலயம் மிகப் பூர்வீகமானது. இது 1573-ல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது இத்தேசத்தில் 500க்கு அதிகமான புத்தகாலயங்களிருக்கின்றன.

பெல்ஜிய தேசத்தில் 2100 புத்தகாலயங்களிருக்கின்றன. இவைகளில் 30 லக்ஷம் புத்தகங்களிருக்கின்றன.

டென்மார்க்கு தேசத்தில் சர்வ கலாசாலையின் புத்தகாலயம் 1482-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1661-ல் அரசாங்க புத்தகாலயம் ஏற்படுத்தப்பட்டது. 1884-ல் புத்தகாலயங்களை அபிவிர்த்தி செய்வதில் கவனஞ்செலுத்தப்பட்டது. இங்கு 800 புத்தகாலயங்களுக்கு அரசாங்கத்தாரால் வருஷந்தோறும் 5 லக்ஷம் ரூபாய்கள் உதவிபுரியப்படுகின்றன. ஸ்தல வரியிலிருந்து வருஷந்தோறும் 19 லக்ஷம் ரூபாய் வசூல் செய்யப்படுகிறது.

நார்வே தேசத்தில் 1814-லிலிருந்து பொதுஜன உபயோகத்திற்காகப் புத்தகாலயங்களை அபிவிருத்தி செய்யும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்வீடன் தேசத்தில் 1905-ம் வருஷத்திலிருந்து புத்தகாலயங்களுக்கு அரசாங்கத்தினரால் உதவி கிடைக்கவாரம்பித்தது. தேசமெங்கும் புத்த காலயங்களேற்படுத்த வேண்டுமென்று சட்டமியற்றப்பட்டது. இதன்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் புத்த காலயங்களேற்படுத்துவதற்காக வருஷந்தோறும் 7500 ரூபாய்கள் சாங்ஷன் செய்யப்பட்டன. தற்

போது தேசமெங்கும் 8500-புத்தகாலயங்களிருக்கின்றன. அவைகளுக்கு அரசாங்கத்தினர் 15-லக்ஷம் ரூபாய்களை வருஷந்தோறும் செலவு செய்கின்றனர்.

ஜுக்கோஸ்லேவியா ஆஸ்டிரியாவிலிருந்து விடுபட்ட பிறகு இவ்விலாக்காவில் மிகவும் முன்னேற்ற மடைந்தது. 1919-ல் ஒரு சட்ட மியற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி ஜில்லாக்கள், பர்கானுக்கள், கிராமங்கள்தோறும் புத்த காலயங்களேற் படுத்தப்பட்டன. ஆகவே, 1820-ல் அத்தேசத்தில் 3400-புத்தகாலயங்களிருந்தன. 1926-ல் இவை 16200-ஆகப் பெருகிற்று. இங்குள்ள அரசாங்கத்தின் மொத்தச் செலவு 10-கோடி. இதில் 15-லக்ஷம் புத்த காலயங்களுக்காகச் செலவு செய்யப்படுகின்றன.

ஜப்பான்

1775-ல் இங்கு முதன் முதலாக புத்த காலய மேற்படுத்தப்பட்டது. மேனாட்டு நாகரீகம் பரவியதன் பலனாக புத்த காலயத்தின் பால் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. 1872-ல் அரசாங்க புத்தகாலய மேற்படுத்தப்பட்டது. அதே சமயத்தில் அரசாங்க உத்தரவுப்படி தேசத்தில் எவரும் படிக்காமலிருக்கக்கூடாது என்ற திட்டமேற்படுத்தப்பட்டது. 1881-லும், 1899-லும் புத்தகாலயங்களை அபிவிருத்தி செய்வது சம்மந்தமாகச் சட்ட மியற்றப்பட்டது. தற்போது ஜப்பானில் 4618-புத்தகாலயங்களிருக்கின்றன. டோக்கியோ சர்வகலாசாலையிலுள்ள புத்தகாலயத்தில் 8-லக்ஷம் புத்தகங்களிருந்தன. 1923-ல் ஏற்பட்ட பூகம்பத்தால் இது நாசமாகிவிட்டது. எனினும் அமெரிக்காவிலுள்ள பல தர்மவான்கள் இதற்கு உதவிபுரிந்து மறுபடியும் ஏற்படுத்திவிட்டனர். பிரிட்டிஷ் அரசாங்கமும் அதுபோழ்து இதற்கென 3-லக்ஷத்து 75-ஆயிரம் ரூபாய்களை நன்கொடையாக அளித்தது. இப்பொழுது இதில் 6-லக்ஷம் புத்தகங்களிருக்கின்றன. 1912-ல் புத்தகாலயங்களின் சங்க மேற்படுத்தப் பட்டது.

சீனு

இங்கு இற்றைக்கு 5-ஆயிரம் வருஷங்களுக்கு முன்பிலிருந்து புத்தகாலய மிருந்ததாகத் தெரிய வருகிறது. இப்பொழுதுள்ள புராதன புத்தகாலயம் கிறிஸ்து பிறப்பதற்கு 700 வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. முற்காலத்தில் மரப்பலகைகளில் நூல்கள் எழுதப்பட்டன. பின்னர் பட்டுத்துணியில் எழுதிச் சுற்றி வைக்கப்பட்டன. இத்தேசத்தில் வெகு காலத்திற்கு முன்பே காகிதம் கண்டு பிடிக்கப்பட்டதால் அப்பொழுதிருந்தே காகிதப் புத்தகங்கள் ஏற்பட்டன. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் இங்கு ஒரு அகராதி எழுதப்பட்டது. அது 11 ஆயிரம் வால்யூம்களில் தயாராயிற்று. அச்சுக்கூடத்தை முதல் முதலாகக் கண்டுபிடித்த பெருமையும் இத்தேசத்திற்கே இருக்கிறது. 1750-ம் வருஷத்திற்கு முன்புவரை இங்குள்ள புத்தகங்கள் சீன பாஷையிலேயே இயற்றப்பட்டன. 1911-ல் ஏற்பட்ட ராஜீயவிழிப்பின் காரணமாக புத்த காலயங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. புத்தகாலயங்களைப் பொதுஜன உபயோகத்திற்கு விடவேண்டுமென்று 1915-ல் சட்ட மியற்றப்பட்டது. பீக்கிங்கிலுள்ள பூர்வீக புத்தகாலயம் பொதுஜனங்களுக் குறியதாக மாற்றப்பட்டது. அதன் பிரமாண்டமான கட்டிடம் இப்பொழுதுதான் சமீபகாலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதில் 4 லக்ஷம் புத்தகங்களிருக்கின்றன. நான்கிங் அரசாங்கம் புத்த காலயங்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் விசேஷ சிரத்தை கொண்டுள்ளது. புத்த காலயங்களின் அபிவிருத்திக்காக புதிய சட்டங்களியற்றப்பட்டு அதன்படி அவைகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. புத்தகாலயங்களைத் திருத்தியமைப்பது சம்மந்தமாக 1925-ல் இங்கு ஒரு சங்கமேற்படுத்தப்பட்டது. அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்கள் இதில் நல்ல உதவி புரிகின்றனர். பூன் சர்வ கலாசாலையில் இதற்கென தனிவகுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்கா நாட்டு மிஸ்வுட் இதில் அதிகம் ஊழியம் செய்திருக்கின்றனள்.

அடுத்த இதழில் இந்தியாவிலுள்ள புத்த காலயங்களைப் பற்றிக் கூறப்படும்.

(தொடரும்.)

யுத்த தர்மம்

ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி "பாத்திஹே பைத்துல் முகத்தஸ்" அவர்கள் பெருந்தன்மை

பாலஸ்தீனத்தை யூத குடியேற்ற நாடாக ஆக்க வேண்டுமென பிரிட்டிஷ் மந்திரிகள் செய்த திட்டத்தால் இது போழ்துபாலஸ்தீனிலுள்ள அறபி முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் அங்கு யூதர்களால் அவஸ்தைப்படுவதும், அதனைத் தொடர்ந்து அங்கு அடிக்கடி கலகங்கள் தோன்றுவதும், இக்கலகங்களை அடக்குவதற்காக பிரிட்டனிலிருந்து பட்டாளங்கள் செல்வதும், அறபி அரசர்கள் இதில் தலையிட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பாலஸ்தீன அறபி முஸ்லிம்களுக்கு மிடையில் சமாதானம் செய்விப்பதும் இற்றை நாளில் பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவரும் விஷயமாகும். பாலஸ்தீனம் ஒரு காலத்தில் யூதர் நாடாக இருந்தது என்பது மெய். ஆனால், அவர்கள் அல்லாஹு தஆலாவிற்கு அடிக்கடி மாறு செய்து பெரும் பெரும் குற்றங்களைச் செய்ததால் இறைவனது கோபத்திற்காளாகித் தண்டிக்கப்பட்டனர். அவ்வாறு அடைந்த தண்டனைகளில் யூதருக்குத் தாய் நாடில்லாது போனதும் ஒன்று. எனவே, அல்லாஹு சுப்ஹானஹுவ தஆலா தனது வாக்குறுதிக் கேற்ப ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் பாலஸ்தீனத்தைமுஸ்லிம்கள் வசப்படுத்திக் கொடுத்ததுடன், அங்குள்ள ஜனங்களிடமும் மனமாற்றத்தை யுண்டாக்கி அவர்களிற் பெரும்பாலரை இஸ்லாம் மதத்தைத் தழுவும்படியும் செய்தான். அன்று முதல் இன்றுவரை அந்த நாடு முஸ்லிம் நாடாகவே இருந்து வருகிறது. முஸ்லிம்கள் தாம் அங்கு பெரும்பாலராக இருந்து வருகின்றனர்.

ஆனால், அங்குள்ள எருசலேம் என்ற நகரமும் அதனைச் சேர்ந்த இடங்களும் யூதருக்கு மட்டுமில்லாமல் முஸ்லிம்களாலும் கிறிஸ்துவர்களாலும் கொண்டாடப்பட்டுள்ள இடமாக இருப்பதால் யூதரைவிட்டு அந்த நாடு பிரிந்தால் அதனைத் தங்கள் வயப்படுத்திக் கொள்ளக் கிறிஸ்தவர்களும் ஆசைப்படுவ தியற்கையேயாகும். எனவே முஸ்லிம்களிடம் இறைவனாலளிக்கப்பட்ட பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிக்கொள்ள கிறிஸ்துவர்கள் அன்று முதல் பஹீரதப் பிரயத்தனம் செய்துகொண்டே இருக்கின்றனர். இது சம்பந்தமாகப் பன்முறை யுத்தங்கள் நிகழ்ந்தன. சில சமயங்களில் நூற்றுக் கணக்கான வருஷங்கள்கூட இந்த யுத்தங்கள் நீடித்தன என்று கூறுவது மிகையாகாது. இந்த யுத்தங்கள் எல்லாவற்றினும் மிகப் பெரியதும் கிறிஸ்துவர்களின் மனப்போக்கையே மாற்றியதுமான யுத்தம் "சிலுவையுத்த"மாகும். இறுதியாக முஸ்லிம்கள் ஜெயித்தனர். கிறிஸ்துவர்கள் தோல்வியுண்டனர். முஸ்லிம்களுக்கு அதுபோழ்து தலைமை வகித்துப் போர் புரிந்தவர் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி என்பவர். இவர் பைத்துல் முகத்தஸை கிறிஸ்துவர்களிடமிருந்து மறுபடியும் மீட்டு முஸ்லிம் ஆதிக்கத்தை ஏற்படுத்தியதால் இவருக்கு "பாத்திஹே பைத்துல் முகத்தஸ்" அதாவது பைத்துல் முகத்தஸை ஜெயித்தவர் என்ற கௌரவப்பட்டம் கிடைத்தது. இப்படி நடந்த யுத்தங்களில் சரித்திர சம்மந்தமான சம்பவம் ஒன்று இதனடியில் எடுத்தெழுதப்படுகிறது. இதிலிருந்து முற்காலத்து முஸ்லிம் பெரியார்களான வீரர்கள் பகைவர்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதும் யுத்த தர்மத்தை எவ்வாறு கடைப்பிடித்தொழுகினார்கள் என்பதும் விளங்கும். முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்தை வாள் வலிமையால் பரவச்செய்தனர் என்று கூறும் சிலருக்கு இச்சம்பவம் தக்கவாயாப்பாகும் என்பதில் சந்தேகமில்லை. அதுவருமாறு: (ப. ர்).

மூன்றாவது சிலுவையுத்தமும் இஸ்லாமிய யுத்தமும். கி. பி. 1189, ஹிஜ்ரி 585.

தப்ரிய்யா சண்டையில் கிறிஸ்துவ வீரர்களுக்குப் பெருந்தோல்வியை விளைவித்து பைத்துல் முகத்தஸை சுல்தான் ஸலாஹுதீன் அய்யூபி

(றழ்.) அவர்கள் கைப்பற்றிக்கொண்டதும் ஷாம் எகிப்து ஆகிய தேசங்களில் இஸ்லாத்தின் கொடி மறுபடியும் பறந்ததும் ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு கோபத்தையும் ஆத்திரத்தையும் கிளப்பிவிட்டன. ஆகவே, ஆசியாவின்மீது அவர்கள் மறுமுறையும் யுத்தஞ் செய்வதற்காக வீருகொண்டெழுந்தனர். பழி வாங்க வேண்டுமென்ற தணல் அவர்களுள்ளங்களில் கொழுந்துவிட்டெறிந்தது. ஐரோப்பாவெங்கும் படை திரட்டப்பட்டது. ஐரோப்பா முதலிய மேனுடுகளிலிருந்து வயோதிகர், வாலிபர் ஸ்திரீகளுள்பட லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய தேசங்களின் படைகளில் வந்து சேர்ந்தனர். ஜெர்மன் தளகர்த்தரான பர்பாரூஸ், பிரஞ்சு தளகர்த்தரான பிலிப் அந்தோணி, பிரிட்டிஷ் தளகர்த்தரான ரிக்காக்தூஸ் ஆகியவர்களின் தலைமையில்கிறிஸ்துவவீரர்கள் கி. பி. 1189-ம் வருஷம் ஆசியாவின்மீது படையெடுத்து வந்தனர். ஜெர்மன் தளகர்த்தர் வழியிலேயே மரித்தார். மற்றிரு தளகர்த்தர்களும் உக்காஉ என்ற கோட்டைக்கெதிரில் ஒன்றுகூடி அக்கோட்டையை மிக உக்கிரமாகத் தாக்கினர். இரண்டு வருஷகாலம்வரை அக்கோட்டையினண்டையில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் சண்டை நடந்து இறுதியாக பிரிட்டிஷ் சைனியங்கள் கோட்டையைக் கைப்பற்றிவிட்டன. இந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் சிப்பாயான ரூஜியா என்பவன் படுகாயமடைந்து காயப்பட்ட இதரர்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தான்.

இக்கோட்டையை விட்டு முஸ்லிகள் திரும்பச் செல்லும்போது தங்களுடன் அநேகம் கைதிகளையும் கொண்டு சென்றனர். அவர்களில் காயப்பட்டு ஆஸ்பத்திரியிற் சேர்ந்த ரூஜியாவின் சகோதரியான மர்யம் என்பவளும் ஒருத்தி. இவள் அரண்மனையில் மிகவும் சௌகரியமாக இருந்தாலும் கைதி என்ற முறையிலிருப்பதால் மனமுடைந்தவளாகவே இருந்தனள். ஒருநாள் பிரிட்டிஷ் தளகர்த்தர் ரூஜியாவின் வேலைக்காரனை முஸ்லிம் தளகர்த்தரான ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (றழ்) அவர்களிடம் தூது அனுப்பியிருந்தார். அது போழ்து அவன் தனது எஜமானனின் சகோதரியான மர்யமை அடையாளங் கண்டு, அவளுடன் சம்பாஷணை செய்து எவ்விதத்திலேனும் அவளுக்கு விடுதலை வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டான். ஆகவே, காயமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்த தனது எஜமானிடம் அவனது சகோதரி கைதியாக இருக்கிற துர்ப்பாக்கிய நிலைமையைப்பற்றிக் கூறினன். ரூஜியா தனது சகோதரியான மர்யம் மீது அதிக அன்புள்ளவனுகை இருந்ததால் அவளை எவ்விதத்திலும் விடுவிக்க வேண்டுமென்று முடிவு செய்து உடனே தனது தளகர்த்தரிடம் சென்று தமது சகோதரியை விடுவிக்கத் தமக்கு உதவிபுரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

அவனது சகோதரியை விடுவிக்கும் விஷயத்தில் தம்மாலான சகல உதவியையும் புரிவதாக தளகர்த்தர் வாக்களித்ததுடன் "சுல்த்தான் ஸலாஹுத்தீன் சாமான்ய மனிதரன்று. மிகவும் திறமையும் சாதுர்யமும் நல்லெண்ணமும் உன்னத லக்ஷியமும், நீதியும், இரக்கமுமுள்ள தர்மவான். முன்னர் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து முஸ்லிம்களிலும் வீரத்தனமும் பெருந்தன்மை நற்குண நல்லொழுக்கமும் உள்ள பலர் இருக்கிறார்கள் என்பது பட்டப்பகல்போல வெளியாகி இருக்கிறது. அவரது புதல்வர் ஸைபுத்தீனுக்கும் நமக்கும் யாபா என்ற இடத்தில் யுத்தம் நடந்தபோது எனது குதிரை அடிபட்டுச் செத்தபோது, அவர் தனது உதார குணத்தின் காரணமாக எனக்கு இரண்டு குதிரைகளை அனுப்பி யுத்தத்தை தொடர்ந்து நடத்துமாறு எனக்குச் சொல்லி அனுப்பினர். சுல்தான் அவர்கள் புதல்வரது வீர பராக்கிரமத்தையும் துணிச்சலையும் பார்த்து அவரைப் பாராட்டுவதற்கறிகுறியாக யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது நான் அவரது கழுத்தில் வாளாயுதத்தை மாலையாகப் போட்டேன். இவ் விபரம்யாவருக்கும் தெரிந்ததே. ஆகவே, யுத்த தர்மத்தை முற்றிலும் கடைப்பிடித்து நேர்மையாக யுத்தஞ் செய்யும் இவர்களுடனல்லவா யுத்தம் செய்யவேண்டும்? ஆகவே, மர்யமை விடுதலை செய்யவேண்டும் என்பதைக் குறித்து சுல்தான் அவர்களுக்கு யான் கடிதமெழுதுகிறேன். அவர் உமது நோக்கத்தை நிறைவேற்றுவார்" என்பதாக ஆறுதல் கூறினர்.

ரூஜியாவும், முஸ்லிம் வீரர்களது பெருந்தன்மையையும்நேர்மையையும்போர்க்களத்தில்பார்த்தவனுதலால் தனது தளகர்த்தரை நோக்கி "தலைவ! சுல்தான் அவர்களது பெருந்தன்மை

யையும் நற்குணத்தையும் உத்தேசித்து நானும் இதையே கருதினேன்; அவர் தமது நல்லெண்ணத்தால் என் சகோதரியை விடுவித்து விடுவார் என்றே நம்புகிறேன் என்று கூறினர். ஆகவே, பிரிட்டிஷ் தளகர்த்தாது நோக்கத்திற்கிணங்க ரூஜியா ஒரு கடிதத்தை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு சுல்தான் அவர்களிடம் சென்று கடிதத்தைக் கொடுத்தான். அக்கடிதத்தில்,

"அரசே! என்னுடைய இக்கடிதம் போவாகிவில் யுத்தம் செய்த ஒரு வீர சிப்பாயின் மூலமாகத் தங்களுக்கு அனுப்பப்படுகின்றது. அவரது சகோதரி மர்யம் என்பவள் தங்களிடம் கைதியாக இருக்கிருள். இவ்விருவரும் உடன் பிறந்த சகோதரனும் சகோதரியுமாவார்கள். இவ்விருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்க இஷ்டப்படவில்லை. ஆகவே, தாங்கள் தங்களது விசேஷித்த கருணையாலும், தங்கள் தலைவர் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் கூறி இருப்பதை (அதாவது சுயேச்சையாகப் பிறந்த ஒருவரைக் கைதிசெய்து தூரத்தில் வைத்திருப்பது எதற்காக? என்பதை)க் கவனித்தும் இக்கடிதம் கொண்டு வருகிற எனது தூதனிடம் அவனது சகோதரியை ஒப்புவிப்பீர்கள் என்று நம்புகிறேன். அதற்கு முடியாது என்றிருந்தால் இவனையும் கைதிசெய்து அவளுடன் வைத்துவிடுங்கள். ஏனெனில் இப்படிச் செய்வதால் இருவரும் ஓரிடத்தில் சேர்ந்திருக்க முடியும்."

என்று எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தை வாசித்ததும் சுல்தான் ஸலாஹுத்தீன் (றஹ்.) அவர்கள் புன்னகை புரிந்தார்கள். சுல்தான் அவர்கள் தம்மைப் பார்த்துப் புன்னகைசெய்ததைக் கண்டு அவ்வீரனுக்கும் நம்பிக்கை பிறந்தது. பிறகு, அவ்வீரனது வருகையைக் குறித்துத் தமது சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டு அவனது சகோதரியான மர்யம் என்பவளை அழைத்து அவனிடம் ஒப்புவித்ததுடன் ஒரு கடிதத்தையும் கொடுத்தார். அக் கடிதத்தை வாங்கிக்கொண்டு அவன் சுல்தான் ஸலாஹுத்தீன் (றஹ்.) அவர்களது கரங்களைப் பிடித்து முத்தமிட்டதுடன் ஆனந்தக் கண்ணீர் வடித்து அவ்விடம் விட்டகன்றனன். அக் கடிதத்தில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

"தளகர்த்த! தாங்களனுப்பிய தூதனை வீரனைக் கண்டு நான் சந்தோஷமடைந்தேன். யுத்த களத்தில் கைதிசெய்யப்பட்ட போர்வீரனைத் தவிர்த்து வேறு யாரையும் காரணமில்லாமல் சிறையில் வைக்க யான் சம்மதியேன். ஆகவே, ரூஜியாவிடம் அவனது சகோதரியை ஒப்புவித்து விட்டேன். இறுதியாகத் தங்களுக்கு அந்த இயேசு கிறிஸ்துவின் கட்டளையை (அதாவது ஆண்டகைக்கும் அடியார்களுக்கு முள்ள உரிமைகளை நிறைவேற்றுங்கள் என்ற கட்டளை)யை ஞாபகப்படுத்துவதுடன் தாங்கள் பறிமுதல் செய்திருக்கிற பூமிகளை அவைகளுக்குரியவர்களிடம் விட்டுவிடுவீர்கள் என்று நம்புகிறேன்."

குறிப்பு:—சோதரீர்! முஸ்லிம் தளகர்த்தர்களுடையவும் அரசர்களுடையவும் தன்மையை விளக்குவதற்காகவே சரித்திரப்பூர்வமான இச் சம்பவத்தைப்பற்றிய விபரம் இங்கெடுத்தெழுதப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களது உதார குணங்கள் தான் மற்றவர்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு இஸ்லாத்தின்பால் அவர்களைச் சேரும்படி தூண்டிற்று. முஸ்லிம்கள் விவாகமாகாத அந்நிய ஸ்திரீகளை தூராக்கிருதம் செய்தனர், தூக்கிச் சென்றனர், அவர்களது இத்தொழிலுக்குப் பயந்தே இந்தியாவில் ஹிந்துக்களிடம் பால்ய விவாகமும் கோஷா முறையுமேற்பட்டது என்று கூறித் திரியும் ஹிந்து சகோதரர்களும் அவர்களது கூற்றை மெய்யென நம்பும் மற்றவர்களும் இதனைப் படித்தேனும் தங்களபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்களாக.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

சென்ற வருஷத்திய பாக்கிகளையும், நடைபெறும் வருஷத்திற்குரிய சந்தாவையும் அனுப்பிவைக்குமாறு சந்தா நேயர்கட்கு கடிதமூலம் தெரிவித்திருக்கிறோம். இம்மாதக் கடைசிக்குள் அவர்கள் தங்கள் சந்தா பாக்கிகளை அனுப்பிவைக்காது போனல் அடுத்த ஆகஸ்டு மாத இதழ் அவர்கட்கு வி. பி. செய்து அனுப்பப்படுமென்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்.

209434
சென்னை-600 008

மௌலானா ரூமி (ரஹ்.)

(பேரியக்கிரூரம் கா. அ. அப்துல் ஹலீம் சாஹிப் வரைவது)

மௌலானா ரூமியவர்களின் திருநாமம் முஹம்மது என்பதாகும். பிதாவின் நாமம் ஷேக் பஹாவுத்தீன் என்பதாகும். இவர்கள் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி.) அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களாகும். ஹிஜ்ரி 604ல் 'பல்க்' என்ற நகரில் பிறந்தார்கள்.

மௌலானா அவர்கள் தங்கள் ஆரம்பக்கல்வியை தந்தையாரான ஷெய்கு பஹாவுத்தீன் அவர்களிடமும் ஸெய்யிது புர்ஹானுத்தீன் என்ற பெரியாரிடமும் பயின்று வந்தார்கள். இவர்கள் 18-வது வயதில் தங்கள் தந்தையுடன் 'கூநியா' என்ற ஊருக்கு வந்தார்கள். 25 வயதில் ஷாம் தேயத்தின் முக்கிய ஸ்தலங்களில் தங்கள் மீதப்படிப்பையும் பூர்த்தி செய்தார்கள். அக்காலத்தில் திமிஷக், ஹலப், போன்ற ஊர்களில் பெரும் பெரும் முஸ்லிம் கலாசாலைகள் இருந்தன. தாங்கள் அவ்விடங்களுக்குச் சென்று போதனா முறை பயிர்ச்சியில் பாண்டித்தியம் பெற்று, மாணவர்களுக்கு போதிக்கத் தொடங்கினார்கள். பிறகு அக்காலத்திலுள்ள மாபெரும் அறிவாளிகளில் மௌலானா அவர்களும் ஒருவராக விளங்கினார்கள்.

அதே காலத்தில் ஷம்சுத்தீன் முகம்மது என்ற பெரியாரொருவர் இருந்து வந்தார்கள். இவர்கள் 'தப்ரேஜ்' என்ற ஊரைச்சார்ந்தவர்களாதலால் அவர்களை "ஷம்ஸதப்ரேஜ்" என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். இவர்கள் பெரிய ஞானியாயும் மாபெரும் அறிஞராயும் இருந்தார்கள். இப்பெரியாருக்கு உலகத்தைச் சுற்றுப் பிரயாணம் செய்வதில் பிரியம் அதிகமாக இருந்தது. இவர்கள் பல ஊர்களுக்கும் சென்று பிரயாணிகள் தங்குமிடமாகிய சத்திரங்களில் தங்குவது வழக்கம். தங்கினால் ஒருவரிடமும் பேசாமல் அறையை மூடிக்கொண்டு தியானத்திலேயே இருந்து வருவார்கள். இவர்கள் நெசவுத் தொழில் செய்து ஜீவியம் நடத்தி வந்தார்கள். ஒரு தடவை ஆண்டவனிடம் "எ ஆண்டவா! என் நிலைமைக்கொற்ற தோழனொருவனை எனக்குக் காண்பித்துக்கொடு" என்று ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அப்பொழுது மறைவிலிருந்து "நீர் ரூம் தேசத்திற்குப் போகும்" என்ற அசரீரி சப்தம் கிடைத்தது. இதைச் செவியுற்ற ஷம்ஸதப்ரேஜ் அவர்களும் உடனே புறப்பட்டு ரூம் தேயத்தை நாடிச் சென்று 'கூநியா' என்ற நகரையடைந்து அவணுள்ள ஒரு மடத்தில், உத்தியோகஸ்தர்கள், தனவந்தர்களுடைய சௌகரியத்திற்கென அமைக்கப்பெற்றிருந்த ஒரு திண்ணையின்மேல் தங்கினார்கள். மௌலானா ரூமி அவர்களும் இப்பெரியாரின் வருகையைத் தெரிந்து சந்திக்கச் சென்றார்கள். மௌலானா அவர்கள் செல்லுகையில் ஜனங்கள் இவர்களின் முபாரக்கான கரங்களை முத்தமிட்டுச் சென்று கொண்டிருந்தனர். சத்திரத்தையடைந்து ஷம்ஸதப்ரேஜ் அவர்களை சந்தித்தார்கள். இச்சந்திப்பின் காரணமாக அப்பொழுது அவர்களுக்கிடை யேற்பட்ட சந்தோஷத்திற்கெல்லை இல்லை. ஷம்ஸதப்ரேஜ் 'இன்று நமது துஆ இறைவனிடம் ஒப்புக்கொள்ளப்பட்டது, நாம் தேடிவந்த மனிதர் இவர்களேதான்' என்றறிந்து தமது நோக்கம் பூர்த்தியானதற்காக அவர்களுக்கு எற்பட்ட ஆனந்தத்திற்கோரளவில்லை.

பின்னர் இருவரும் சந்தோஷமாக சேர்ந்திருக்கத் தொடங்கினர், ஷம்ஸதப்ரேஜ் உடைய சிநேகிதம் சிறிது காலத்தில் மௌலானா அவர்களின் நிலைமையை முற்றிலும் மாற்றிவிட்டது. தாங்கள் செய்து வந்த போதனாமுறை, உபன்யாசம் முதலியவைகளை ஒருங்கே திடீரென்று நிறுத்தி விட்டார்கள். அது முதல் ஒவ்வொரு நேரமும் ஷம்ஸதப்ரேஜின் சமூகத்திலேயே இருக்க வாரம்பித்தார்கள். ஒவ்வொரு நிமிஷங்களையும் இறைவனின் தியானத்திலேயே கழிப்பார்கள். இப்படியாக 2 வருஷங்கள் ஷம்ஸ தப்ரேஜின் நேயத்தால் நலம் பல பெற்றார்கள். அதற்குப்பின் எதோ ஒரு அர்ப்பனால் ஷம்ஸதப்ரேஜ் தாக்கப்பட்டு ஷஹீதாகினர். இவர்களின் பிரிவு மௌலானா அவர்களுக்கு பெரிய வருத்தத்தை யுண்டாக்கி விட்டது. தாங்கள் அதே வருத்தத்தில் பல நாட்கள் சுயநிலையற்றவராய் இருந்தார்கள்.

(தொடரும்)

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் அலீம் சாகிப் ஸித்தீக்கி அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக்கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென்ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூர தேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக்கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.	Rs.	A.
1. First Teachings of Islam	1	4
2. The Elementary Teachings of Islam	0	8
3. A New Muslim World in Making	0	8
4. A Shavian meets a Theologian	0	3
5. Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம் :— மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா பணத்தை வருட ஆரம்பத்தில் கொடுத்து, அருமமாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது உங்களெல்லோருக்கும் தெரியாத விஷயமன்று. இந்நிலைமையில் அநேக சந்தாதா கள், சென்ற வருடத்திய சந்தா ரூபாயை இதுவரை அனுப்பிக் கொடு காமலே அசட்டையாக இருந்து வருகின்றீர்கள். ஆகவே, அன்பர்கள் அன் போடு தங்கள் பாக்கிகளை தாமதமின்றி நேரில் நமக்காவது, அல்லது அவ் விடத்திய நமது ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர், (220 2-ம் குறுக்கு தெரு) அவர்கள் மூலமாவது அனுப்பிக் கொடுத்து உதவ புரிவீர்களென எதிர்பார்க்கிறோம். வி. பி. செய்வதுகொண்டு வீண்செலவு ஏற் படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள்:—

மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர்,
220, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப் அவர்கள்,
144, கைஸர் ஸ்டீட், கொழும்

ஜனாப் M. O. முகம்மது யூசுப் அவர்கள்,
45, குயின் ஸ்டீட், பிண

ஜனாப் S. முகம்மது அப்துல்காதிர் அவர்கள்,
No. 30, பஜார், முன்ன

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moul A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T. Madras.